

செயலாற்றுகை அறிக்கையும் கணக்கறிக்கையும் - 2021

மாவட்டச் செயலகம், எல்விட்டிகல மாவத்தை, நாராஹேன்பிட்ட, கொழும்பு 05

தொலைபேசி	:	**0112369134$ 0112369136**
தொலைபேசி	:	**0112369142**
இணையத்தளம்	:	**colombo.dist.gov.lk**
மின்னஞ்சல்	:	**ds@colombo.dist.gov.lk**

2021 செயலாற்றுகை அறிக்கை மற்றும் கணக்கறிக்கைக்கு மாவட்டச் செயலாளர் விடுக்கும் செய்தி



கொவிட்-19 அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட நிலைமைக்கு மத்தியிலும் 2021 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்தின் திட்டமிட்ட கருத்திட்டங்களை உரிய இலக்குகளை நோக்கி நகர்த்த முடிந்ததையிட்டு நான் உளப்பூரிப்படைகின்றேன். இதற்கு மாவட்டத்தின் அரசியல் தலைமை, பிரதேச செயலாளர்கள், பிரிவுத் தலைவர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் பணியாட்குழுவினர், மாவட்டத்தில் இயங்கிய ஏனைய அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், அமைப்புக்கள், தனிநபர்கள் எனக்களித்த ஒத்தாசையை இவ்வேளை நன்றியறிதலுடன் நினைவுகூர்கின்றேன்.

கொழும்பு மாவட்டத்திற்குரிய 13 பிரதேச செயலாளர் பிரிவுகளின் ஒருங்கிணைப்புடனும் எமது நெறிப்படுத்தலுடனும் கொழும்பு மாவட்டம் முழுவதிலும் வாழும் மக்களின் அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்களும் முன்னேற்றமும் இச்செயலாற்றுகை அறிக்கையில் அடங்கும். பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் போன்றே மேல்மாகாண மாகாணசபையின் நிதிஏற்பாட்டின் மூலம் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் கருத்திட்டங்களும் பற்றிய விபரம் இதிலடங்கும்.

கொவிட் அனர்த்த நிலைமைக்கு மத்தியில் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கும் அமுல்படுத்தப்பட்ட நிவாரண உதவித் திட்டங்கள், திவிநெகும (வாழ்வின் எழுச்சி) பொருளாதார அபிவிருத்தி மற்றும் பௌதிக வள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், வாழ்வாதார மற்றும் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், அனர்த்த நிவாரண மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள், போதையூட்டும் ஒடளத தடுப்பு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முதலிய எல்லாத் துறைகளிலும் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் அவற்றின் இலக்குகளும் நோக்கங்களும் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றமும் பற்றிய விபரம் இவ்வறிக்கையில் அடங்கும்.

மாவட்டச் செயலகத்தினதும் 13 பிரதேச செயலகங்களினதும் பல்வேறு அமைச்சுக்களையும் திணைக்களங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அலகுகளின் ஊடாக அமுல்படுத்தப்பட்ட பௌதிக அபிவிருத்தியும் மனித அபிவிருத்திச் செயன்முறைக்குரிய நிகழ்ச்சித்திட்டங்களும் பற்றிய தகவல்களைப் போன்றே, அரச சார்பற்ற நிறுவனங்களதும் தொண்டர் அமைப்புக்களதும் ஆதரவுடன் 2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்களும் இவ்வறிக்கையில் அடங்கும்.

மொத்தத்தில் இவ்வனைத்து பௌதிக, பொருளாதார மற்றும் மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் அவற்றின் முன்னேற்றமும் பற்றி பகுப்பாய்வுசெய்து பார்க்கும்போது, ஆண்டினுள் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நெருங்கியுள்ளமை தெளிவாகும். மேலும், சமூகத்தின் தேவைகள் குறித்தும் எதிர்நோக்க நேரிடக்கூடிய சவால்கள் குறித்தும் புரிந்துணர்வுடன் எதிர்கால இலக்குகளைக் கட்டியெழுப்பிக்கொண்டுள்ள விதமும் அவதானிக்கப்படுகிறது.

இதுவரையில் ஓய்ந்துவிடாத அனர்த்த நிலைமையொன்றுக்கு மத்தியிலும் கொழும்பு மாவட்டத்தின் பௌதிக மற்றும் மனிதவள அபிவிருத்தி நடவடிக்கைகளை வினைத்திறனுடனும் சிறந்த பயன்கூர் தன்மையுடனும் மேற்கொள்வதற்கு தலைமைத்துவம் வழங்கக் கிடைத்ததையிட்டு திருப்தியடைகின்றேன்.

வெகு சிறப்பான வெற்றிகளின் ஊடாக எதிர்கால இலக்குகளை சிறப்பாக அமைத்துக்கொள்வதற்கு பல்வேறு வழிகளிலும் தலைமைத்துவம் வழங்கிய மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் அனைவருக்கும் எனது கௌரவத்தைத் தெரிவிக்கின்றேன்.



பிரதீப் யசரத்ன
மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்
கொழும்பு நிருவாக மாவட்டம்

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 - நிறுவனம் பற்றிய விபரங்கள்/ அமுலாக்கல் பொழிப்பு ----------6

1.1 மாவட்டம் பற்றிய அறிமுகம் ----------6

1.1.1 மாவட்டத்தின் எல்லைகள் ----------8

1.1.2 மாவட்டத்தின் சனத்தொகையும் முக்கிய புள்ளிவிவரத் தகவல்களும் ----------8

1.2.1 நிறுவனத்தின் தொலைநோக்கு ----------9

1.2.2 நிறுவனத்தின் பணித்திட்டம் ----------9

1.2.3 நிறுவனத்தின் குறிக்கோள்கள் ----------9

1.3 முதன்மைப் பணிகள் ----------9

1.4 நிறுவனக் கட்டமைப்பு ----------11

1.5 மாவட்ட செயலகத்தின் கீழ் இயங்கும் பிரதேச செயலகங்கள் ---------- 12

1.5.1 கடுவலை பிரதேச செயலகம் ---------- 12

1.5.2 தஹிவளை பிரதேச செயலகம் ---------- 14

1.5.3 மொறட்டுவை பிரதேச செயலகம் ---------- 17

1.5.4 ஹோமாகமை பிரதேச செயலகம் ---------- 19

1.5.5 சீத்தாவக்க பிரதேச செயலகம் ---------- 21

1.5.7 திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகம் ---------- 26

1.5.8 பாதுக்கை பிரதேச செயலகம் ---------- 28

1.5.9 இரத்மலானை பிரதேச செயலகம் ---------- 30

1.5.10 கெஸ்பாவை பிரதேச செயலகம் ---------- 32

1.5.11 ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகம் ---------- 34

1.5.12 மஹரகம பிரதேச செயலகம் ---------- 36

அத்தியாயம் 02 -முன்னேற்றமும் தொலைநோக்கும் ---------- 40

2.1 தாபனப் பிரிவு ---------- 40

2.2 மாவட்ட திட்டமிடல் பிரிவு ---------- 42

2.3 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ---------- 46

2.4 மாவட்ட பொறியியல் பிரிவு ---------- 48

2.5 சமூர்த்தி பிரிவு ---------- 49

2.6 சிறுதொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவு ---------- 54

2.7 மாவட்ட அளவை அலகு தரம் மற்றும் சேவைப் பிரிவு ---------- 56

2.8 மாவட்ட விவசாயப் பிரிவு ---------- 57

2.9 மாவட்ட புள்ளிவிவரப் பிரிவு ---------- 59

2.10 ஆராய்ச்சி மற்றும் தொடர்பாடல் பிரிவு ---------- 59

2.11 மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் பிரிவு---------- 60
2.12 வெடிபொருள்கள் கட்டுப்பாட்டுப் பிரிவு ----------61
2.13 மாவட்ட உரப் பிரிவு ---------- 62
2.14 பௌத்த அலுவல்கள் பிரிவு ---------- 64
2.15 சமூக சேவைப் பிரிவு ---------- 65
2.16 கலாசாரப் பிரிவு ---------- 67
2.17 வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு ---------- 68
2.18 போதையூட்டும் ஔடதங்கள் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு/ வெளிநிலைச் சேவைகள் பிரிவு (தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை) 69
2.19 சுற்றாடல் பிரிவு---------- 70
2.20 மனித வள அபிவிருத்திப் பிரிவு---------- 73
2.21 மகளிர் அபிவிருத்திப் பிரிவு---------- 74
2.22 முன்சிறுவர் பராய அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புப் பிரிவு ---------- 75
2.23 இணக்கப்பாட்டு பயிற்சி அலுவலர் (நீதி அமைச்சு) ---------- 77
2.24 சிறுவர் உரிமைகள் மேம்பாட்டுப் பிரிவு ---------- 77
2.25 அரச சார்பற்ற அமைப்புக்கள் ஒருங்கிணைப்புப் பிரிவு---------- 79
2.26 தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவு ---------- 80
2.27 மாவட்ட ஆலோசனைப் பிரிவு ---------- 80
2.28 மாவட்ட ஊடகப் பிரிவு ----------81
2.29 சமூக பாதுகாப்புச் சபை ---------- 82
அத்தியாயம் 3 - 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான முழுதுமளாவிய நிதிச் செயலாற்றுகை ---------- 84
3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று ---------- 84
3.2 நிதி நிலைமைக் கூற்று ---------- 85
3.3 காசுப் பாய்ச்சல் கூற்று ---------- 86
3.4 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் ---------- 87
அத்தியாயம் 04 - செயலாற்றுகைக் குறிகாட்டிகள்---------- 133
அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (ளுனுபு) எய்துவதற்கான செயலாற்றுகை ----------149
அத்தியாயம் 06 - மனித வளம் பற்றிய பக்கப்பார்வை---------- 189
அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை---------- 197

அத்தியாயம் 01 - நிறுவனம் பற்றிய விபரங்கள்/ அமுலாக்கல் பொழிப்பு

1.1 மாவட்டம் பற்றிய அறிமுகம்

இலங்கையிலும் மேல்மாகாணத்திலும் மிகச் சிறிய மாவட்டமான கொழும்பு மாவட்டம், 699 கி.மீ. பரப்பளவைக் கொண்டது. இம்மாவட்டம் கடல் மட்டத்திலிருந்து 50 மீற்றரை விடம உயரமான பகுதிகள் இன்றியதாகவும் கடல் மட்டத்தை விடக் குறைந்த மட்டத்தில் நிலம் அமைந்திருப்பதும் சிறப்பம்சமாகும். இம்மாவட்டம் வடக்கே கம்பஹா மாவட்டத்தையும், தெற்கே களுத்துறை மாவட்டத்தையும், கிழக்கு இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களையும் மேற்கே சமுத்திரத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. களனி கங்கை கடலோடு சங்கமிக்கும் ஆற்றுக்கழிமுகமும் இங்கு அமைந்துள்ளது. தியவன்னா ஓயா, பொல்கொட வாவி என்பனவும் கொழும்பு மாவட்டத்திலேயே அமைந்துள்ளன.

இலங்கையில் சனநெரிசல்மிகு நகரமான கொழும்பு, பல்மத, பல்லின, பல்கலாசாரப் பண்புக்கூறுகளைக் கொண்டது. கங்காராம பெரஹரா ஊர்வலம், பெல்லன்வில பெரஹரா ஊர்வலம், கொழும்பு ஆடிவேல் ஊர்வலம் என்பன வருடாந்தம் இங்கு நடைபெறுகின்றது.

13 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் 557 கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கிய கொழும்பு மாவட்டம், பொருளாதார, சமூக, கலாசார, அரசியல் முதலிய அனைத்துத் துறைகளிலும் கேந்திரஸ்தானமாக விளங்குகிறது. பாராளுமன்றக் கட்டிடத்தொகுதி, ஜனாதிபதி செயலகம் - பழைய பாராளுமன்றம், ஜனாதிபதி மாளிகை, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி, அலரி மாளிகை அடங்கலான அரசாங்க உயர் நிறுவனங்கள், நிருவாக நிறுவனங்கள் போன்றே அனைத்து வங்கி அலுவல்களையும் முன்னெடுக்கும் முக்கிய நிறுவனங்களும் கொழும்பு பங்குச் சந்தை அடங்கலான முக்கிய பல பொருளாதார மையங்களும் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது.


நெடுஞ்சாலைகளும் புகையிரதப் பாதைகளும் கொழும்பு மாவட்டத்தை மையமாகக்கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. பிரதான துறைமுகம், வான் மற்றும் கப்பற் போக்குவரத்துக்கான கேந்திரஸ்தானங்களும் இங்கு அமையப்பெற்றுள்ளன. அரசாங்க மற்றும் தனியார் மருத்துவமனைகளும் பிரதான ஆயுர்வேத மருத்துவமனைகளும் இங்கு அமைந்துள்ளன. அதேபோல் 03 முக்கிய பல்கலைக்கழகங்களும் பல தொழில்நுட்பக் கல்லூரிகளும் 50% க்கு மேற்பட்ட முன்னணிப் பாடசாலைகளும் இம்மாவட்டத்தில் அமைந்திருப்பதைக் காணலாம்.

தெங்கு, இம்மாவட்டத்தின் முக்கிய பணப் பயிராகும். நெற்செய்கை, மரக்கறிச் செய்கை என்பவற்றுடன் தேயிலையும் இறப்பரும் இங்கு பயிரப்படுகிறது. கொழும்பு மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பு 92.99% தரைப் பகுதியைக் கொண்டதாகும். அதில் 32.47% பயிரிடப்பட்டுள்ள நிலங்களாகவும் 61.23% பயிரிடப்படாத நிலங்களாகவும் 6.29% வனப்பகுதிகளாகவும் காணப்படுகிறது. உள்ளக நீர்நிலைகள் 7.01% பரப்பளவில் அமைந்துள்ளன. இம்மாவட்டம் ஈர

வலய காலநிலை இயல்புகளைக் கொண்டதாக அமைந்திருப்பதுடன், ஆண்டு முழுவதும் சீதோஷ்ண இயல்பை காணக்கூடியதாகவும் உள்ளது.

இம்மாவட்டம், ஈர வலய காலனிலைக்குரிய இயல்புகளைக் கொண்டிருப்பதுடன், ஆண்டு முழுவதும் சீதோஷ்ண இயல்பைக் காணக்கூடியதாக உள்ளது. மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்களில் 32.1^0C ஆகக்கூடிய வெப்பநிலையைக் கொண்டிருப்பதுடன் 25^0C ஆகக்குறைந்த வெப்பநிலையைக் கொண்டிருக்கும். பருவப்பெயர்ச்சிக் காலத்தில் அதிக மழைவீழ்ச்சி கிடைக்கும் இம்மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கு நிலைமைகளும் ஏற்படுகின்றன.

வரலாற்றில் கொழும்புத்துறை (‘கொலொம்தொட்ட’) காரணமாக புராதன மன்னர் காலந்தொட்டு பிரசித்தம் பெற்று விளங்கிய மதவழிபாட்டுத்தலங்களும் பொது மயானங்களும் பழம்பெரும் கட்டிடங்களும் கொழும்பு மாவட்டத்தில் பெருவாரியாகக் காணக் கிடைப்பதால், இம்மாவட்டம் வரலாற்றிலும் முக்கிய இடம் வகிக்கிறது. அதேபோல் முக்கிய நாடக அரங்குகளுடன் பல்வேறு கலாசார கலைப்படைப்புகள் காரணமாக இரகசிகர் மனங்களைக் கொள்ளைகொண்ட ஓரிடமாகவும் விளங்குகிறது. விளையாட்டு மைதானங்கள், களியாட்டப் பூங்காக்கள், மிருகக் காட்சிச்சாலைகள் உள்ளிட்ட முக்கிய இடங்கள், இம்மாவட்ட மக்களின் விளையாட்டுத் திறமைகளுக்கும் பொழுதுபோக்கிற்கும் பங்களிப்புச் செய்கின்றன.



1.1.1 மாவட்டத்தின் எல்லைகள்

மேல்மாகாணத்தின் பிரதான மாவட்டமொன்றான கொழும்பு மாவட்டம், 699 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்டதாகும். வடக்கே களனி கங்கையும் தெற்கே பொல்கொட கங்கையும் மேற்கே கடற்பரப்பும் கிழக்கே சப்ரகமுவ மாகாண எல்லைகளும் இம்மாவட்டத்தின் எல்லைகளாக அமைந்துள்ளன.

1.1.2 மாவட்டத்தின் சனத்தொகையும் முக்கிய புள்ளிவிவரத் தகவல்களும்

கொழும்பு மாவட்டம், 15 தேர்தல் மாவட்டங்களையும் 13 உள்ளூர் அதிகார சபைகளையும் கொண்டதாகும்.

தேர்தல் மாவட்டம்	சனத்தொகை
கொழும்பு	341,431
கொலொன்னாவை	202,464
கடுவலை	266,211
ஹோமாகமை	251,280
சீத்தாவக்க	120,205
பாதுக்கை	68,936
மஹரகமை	207,466
கோட்டே	113,993
திம்பிரிகஸ்யாய	251,441
தெஹிவளை	93,963
இரத்மலானை	100,875
மொறட்டுவை	177,741
கெஸ்பாவை	259,019
மொத்தம்	**2,455,025**

உள்ளூர் அதிகார சபைகள்

மாநகர சபைகள்	நகர சபைகள்	பிரதேச சபைகள்
கொழும்பு	கொலொன்னாவை	கொட்டிகாவத்தை முல்லேரியா
தெஹிவளை-கல்கிசை	சீத்தாவக்கபுர	சீத்தாவக்க
மொறட்டுவை	மஹரகமை	ஹோமாகமை
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே	கெஸ்பாவை	
கடுவலை		

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கும் பணித்திட்டமும் குறிக்கோள்களும்

1.2.1 நிறுவனத்தின் தொலைநோக்கு

நல்லாட்சியிலும் நீடித்திருக்கும் அபிவிருத்தியிலும் முன்னணி வகிக்கும் மாவட்டம்

1.2.2 நிறுவனத்தின் பணித்திட்டம்

ஆக்கபூர்வமாகவும் நெகிழ்வுப்பாங்குடனும் தற்போதுள்ள வளங்களை முகாமைசெய்துகொண்டு மக்கள் வாழ்வை வலுவூட்டுவதற்கு மாவட்டத்தை வழிநடாத்துதல்.

1.2.3 நிறுவனத்தின் குறிக்கோள்கள்


- வினைத்திறனும் விளைதிறனும் கொண்ட மாவட்ட முறையொன்றைப் பேணுதல்.
- மக்களின் திருப்திநிலை அதிகரிக்கின்ற விதத்தில் அரச துறையினால் வினைத்திறனான சேவை வழங்கப்படுவதை உறுதிசெய்தல்.
- முக்கிய உளப்பாங்குகள், பொறுப்புடைமை, மதிநுட்பம்வாய்ந்த வளப் பாவனை, பக்கச்சார்பின்மை, வெளிப்படைத்தன்மை முதலான உள்ளார்ந்த முறைமைகளை அரச சேவையில் நிறுவுதல்.
- அரச அலுவலர்களின் ஓய்வூதியக் கொள்கைகளுக்கு அமைவாக நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- மாவட்டத்தினுள் இயங்கும் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றம் அதிகாரசபைகளினால் அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் ஒழுங்குபடுத்தல், நிதி மற்றும் நிதிசாராத வளங்களை ஈடுபடுத்தல், கண்காணிப்பு நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பாளராக செயலாற்றி மாவட்ட மக்களின் நலனோம்புகையையும் அபிவிருத்தியையும் மேம்படுத்தல்.

1.3 முதன்மைப் பணிகள்

- மாவட்ட பாதுகாப்புக் குழுவின் முக்கிஸ்தராகச் செயலாற்றி மாவட்ட அதிகார இடப்பரப்பினுள் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குச் செயலாற்றுதல்.
- மாவட்டத்தில் கலாசார, சமய மற்றும் வேறு காலப் பொருத்தமுடைய அரச உற்சவங்களை ஒழுங்குசெய்வதில் முக்கியஸ்தராகச் செயலாற்றுதல்.
- பன்முகப்படுத்திய வரவுசெலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினதும், மாவட்ட அபிவிருத்திக் குழுவினதும் செயலாளராக செயலாற்றி மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளை ஒழுங்குசெய்தலும் அமுல்படுத்தலும் மேற்பார்வைசெய்தலும்.
- மாவட்டத்தின் 13 பிரதேச செயலாளர்களுடன் பிரதேச நிருவாக அலுவல்களை நெறிப்படுத்தும் பிரதானியாக செயலாற்றுதலும் மேற்பார்வைசெய்தலும்.
- நிருவாக அலுவல்களின்போது உற்பத்தித்திறனையும் பண்புத்தரத்தையும் மேம்படுத்துவதற்கு நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஈடுபடுத்தலும் அதன்பால் பணியாட்குழுவை ஊக்ககப்படுத்தலும்.

- மாவட்ட அதிகார இடப்பரப்பினுள் எல்லா அமைச்சுக்களதும் திணைக்களங்களதும் பிரதித் தலைவராக செயலாற்றி அந்தந்த நிறுவனங்களின் நோக்கங்களும் குறிக்கோள்களும் பணிகளும் ஈடேறக்கூடிய விதத்தில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- எல்லாத் தேர்தல் நடவடிக்கைகளின்போதும் அதாவது ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல்கள், உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்களின்போது தேர்தல்கள் ஆணையாளரின் பிரதிநிதி என்ற வகையில் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலராகச் செயலாற்றி பக்கச்சார்பற்ற, நீதியான தேர்தல்களை நடாத்துவதற்கு செயலாற்றுதல்.
- மாவட்ட செயலகத்தினதும் பிரதேச செயலகங்களதும் பணியாட்குழு அலுவலர்களின் உந்துகை மற்றும் இயலாற்றல் விருத்திக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் என்பவற்றுடன் தொடர்புடைய வருமானக் கணக்கீட்டு அலுவலர்கள் என்ற வகையில் அவர்களின் வருமானங்களைத் திரட்டுதல், கணக்கீட்டில் உட்படுத்துதல், திறைசேரிக்கு அனுப்பீடுசெய்தல் என்பவற்றுடன் தொடர்புடைய வருமான கணக்கீட்டு அலுவலர்களை அறிவுறுத்துதல்.
- கடற்கோள், வறட்சி, வெள்ளப்பெருக்கு, சூறாவளி, தொற்றுநோய் நிலைமைகள் போன்ற பாரிய அனர்த்தங்களின்போது அரசாங்கத்தின் பிரதிநிதியாகச் செயலாற்றி அனர்த்த முகாமைத்துவ அலுவல்களை ஒழுங்குபடுத்தல், அமுல்படுத்தல், மேற்பார்வைசெய்தல், கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பவற்றின் ஊடாக மக்கள் வாழ்வை வழமைநிலைக்குக் கொணர்தலும் இயல்பு வாழ்வை உறுதிசெய்தலும்.


1.4 நிறுவனக் கட்டமைப்பு



1.5 மாவட்ட செயலகத்தின் கீழ் இயங்கும் பிரதேச செயலகங்கள்

1.5.1 கடுவலை பிரதேச செயலகம்

1. அறிமுகம்



கொழும்பு மாவட்டத்திலுள்ள 13 பிரதேச செயலகங்களில் மூன்றாவது பாரியது என்ற இடத்தை வகிக்கும் கடுவலை தொகுதியின் மொத்த நிலப்பரப்பு, 91.76 சதுர கி.மீ. ஆகும். அங்குள்ள 57 கிராம அலுவலர் பிரிவுகளின் கீழ் 16 முக்கிய கிராமங்கள் உள்ளன. மொத்த சனத்தொகை 281,282 ஆக இருப்பதுடன், 75,245 மொத்த குடும்பங்களையும் 70,389 மொத்த வீடுகளையும் கடுவலை பிரதேச செயலாளர் பிரிவு உள்ளடக்கியுள்ளது.

2. முதன்மைப் பணிகள்



அரச கொள்கைகளின் வெளிப்படைத்தன்மையைப் போசித்து சேவைகளை வழங்குதல், மக்களின் பங்கேற்புடன் பிரதேசத்தின் மனித மற்றும் பௌதிக வள முகாமைத்துவமும் ஒருங்கிணைப்பும் ஊடாக தொகுதிவாழ் மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்புதல்.

3. பிரதேச செயலகம் அடைந்துள்ள வெற்றிகள்



2021 ஆம் ஆண்டில் கொவிட்-19 உலக பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியில் கடுவலை தொகுதியில் கொவிட் தடுப்புச் செயலணியினால் மக்கள் வாழ்வை தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். அதேபோல் அலுவலகத்தின் பொதுவான சேவை நடவடிக்கைகளையும் தொகுதிக்கு ஏற்புடைய அபிவிருத்திப் பணிகளையும் ஆகக்குறைந்த பணியாட்குழுவொன்றின் கீழ் வினைத்திறனாக நிறைவேற்றுதல். கொவிட்-19 பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியில் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக 2021 ஆம் ஆண்டில் பத்தரமுல்லை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் "சுகாதார வீரர்கள்" (Health Heroes) என்ற விருதைப் பெற்றுக்கொண்டமை.

4. எதிர்நோக்கிய சவால்கள்



கொவிட்-19 பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியில் பாதிப்பை ஏற்படுத்திய வெள்ளப்பெருக்கு நிலைமைக்கு மத்தியில் இடம்பெயர்ந்த 2,824 குடும்பங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்கி, சுகாதாரப் பாதுகாப்பு முறைகளை அனுசரித்து ஆகக் குறைந்த பணியாட்குழுவினரை ஈடுபடுத்தி பொது மக்களுக்கு சேவைகளை வழங்கி தொகுதியின் அனைத்து அபிவிருத்திப் பணிகளையும் ஒருங்கிணைக்க நேரிட்டமை.

5. வருடாந்த செயல் திட்டத்தின் முன்னேற்றம்



தாபனப் பிரிவு, திட்டமிடல் பிரிவு, கணக்குப் பிரிவு, ஓய்வூதியப் பிரிவு, பதிவாளர் பிரிவு, காணிப் பிரிவு, வெளிக்கள அலுவலர் பிரிவு, சமூர்த்தி பிரிவு ஆகிய பிரிவுகளினால் 2021 ஆம் ஆண்டின் வருடாந்த செயல் திட்டத்தில் நோக்காகக்கொள்ளப்பட்ட 100% இலக்குகள் அடையப் பெற்றுள்ளன.

6. எதிர்கால இலக்குகள்



2022 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் முக்கிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமான 'கம சமக பிலிசந்தர' ('கிராமத்துடனான உரையாடல்') என்ற கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அடங்கலாக அனைத்து அபிவிருத்திப் பணிகளையும் பொதுமக்களுக்கு நாளாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய அனைத்துச் சேவைகளையும் மிகவும் திறம்படவும் வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் மேற்கொள்வதன் ஊடாக குறித்த இலக்குகளை எய்துதல்.

1.5.2 தஹிவளை பிரதேச செயலகம்

1. அறிமுகம்



கொழும்பு நிருவாக மாவட்டத்தில் 08 சதுர கி.மீ. நிலப்பரப்பில் அமைந்துள்ள தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவில் வாழும் 100,000 க்கும் அதிகமான பல்வேறு இனப் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் அனைவரதும் தேவைகளை நிறைவேற்றி மக்கள் வாழ்வைக் கட்டியெழுப்புவதற்காக 'சுபீட்சத்தின் நோக்கை' அடியொட்டி, அரச கொள்கைகளுக்கு இசைவாக சமூக நல்லிணக்கத்துடன் வழங்கப்படும் நன்மைகளை பொதுமக்களுக்கு வழங்கி, வினைத்திறனான, பயன்கூர் சேவையொன்றை நெருங்கி சேவையொன்றை வழங்கி, பொதுமக்களின் முக்கிய தேவைகளை அடையாளம் கண்டு அவற்றை உரிய அமைச்சுக்கும், திணைக்களத்திற்கும் அனுப்பிவைப்பதுடன் பிரதேசத்தின் அனைத்து அபிவிருத்திப் பணிகளையும் அமுல்படுத்துவதன் ஊடாக மக்கள் நேயமுள்ள சேவையொன்றை வழங்கும் ஒரு நிறுவனமாகும்.

2. முதன்மைப் பணிகள்



சிறுவர், இளைஞர், வயதுவந்தோர், மகளிர், விசேட தேவையுடையோர், அரச ஊழியர்கள், ஓய்வூதியர்கள் போன்றே கலைஞர்கள் முதலான அனைத்துக் குழுக்களையும் சேர்ந்த பொதுமக்களின் பொருளாதார, சமூக அபிவிருத்திக்குரிய நலனோம்புகைத் தேவைகள், உட்கட்டமைப்பு வசதிகள், பொருளாதார நடவடிக்கைகள், வாழ்வாதார நடவடிக்கைகள், சமூக சேவை நடவடிக்கைகள், அனர்த்த நடவடிக்கைகள், தொழில்நுட்ப வசதிகள் முதலான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ளல்.

- மேற்குறிப்பிட்ட துறைகள் சார்ந்த பிரச்சினைகளையும் சவால்களையும் அடையாளம் காணலும் அவற்றுக்குத் தீர்வு காணலும்.
- மேற்குறிப்பிட்ட துறைகள் சார்ந்த சேவைகளை வழங்குவதன் மூலம் அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் அமைப்புக்களுக்கும் இடையில் சிறந்த ஒருங்கிணைப்பைப் பேணல்.
- பிரதேச மக்களுக்கும் இலங்கைவாழ் அனைத்து மக்களுக்கும் தேவைப்படும் பிறப்பு, விவாக, இறப்பு சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை விநியோகித்தலும் பல்வேறு அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தலும்.

3. பிரதேச செயலகம் அடைந்துள்ள வெற்றிகள்



- கொரோனா பெருந்தொற்று காலப்பகுதியிலும்கூட எதிர்பார்ப்பாக இருந்த உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்யும் உத்தேச கருத்திட்டங்கள் சார்பாக பல்வேறு அமைச்சுக்களும் திணைக்களங்களும் ஊடாக கிடைக்கப்பெற்ற அனைத்து நிதிகளையும் ஈடுபடுத்தி, திட்டமிட்டப்பட்ட அனைத்துக் கருத்திட்டங்களையும் மிகவும் பயன்கூர் விதத்தில் நிறைவுசெய்ய முடிந்தமை.
- நாடு முடக்கப்பட்ட, நடமாட்டத்தை மட்டுப்படுத்திய காலப்பகுதிகளில் கிராம அலுவலர்களின் ஒத்துழைப்புடன் பொதுமக்களுக்குத் தேவைப்படும் சேவைகளும் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளும் தினமும் 24 மணி நேரமும் இயங்கும் நடவடிக்கைக் கூட கருத்துருவின் ஊடாக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டதுடன் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஊடாக ஒன்றிணைந்து பிரதேச மக்களுக்கான தடுப்பூசியேற்றல் நிகழ்ச்சித்திட்டம் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.
- கொரோனா பெருந்தொற்று காலப்பகுதியிலும்கூட கிராம அலுவலர் அலுவலங்களுக்காக நடாத்தப்படும் அலுவலக முகாமைத்துவப் போட்டிகளை நடாத்துவதுடன், பிரதேசத்திலுள்ள கலைஞர்களதும் அலுவலகத்தின் அலுவலர்களதும் பங்கேற்புடன் நடாத்தப்படும் கலை இலக்கியப் பெருவிழாவை சுகாதார வழிகாட்டுநெறிகளுக்கமைய மிகவும் வெற்றிகரமாக நடாத்த முடிந்தது.
- காலி வீதியில் நாளாந்தம் எதிர்நோக்க நேரிட்டுள்ள போக்குவரத்துச் சிரமங்களைக் குறைக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட கடலோரப் பாதையின் கட்டம் II அபிவிருத்திப் பணிகளை கொரோனா பெருந்தொற்று காலப்பகுதியில் பூர்த்திசெய்ய முடிந்தமை.
- பிரதேச செயலகத்தை இயக்கிச்செல்வதற்குப் பொருத்தமான ஓரிடத்தைப் பெற்றுக்கொண்டு, அலுவலகத்தை அமைப்பதற்குரிய திட்டங்களை வகுத்து, அதற்குரிய அமைச்சரவைப் பத்திரத்தை உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஊடாக அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல் வரையான பணிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளமை.

4. எதிர்நோக்கிய சவால்கள்



1) குறைந்ததொரு காலப்பகுதியில் வினைத்திறன்மிகு துரித சேவையை வழங்கும் நோக்குடன் தகவல் தொழில்நுட்பத்தை ஈடுபடுத்தி இணைய வசதியை உபயோகித்து துரித செயற்பாடற்றக் கிடந்த பல்வேறு தொழில்நுட்பப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டமை.
2) மூன்று கிலோ மீற்றர்களுக்குக் குறையாத கடலோரப் பகுதியைக் கொண்டிருந்தபோதும் அது சார்ந்த கடற்றொழில் நடவடிக்கைகள் சிறப்பான முறையில் அபிவிருத்தியடையாமை.
3) அலுவலக அலுவலர்களில் கணிசமானவர்கள் தொகுதிக்கு வெளியிலும் மாவட்டத்திற்கு வெளியிலும் தங்கியிருக்கும் அலுவலர்களாக இருப்பதன் காரணமாக அத்தியாவசிய வேளைகளில்

ஆகக் குறைந்த மனித வளத்தை ஈடுபடுத்தி அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள நேரிடுதல்.

4) தெஹிவளை சந்தியில் காணக்கூடிய அதிக வாகன நெரிசல் காரணமாக வேலைத்தளங்களுக்குச் செல்லும்போது அலுவலர்களுக்கும் பொதுமக்களுக்கும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிடுதல்.
5) நாளாந்தம் பல்வேறு சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் பதிவுகாரர் பிரிவு, அனுமதிப்பத்திரங்கள் பிரிவு, முன்னரங்கு மற்றும் ஓய்வூதியப் பிரிவு என்பவற்றுக்கு பெருந்தொகையான மக்கள் வருகை தருவதாலும் அதிகளவில் அரச சேவைகளை வழங்குவதற்கு பல்நோக்கு உதவியாளர்களும் பட்டதாரி புதிய அலுவலர்களும் இணைத்துக்கொள்ளப்படும்போது அலுவலக இடவசதியின்மை காரணமாக பிரச்சினைகள் எழுகின்றமை.

5. வருடாந்த செயல் திட்டத்தின் முன்னேற்றம்

- பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் பொதுமக்களுக்கு பயனுறுதிவாய்ந்த ஒரு சேவையை வழங்கி வருடாந்த செயல் திட்டத்திற்கு அமைய அதன் இலக்கிட்ட பணிகளை உயர்ந்தபட்சம் பூர்த்திசெய்து 90% முன்னேற்றமொன்றை அடைந்துகொள்ள முடிந்தமை.

6. எதிர்கால இலக்குகள்



- "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்திற்கமைய கிராமப்புற மக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்து, பொருளாதார ரீதியாக பின்னடைவைச் சந்தித்துள்ள மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக பல்வேறு கட்சி - எதிர்க்கட்சி மக்கள் பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடன் பல்வேறு கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் அமுல்படுத்துதல்.
- கடலோரப் பாதையின் கட்டம் III புகையிரத நிலைய வீதியிலிருந்து ஓபன் பிளேஸ் வரையான பயணப் பாதைத் துண்டத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகளைத் திட்டமிடுதல்.
- கொஹுவலையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் புதிய மேம்பாலத்திற்கான காணி கையகப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் முதற்கட்டத்திற்கான அனைத்து இழப்பீட்டுத் தொகைகளையும் செலுத்தி முடித்தல்.
- பிரதேச செயலகத்திற்கு திட்டமிடப்பட்ட புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குரிய பணிகளுக்காக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உதவியைப் பெற்றுக்கொள்ளல்.
- அரச துறை அலுவலகங்களின் உற்பத்தித்திறனை மதிப்பீடுசெய்யும் நோக்குடன் அமுல்படுத்தப்படும் உற்பத்தித்திறன் போட்டியில் பங்குபற்றி எமது சேவைகளின் பண்புத்தரத்தை உறுதிப்படுத்தல்.

1.5.3 மொறட்டுவை பிரதேச செயலகம்

1. அறிமுகம்



'முன்னோடி நகரம்' என்றழைக்கப்படும் மொறட்டுவை நகரம், கொழும்பு மாவட்டத்தின் தெற்கு எல்லையாக அமைந்துள்ளது. மொறட்டுவை பிரதேச செயலாளர் பிரிவு 23.4 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டதாகும். வடக்கே இரத்மலானை பிரதேச செயலாளர் பிரிவும் தெற்கேயும் கிழக்கேயும் பொல்கொட வாவியும் மேற்கே இந்து சமுத்திரமும் அதன் எல்லைகளாக அமைந்துள்ளன. மூன்று பக்கங்களும் இயற்கை எல்லைகளால் சூழப்பட்டிருப்பது இதன் ஒரு சிறப்பம்சமாகும். நகர்ப்புற சூழலாக விளங்கும் இங்கு சுமார் 180,000 சனத்தொகை வசிக்கின்றது. 95% சதவீதமான சிங்களவர்களும் 3% சதவீதமான தமிழர்களும் 2% சதவீதமான முஸ்லிம் மற்றும் வேறு இனங்களைச் சேர்ந்தவர்களும் சமய அடிப்படையில் நோக்கின் 68% சதவீதமான பௌத்தர்களும் 19% சதவீதமான கத்தோலிக்கர்களும் 8% சதவீதமான கிறிஸ்தவர்களும் 2% சதவீதமான இஸ்லாமியர்களும் 2% சதவீதமான இந்துக்களும் 1% சதவீதமான ஏனையவர்களும் என்றவாறு அமைந்துள்ளது.

2. முதன்மைப் பணிகள்






இப்பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் நாளாந்தம் தேவைப்படும் அரச சேவைகளை வழங்குவதற்கும் தொகுதியின் அபிவிருத்திப் பணிகள், கல்வி, சமூக, சமய, கலாசார ரீதியான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல், அனர்த்த முகாமைத்துவம், நிவாரண சேவைகளை வழங்குதல், அரச கொள்கைகளை அமுல்படுத்துதல் என்பவற்றுக்குத் தேவைப்படும் ஒத்துழைப்பையும் வசதிகளையும் வழங்குதல்.

3. பிரதேச செயலகம் அடைந்துள்ள வெற்றிகள்



பிரதேச செயலகங்களுக்கு இடையிலான உற்பத்தித் திறன் விருதுகள்:

2012/13 - விசேட மதிப்பீட்டுச் சான்றிதழ்
2014 - மூன்றாம் இடம்
2015 - மூன்றாம் இடம்

4. எதிர்நோக்கிய சவால்கள்





அலுவலகத்தின் உட்புற, வெளிப்புற இடவசதி போதாமை, வாகனங்களை நிறுத்திவைப்பதற்கான வசதி போதாமை, அலுவலக நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் கணினிகள், அச்சீட்டுப் பொறிகள், நிழற்படப் பிரதியெடுக்கும் இயந்திரங்கள் அடங்கலான அலுவலக உபகரணங்கள் போதியளவில் இராமை, தற்போது பயன்படுத்தப்படும் அத்தகைய உபகரணங்களை அடிக்கடி திருத்தப்

பணிக்கு அனுப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதன் காரணமாக அலுவலகப் பணிகளை திறம்பட நிறைவேற்றுவதில் இடையூறுகள் ஏற்படுதல். கனிட்ட பணியாட்குழுவினர் போதாமை, அலுவலர்களின் பயிற்சி வாய்ப்புகள் போதியதாக இராமை, கிராம அலுவலர் பிரிவுகளில் பணிபுரியும் கிராம அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்களுக்கு தற்போதுள்ள அலுவலக வசதிகள் வரையறுக்கப்பட்டதாக இருத்தல்.



5. வருடாந்த செயல் திட்டத்தின் முன்னேற்றம் - 76%

6. எதிர்கால இலக்குகள்

பணியாட்குழு மற்றும் தற்போதுள்ள வளங்களை அதிசிறந்த மட்டத்தில் முகாமைசெய்து குறித்த வெளித்திறத்தவர்களின் ஒருங்கிணைப்புடன் பிரதேச மக்களுக்கு வினைத்திறனான பயனுறுதிவாய்ந்த அரச சேவைகளை வழங்குதல்.



1.5.4 ஹோமாகமை பிரதேச செயலகம்

1. அறிமுகம்

பிரதேச செயலாளர் பிரிவு



ஏறக்குறைய 1½ ஏக்கர் விஸ்தீரணமான அலுவலக வளவினுள் இரண்டு மாடி அலுவலகக் கட்டிடமும் உப கட்டிடங்கள் சிலவும் இங்கு அமைந்துள்ளன. புதிதாக நிர்மாணிக்கப்படும் நான்கு மாடி புதிய அலுவலக வளவின் வேலைகள் இவ்வாண்டில் பூர்த்தியடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பன்னிரண்டாயிரத்திற்கும் அதிகமான ஓய்வூதியர்களின் அலுவல்களும் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்திக் கருத்திட்டங்களும் இங்கு அமுல்படுத்தப்படுவதன் காரணமாக இப்பிரதேச செயலகம் பெருமளவான கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

2. முதன்மைப் பணிகள்



மாதாந்த சம்பள அறிக்கைகளையும் ஓய்வூதிய அறிக்கைகளையும் தயாரித்தல், வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல், அரச காணிகள் மற்றும் காணிகள் கையகப்படுத்தல் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அனைத்து பிறப்பு, விவாக, இறப்பு சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள், வியாபாரப் பெயர்களைப் பதிவுசெய்தல், அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல், மண் போக்குவரவு (வர்த்தகம் அல்லாத), மதுவரி அனுமதிப்பத்திரங்கள், அடகு அனுமதிப்பத்திரங்கள், விலங்குகள் போக்குவரவு அனுமதிப்பத்திரங்கள், அரிமரம் தரித்தல் அனுமதிப் பத்திரங்கள், அரிமரம் போக்குவரவு அனுமதிப்பத்திரங்கள், ஆட்களைப் பதிவுசெய்தல், கிராம அலுவலரின் வதிவிட அத்தாட்சிப்படுத்தலை விநியோகித்தல், கருங்கல் உடைத்தகழ்தல், மண் போக்குவரவுக்கான அனுமதிப்பத்திரங்கள் சம்பந்தமான கணினித் தரவு முறைமையொன்றை தயார்செய்து பேணி வருதல், மத்திய அரசினதும் மாகாண அரசினதும் மாகாண சபைகளதும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் சமுர்த்தி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் பல்வேறு வெளிக்கள நிகழ்ச்சித்திட்டங்களையும் அமுல்படுத்தல்.

3. பிரதேச செயலகம் அடைந்துள்ள வெற்றிகள்



நிர்மாணிக்கப்பட்டுவரும் புதிய அலுவலக வளவு

- 2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கல் போட்டியில் திறமைக்கான விருதினை 2021 ஆம் ஆண்டில் வென்றெடுத்தமை.
- 2021 கொழும்பு மாவட்ட பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் அணியின் வெற்றிக் கிண்ணம், தடலக விளையாட்டு வெற்றிக்கிண்ணம், ஒட்டுமொத்த வெற்றிக் கிண்ணம் என்பவற்றை வென்றெடுத்தமை.

4. எதிர்நோக்கிய சவால்கள்

- 2021 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட்-19 பெருந்தொற்றின்போது பொதுமக்களுக்கு கொடுப்பனவுகளையும் வசதிகளையும் வழங்குதல்.

5. வருடாந்த செயல் திட்டத்தின் முன்னேற்றம்

- கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக 2021 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தின் முன்னேற்றம் 90% என்ற மட்டத்தை நெருங்கியுள்ளது.



விளைவுப்பெருக்க பிரிவு

6. எதிர்கால இலக்குகள்

- பொதுமக்களுக்கு அதிசிறந்த ஒரு சேவையை வழங்குதல், பொதுமக்களுக்கு தகவல்களை இலகுவாக வழங்கக்கூடியதாக இருத்தல்.
- மக்களின் பங்கேற்புடன் வினைத்திறனான, நிலைபேறான, திட்டமிட்ட அபிவிருத்திச் செயன்முறையொன்றின் ஊடாக பிரதேச மக்களின் வாழ்நிலையை மேம்படுத்துதல்.

1.5.5 சீத்தாவக்க பிரதேச செயலகம்

1. அறிமுகம்



சீத்தாவக்க பிரதேச செயலகப் பிரிவு, 68 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியது. 2 உள்ளூர் அதிகார சபைகள் அதில் அடங்கும். 14 பிரிவுகள் சீத்தாவக்க நகர சபைக்கும் எஞ்சிய 54 பிரிவுகள் சீத்தாவக்க பிரதேச சபை அதிகார இடப்பரப்பிற்கும் உரியனவாகும். 14,460.5 ஹெக்டேயர் மொத்த நிலப்பரப்பைக் கொண்ட இப்பிரதேச செயலகப் பிரிவின் மொத்த சனத்தொகை, 119,843 ஆகும்.

2. முதன்மைப் பணிகள்



1. அரசாங்க கா.அ.கட்டளைச்சட்டம், காணிகள் கையகப்படுத்தல், காணியளிப்பு விசேட ஏற்பாடுகள் சட்டம் என்பவற்றை அமுலாக்கம் செய்தல்.
2. அனுமதிப்பத்திரங்கள் (வாகன/ அரிமர/ மதுபான/ வெடிபொருள்/ மணல்/ மண்/ விலங்கு போக்குவரவு/ அடகு/ சுடுபடைக்கலன்கள்) விநியோகிக்கும் அலுவல்கள்.
3. பதிவு நடவடிக்கைகள் (பிறப்பு/ விவாக/ இறப்பு)
4. வியாபாரப் பெயர்ப் பதிவு.
5. அடையாள அட்டைகள் விநியோகிக்கும் அலுவல்கள்.
6. ஓய்வூதியம் வழங்கல் நடவடிக்கைகள்.
7. அனர்த்த நிவாரண சேவைகள்.
8. மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள்.
9. விளையாட்டு/ சமூக சேவை/ கலாசார மற்றும் சமய/ வீடமைப்பு/ இளைஞர் சேவை அலுவல்கள்



3. பிரதேச செயலகம் அடைந்துள்ள வெற்றிகள்

1. தேசிய உற்பத்தித் திறன் விருது - 2018
2. 'துருணு ஷ்ரம சக்தி' நிகழ்ச்சித்திட்டம் - மாவட்டத்தில் முதலிடம்
3. கிரிக்கற் ஆட்டத்தில் இரண்டாமிடம் (runner up) - 2019

4. எதிர்நோக்கிய சவால்கள்



1. கொவிட்-19 நிவாரணப் பணிகளை மிகத் துரிதமாகவும் திருத்தமாகவும் நிறைவேற்றுதல்.
2. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமையில் பொதுவான கடமைகளை வினைத்திறனாக நிறைவேற்றுதல்.
3. தொடர்ந்து அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கும் ஒரு பிரிவாக இருப்பதனால், அண்மிய சந்தர்ப்பத்திற்கு வினைத்திறனான நிவாரணங்களை அளித்தல்.

4. அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதன் ஊடாக அனர்த்தங்களைத் தணித்தல்.

5. வருடாந்த செயல் திட்டத்தின் முன்னேற்றம்

- 2021 ஆம் ஆண்டின் செயல் திட்டத்தின் முன்னேற்றம் 98% என்ற மட்டத்தை நெருங்கியுள்ளது.

6. எதிர்கால இலக்குகள்

1. கொடுப்பனவுப் பத்திரங்களை ஆவணப்படுத்தி பாதுகாத்தல்.
2. காணிக் கச்சேரிகளை நடாத்தி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.
3. கொடுப்பனவுப் பத்திரங்களை வழங்குதல்.
4. அரச காணிகளை அடையாளம் கண்டு பாதுகாத்தல்.
5. பிரிவு முழுவதையும் உள்ளடக்குகின்றவாறு கணினித் தரவு முறைமையொன்றை நிறுவுதல்.
6. அனைத்து மக்கள் சேவைக் கருமபீடங்களையும் வசதியாக மக்கள் அணுகக்கூடிய விதத்தில் இடவமர்த்துதல்.
7. அனர்த்த முகாமைத்துவத்தை அடையாளம் காணப்பட்ட கருத்திட்ட வேலைகளைப் பூர்த்திசெய்து மக்கள் வாழ்வைப் பேணுதல்.
8. கிராம அலுவலர் சேவைப் பீடம் - அடையாளம் காணப்பட்ட காணிகளில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளல்.

சீத்தாவக்க பிரதேச செயலகம்

சீத்தாவக்க பிரதேச செயலகம் தரவு சேகரிப்பு முறைமை செயலகம்

புதிய படிவங்கள்

படிவங்களைத் திருத்தியமைக்கவும் (1)


இறுதிப் படிவத்தை அனுப்பவும்

Get Blank Form

Delete Saved Form


1.5.6 கொழும்பு பிரதேச செயலகம்

1. அறிமுகம்



கொழும்பு வடக்கு மற்றும் கொழும்பு மத்திய ஆகிய இரண்டு வாக்கெடுப்பு மாவட்டங்களையும் 35 கிராம அலுவலர் பிரிவுகளையும் கொண்ட கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவின் சனத்தொகை, ஏறக்குறைய நான்கு இலட்சத்து ஐம்பதாயிரமாகும். துறைமுக நகரம், தாமரைக் கோபுரம், முகத்துவாரம், ஒல்லாந்து நூதனசாலை போன்ற அரிய பல இடங்கள் அமைந்துள்ள இலங்கையின் வர்த்தகத் தலைநகரான கொழும்பு அமைந்துள்ள பிரதேச செயலகமாகும்.

2. முதன்மைப் பணிகள்



I. நியதிச்சட்டப் பணிகள்:
- பிறப்பு/ விவாக/ இறப்பு சான்றிதழ் அடங்கலான ஆளடையாளம் சம்பந்தப்பட்ட பணிகள்.
- தேசிய அடையாள அட்டை வழங்குதற்கான மேலொப்பத்தையும் அனைத்து அனுமதிப்பத்திர வகைகளையும் வழங்குதல்/ காணி கையகப்படுத்தல்/ காணி உரிமைமாற்ற அலுவல்கள்.
- ஓய்வூதியம் கொடுப்பனவு செய்வதுடன் சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

II. சமூக நலனோம்புகை:
- வெள்ளப்பெருக்கு/ கொரோனா முதலிய பெருந்தொற்று நிலைமைகளின்போது மக்களுக்குத் தேவையான உணவுப்பொருள்களை வழங்குதல் அடங்கலான அனர்த்த நிவாரண நடவடிக்கைகள்.
- முதியோர்/ விசேட தேவையுடையோர்/ கர்ப்பிணித் தாய்மார்/ நோயாளர்களுக்கான உதவி முதலிய பிரத்தியேக உதவிகளை வழங்குதல்.

III. உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கான பாடசாலை அபிவிருத்திப் பணிகள், பொது மலசலகூடங்கள் மற்றும் வீதி திருத்த வேலை, பராமரிப்பு நடவடிக்கைகள்.

3. பிரதேச செயலகம் அடைந்துள்ள வெற்றிகள்



1. தேசிய உற்பத்தித்திறன் விருது விழாவில் 3 ஆம் இடத்தைப் பெற்றுக்கொள்ளல்.
2. கொழும்பு மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் பணிபுரியும் அலுவலர்களுக்காக நடாத்தப்படும், "Voice of Colombo" என்ற ரியலிட்டி நிகழ்ச்சிக்கு இந்த அலுவலகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி 05 போட்டியாளர்கள் இறுதி 48 பேரின் சுற்றுக்கு தகுதிபெற்றமையும் இரண்டு போட்டியாளர்கள் மாபெரும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றமையும்.
3. கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக மூன்றாவதாக நாட்டில் நடமாட்டத் தடை விதிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில்,
   - வாழ்வாதாரத்தை இழந்த 30,000 குடும்பங்களுக்கு ரூ.2,000 வீதம் கொடுப்பனவைப் பகிர்ந்தளித்தல்.
   - தொற்றுநோய்த் தடைக்காப்புக்கு உட்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கும்

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கும் ரூ.5,000 பெறுமதியான 34,250 உலருணவுப்பொருள் பொதிகளை வழங்குதல்.

- 2021 ஆம் ஆண்டில் காணி கையகப்படுத்தல் கடமைகளுக்காக 40 உரிமைப் பரிசோதனைகளை நிறைவுசெய்தல், காணி கையகப்படுத்தலுக்குரிய 30 பேருக்கு இழப்பீட்டுத் தொகைகளை வழங்குதல், காணி அமைச்சுக்கு 6(1) வெளியிடுவதற்கு ஏற்புடைய பழைய 10 கையகப்படுத்தல் கோப்புகளின் அறிக்கைகளை அனுப்புதல், பழைய கையகப்படுத்தல்களுக்குரிய 10 கோரிக்கைக் கடிதங்களுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்.

4. 2021 ஆம் ஆண்டில் காணி கையகப்படுத்தல் கடமைகளாக 40 உரிமைக்கோரிக்கை விசாரணைகளை முடிவுறுத்தல், காணி கையகப்படுத்தலுக்குரிய 30 பேருக்கு இழப்பீட்டுத் தொகைகளை வழங்குதல், காணி அமைச்சுக்கு 6(1) விநியோகிப்பதற்கு ஏற்புடைய பழைய 10 கையகப்படுத்தல், கோப்புக்களின் அறிக்கைகளை அனுப்புதல், பழைய கையகப்படுத்தல்களுக்கு ஏற்புடைய 10 கோரிக்கைக் கடிதங்களின் பிரச்சினைகளை நிவர்த்திசெய்தல்.

4. எதிர்நோக்கிய சவால்கள்



1. கஜிமாவத்த தீப்பிடிப்பு – 2021.03.15 ஆம் திகதி கஜிமாவத்தவில் அமைந்துள்ள 27 குடிசைகள் தீக்கிரையானதைத் தொடர்ந்து மோதர உயன சனசமூக மண்டபத்திலுள்ள முகாமொன்றுக்கு அக்குடிசைவாசிகள் அனுப்பிவைக்கப்பட்டனர். அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களும் ஏனைய அத்தியாவசிய உபகரணங்களும் 2021.04.07 ஆம் திகதி வரை இலங்கை விமானப்படை, கொழும்பு மாநகர சபை, வேறு அரச சார்பற்ற அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் வழங்கப்பட்டன. 2021.04.10 ஆம் திகதி அவர்கள் முன்பு வாழ்ந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.



2. வெள்ளப்பெருக்கு – 2021 மே, ஜூன் மாதங்களில் களனி கங்கையின் நீர் மட்டம் அதிகரித்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக 500க்கும் அதிகமான வீடுகளில் வசித்த 1000 க்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டனர். அனர்த்தத்திற்கு முகங்கொடுத்த குடும்பங்களுக்கு சமைத்த உணவு விநியோகிக்கப்பட்டது. கொழும்பு மாவட்ட செயலாளரும் இதில் பங்கேற்றார்.
4. கொவிட்-19 – கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக 2021 மே மாதம் மற்றும் 2021 ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி முதல் அக்டோபர் மாதம் 01 ஆம் திகதி வரை தனிமைப்படுத்தல்நிலை காணப்பட்டது. கொரோனா மூன்றாம் அலையின்போது முழுத்தொகுதியும் தனிமைப்படுத்தல் நிலைக்கு உட்படுத்தப்பட்டிருந்தபோது அலுவலக அலுவலர்களின் சுகாதார நலனைப் பேணி பாதிக்கப்பட்ட தொகுதிவாழ் மக்களின் தேவைகளை நிறைவேற்றி அவர்களுக்கு நிவாரணமளிக்கப்பட்டது.
5. 'எக்ஸ்பிரஸ் பர்ள்' கப்பலுக்கு ஏற்பட்ட சேதம் காரணமாக பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்க இழப்பீடு வழங்கப்பட்டது.

5. வருடாந்த செயல் திட்டத்தின் முன்னேற்றம்

2021 ஆம் ஆண்டில் செயல் திட்டத்தின் முன்னேற்றம் 89% என்ற மட்டத்தை நெருங்கியுள்ளது.

6. எதிர்கால இலக்குகள்



கொவிட்-19 பெருந்தொற்று உள்ளிட்ட எதிர்பாரா நிலைமைக்கு மத்தியில் அனைத்து மக்களதும் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தியும் 2021 வருடாந்த செயல் திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு அரச கொள்கைகளையும் நல்லாட்சிக்கான மூலக் கோட்பாடுகளையும் பின்பற்றி கொழும்புவாழ் மக்களுக்கு திருப்திகரமானதாக அவர்களின் தேவைகளை வினைத்திறனாகவும் பயனுறுதிவாய்ந்த விதத்திலும் நிறைவேற்றிக்கொடுத்தல்.

1.5.7 திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகம்

1. அறிமுகம்



திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகம், இலங்கையின் வர்த்தகத் தலைநகரமான கொழும்பை மையப்படுத்தி 22 சதுர கி.மீ. பரப்பளவில் 20 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளக்கியதாக அமைந்துள்ளதுடன் 1999 மார்ச் 03 ஆம் திகதி முன்னணி அரசாங்க நிருவாக நிறுவனமொன்றாக நிறுவப்பட்டது.

2. முதன்மைப் பணிகள்



பிறப்பு/ விவாக/ இறப்பு பதிவை மேற்கொள்ளல், அனுமதிப்பத்திரங்கள்/ உரிமங்கள் மற்றும் சான்றிதழ்களையும் விநியோகித்தல், காணி நிருவாகம் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சமூக நலனோம்புகை மற்றும் நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தல், பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல், ஓய்வூதியக் கொடுப்பனவும் சமூர்த்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தலும்.

3. பிரதேச செயலகம் அடைந்துள்ள வெற்றிகள்



- தேசிய விளைவுப்பெருக்க விருது - 2019, 2020 அகில இலங்கை மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொள்ளல்.
- கொவிட்-19 பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியில் பிரிவு மக்களின் வாழ்க்கைத்தரத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் நிவாரணமளித்தலும்.
- பதிவாளர் பிரிவுக்கான வரிசை முகாமைத்துவ முறைமையொன்றை நிறுவுவதன்மூலம் சேவைகளை வழங்கும்போது வினைத்திறனை மேம்படுத்தல்.
- தேவையான எண்ணிக்கையில் பிறப்பு, விவாக, இறப்பு சான்றிதழ்களை விநியோகிப்பதன் மூலம் உயர் வருமானமொன்றை ஈட்டல்.
- பட்டதாரிப் பயிலுநர்கள் மற்றும் பல்நோக்குச் சேவை புதிய அலுவலர்களை இணைத்துக்கொள்ளும் நேர்முகப் பரீட்சைகளையும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் வெற்றிகரமான மேற்கொள்ளல்.
- கொவிட்-19 பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியில் கலை நயத்தை மெருகூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொள்ளல்.
- நிகழ்நிலை இணையச் சேவை முறை மூலம் சேவைகளை வழங்குவதை வினைத்திறனுடன் மேற்கொள்ளல்.

4. எதிர்நோக்கிய சவால்கள்



- 03 தேர்தல் மாவட்டங்களையும் 20 கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக இருத்தல்.
- கொவிட்-19 பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியில் தொடர்ச்சியாக பிரிவு வாழ் மக்களின் வாழ்க்கைத்தரத்தைப் பேணுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தலும் அனர்த்த நிவாரணமளித்தலும்.
- சன அடர்த்திமிகு ஒரு பிரிவுக்கு சேவைகளை வழங்கும்போது அலுவலகத்திலுள்ள வரையறுத்த பணியாட்குழுவின் மூலம் அத்தகைய சேவைகளை வழங்க வேண்டிய நிலையுள்ளது.
- கொவிட்-19 பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியில் டெங்கு தொல்லையை முறியடித்தல்.

5. வருடாந்த செயல் திட்டத்தின் முன்னேற்றம்



2021 வருடாந்த செயல் திட்டத்திற்கமைய அடையப்பெற்ற முன்னேற்றம், 85% ஆகும்.

6. எதிர்கால இலக்குகள்



- கொவிட்-19 பெருந்தொற்று நிலைமையின் கீழ் நிறுவனத்தினால் வழங்கப்படும் அனைத்துச் சேவைகளையும் எந்தவொரு தடையுமின்றி தொடர்ச்சியாகவும் வினைத்திறனாகவும் முன்னெடுத்துச் செல்லல்.
- நிகழ்நிலையாக இணையவழி சேவை முறையின் மூலம் சேவைகளை வழங்குவதை மிகவும் வினைத்திறன் உடையதாக்குதல்.
- திடீர் அனர்த்த நிலைமைகளுக்கு மத்தியில் நிவாரணங்களை வழங்குதல்.
- நிறுவனத்தின் முழுதுமளாவிய உற்பத்தித்திறனை மேலும் அதிகரித்தல்.

1.5.8 பாதுக்கை பிரதேச செயலகம்

1. அறிமுகம்



பாதுக்கை பிரதேச செயலாளர் பிரிவு தாழ்நாட்டு ஈர வலயத்தைச் சார்ந்தது. மேல்மாகாணத்தின் கொழும்பு நிருவாக மாவட்டத்தின் ஹோமாகமை, அவிசாவளை ஆகிய இரண்டு தேர்தல் மாவட்டங்களுக்கும் உரிய பகுதியில் 46 கிராம அலுவலர் பிரிவுகள் எங்கும் பரந்துள்ளது. வடக்கே சீத்தாவக்க; கிழக்கே எஹெலியகொடை; தெற்கே இங்கிரிய மற்றும் ஹொரணை; மேற்கே ஹோமாகமை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகள் அதன் எல்லைகளாக அமைந்துள்ளன.

2. முதன்மைப் பணிகள்



- பிரதேச செயலாளர் பிரிவின் நிருவாகத்தை முன்னெடுத்துச் செல்லல்.
- பிரிவினுள் பௌதிக, பொருளாதார, சமூகப் பிரச்சினைகளுக்குரிய தீர்வு வழங்குதல்.
- பிரதேச செயலாளர் பிரிவுகளின் அபிவிருத்திக்குத் தேவையான வழிகாட்டலும் மேற்பார்வையும்.

3. பிரதேச செயலகம் அடைந்துள்ள வெற்றிகள்









- கொவிட்-19 பெருந்தொற்று நிலவிய ஆபத்தான காலப்பகுதியில் பொதுமக்களுக்கான சேவைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லல்.
- எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைந்து பொதுமக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குதல்.
- பிரதேச செயலாளர் பிரிவினுள் கொரோனா நோய் பரவலை ஆகக்குறைந்த மட்டத்தில் பேணி பொதுமக்களுக்குத் தேவையான வசதிகள் வழங்கப்படுவதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுதல்.
- சமூகப் பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்திலிருந்து அதிகூடிய நிதிப் பங்களிப்பை வழங்க முடிந்தமை.
- கொவிட்-19 பெருந்தொற்று நிலைமை காரணமாக பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் நிகழ்நிலையாக இடம்பெற்றதுடன், அதற்கு உதவியாக அமைந்து பிரதேச செயலாளர் பிரிவில் 09 பிள்ளைகளுக்கு கையடக்கத் தொலைபேசிகள் வழங்கப்பட்டன. மற்றும் 10 பிள்ளைகளுக்கு தாபரிப்பு புலமைப்பரிசில்களவழங்கப்பட்டன.

- நிறுவை அளவை உபகரணங்கள், நடமாடும் சரிபார்ப்பு நிலைய நிகழ்ச்சித்திட்டத்தின் அதிகூடிய வருமானமொன்றை எமது பிரிவிலிருந்து பெற்றுக்கொடுக்க முடிந்தமை.



- கொவிட்-19 பெருந்தொற்று காலப்பகுதியில் கூ.மொ.வி. நிலையங்கள் ஊடாக ஆகக் கூடுதலான நிவாரணப் பொதிகளை சந்தைப்படுத்தி பிரதேச பொதுமக்களுக்கு நிவாரணங்களை அளித்தல்.



4. எதிர்நோக்கிய சவால்கள்

கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக காணப்பட்ட நிலைக்கும் அசௌகரியங்களுக்கும் மத்தியில் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்ள நேரிடுதல்.

5. வருடாந்த செயல் திட்டத்தின் முன்னேற்றம்





- தாபனப் பிரிவு - 71%
- சமூக அபிவிருத்திப் பிரிவு - 71%
- கணக்குப் பிரிவு - 131%
- திட்டமிடல் பிரிவு - 105%
- பதிவாளர் பிரிவு - 108%
- சமூர்த்தி பிரிவு - 105%

6. எதிர்கால இலக்குகள்

- அரசாங்கத்தினால் ஒப்படைக்கப்படும் பணிகளையும் இலக்குகளையும் நிறைவேற்றுதலும் பொதுமக்களுக்கு திருப்திகரமான ஒரு சேவையை வழங்குதலும்.

1.5.9 இரத்மலானை பிரதேச செயலகம்

1. அறிமுகம்



கொழும்பு மாவட்டத்தின் இரத்மலானை பிரதேச செயலாளர் பிரிவில் 13 கிராம அலுவலர் பிரிவுகள் அடங்குகின்றது. இதன் நிலப்பரப்பு, 13.47 சதுர கிலோ மீற்றர்களாகும். மொத்த சனத்தொகை, 100,857 ஆகும்.

தொலைநோக்கு: யுகத்தின் சவால்களை வெற்றிகொண்டு மக்கள் நட்புறவான அரச சேவையின் பிரதேச கேந்திரத்தலமாக விளங்குதல்.

பணித்திட்டம்: மக்கள் நட்புறவான உளப்பாங்குகளுடன் நவீன தொழில்நுட்பத்தைக் கையாண்டு நியதிச்சட்ட மக்கள் சேவைகளையும் பிரிவின் பௌதிக மற்றும் சமூக அபிவிருத்திக்கு செயலாற்றுதல்.

2. முதன்மைப் பணிகள்



- மத்திய அரசு மற்றும் மாகாண சபையினால் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துதல்.
- பிரிவினுள் வருமான வரியைச் சேகரித்தல்.
- சமூக நலனோம்புகை மற்றம் சேவை நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.
- அரச காணிகள் சம்பந்தமான கடமை அலுவல்கள்.



3. பிரதேச செயலகம் அடைந்துள்ள வெற்றிகள்

கொவிட்-19 பெருந்தொற்றுக்கு மத்தியிலும்கூட சுகாதார சட்டதிட்டங்களை அனுசரித்து பொதுச் சேவைகளை உயர்ந்தபட்சம் வழங்குதல்.

4. எதிர்நோக்கிய சவால்கள்



- கொரோனா பெருந்தொற்று காரணமாக திட்டமிட்ட அனைத்துச் செயல்பாடுகளும் மாற்றமடைந்தன. பிரதேச மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையான பல்வேறு சேவைகளை நிறைவேற்றும் பிரதேச செயலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு போதிய இடவசதிகள் இன்மை. அலுவலகத்தின் பணிகளுக்கு ஒப்பீடாக இடவசதி காணப்படாமை.
- சில பதவிகளுக்கு அலுவலர்கள் இன்மை.



5. வருடாந்த செயல் திட்டத்தின் முன்னேற்றம்

- முழு பௌதிக ரீதியாக முன்னேற்றம் 100%

6. இலக்குகள்

1. 2022 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டத்தை 100% வெற்றி பெறச்செய்தல்.
2. மற்றுமோர் இடத்தில் பிரதேச செயலகத்தை நிறுவுதல்.



1.5.10 கெஸ்பாவை பிரதேச செயலகம்

1. அறிமுகம்



இலங்கையின் அரச நிறுவனங்களில் மிக உயிர்ப்பாக செயற்படுதலும் பிரதேச நிருவாகத்தின் கேந்திரஸ்தானமாக விளங்குதலும்.

2. முதன்மைப் பணிகள்



வறுமையைத் தணித்தல்/ சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல்/ பிரதேச அபிவிருத்தி/ நிதியியற் சேவைகளை விஸ்தரித்தல்/ வேலையின்மையைக் குறைத்தல்/ அரசிறை வருமானங்களைப் பெற்றுக்கொள்ளல்/ காணியளிப்பு/ சமூக ஒருங்கிணைப்பு அலுவல்கள்/ அனர்த்த முகாமைத்துவ அலுவல்கள்/ தொற்றுநோய் ஒழிப்பு நடவடிக்கைகள்.

3. பிரதேச செயலகம் அடைந்துள்ள வெற்றிகள்



பேண்தகு அபிவிருத்தியை நோக்கிய பயணத்தின்போது நிலவிய பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியிலும் மக்களின் வாழ்வை வழமை போல் பேணுவதற்கு அவசியமான சேவைகளை வழங்கும்போது பல்வேறு வழிகளிலும் கூட்டுணர்வுடன் செயலாற்றுதல்.



பிறப்புச் சான்றிதழ்களை விநியோகிக்கும் கருமபீடத்தை நாடுபூராவும் நிறுவுதல்.

உற்பத்தித் திறன் விருது வழங்கப்படல்.

4. எதிர்நோக்கிய சவால்கள்



73 கிராம அலுவலர் பிரிவுகள். சன அடர்த்தி கூடிய ஒரு பிரதேச செயலாளர் பிரிவாக இருப்பதனால், தமது பணிகளை நிறைவேற்றிக்கொள்ள வரும் பொதுமக்களுக்கு வினைத்திறனான ஒரு சேவையை வழங்கக்கூடிய விதத்தில் தேவையான இடவசதிகளையும் வரையறுக்கப்பட்ட வளங்களையும் முகாமைசெய்வதன் மூலம் தேவைப்படும் சேவைகளை வழங்குதல்.

5. வருடாந்த செயல் திட்டத்தின் முன்னேற்றம்

வருடாந்த முன்னேற்றம் - 90%.

6. எதிர்கால இலக்குகள்



தற்போதுள்ள பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியில் மனித மற்றும் பௌதிக வள அபிவிருத்தியின் ஊடாக வறுமைநிலையைத் தணிப்பதற்காக 'சுபீட்சத்தின் நோக்கு' தேசிய கொள்கைகளை அமுல்படுத்துவதன் மூலம் அதனோடு சம்பந்தப்பட்ட இலக்குகளை எய்துதல்.

1.5.11 ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகம்

1. அறிமுகம்



மேல்மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் பிரதான நிருவாகத் தலைநகரில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகம் அமைந்துள்ளது. 1,700 ஹெக்டேயர் நிலப்பரப்பைக்கொண்ட இப்பிரிவு, 20 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியது. இங்கு வாழும் பெரும் எண்ணிக்கையான மக்களின் முக்கிய வாழ்வாதாரம் சேவைத் துறையில் தங்கியுள்ளது.

2. முதன்மைப் பணிகள்



அலுவலகத்தின் சேவைகளை சேவைநாடுநர் பட்டத்திற்கு அமைவாக வினைத்திறனாகவும் பயனுறுதிவாய்ந்த விதத்திலும் நிறைவேற்றுதல், நன்மைகளைப் பெறாத, துன்பப்படும் சமூகக் குழுக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதன் ஊடாக சமூக அபிவிருத்தியையும் பிரதேசத்தின் பேண்தகு அபிவிருத்தியையும் பலப்படுத்துதல். இறுதி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக சிறந்த நிதி முகாமைத்துவம், பிறப்பு - விவாக - இறப்புச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை வழங்குதல், அத்தகைய சான்றிதழ்களைப் பாதுகாப்பதன் ஊடாக மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், பல்வேறு நேர்வரிசை அமைச்சுக்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஏற்பாடுகள் மற்றும் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கிடைக்கப்பெறும் நிதி ஏற்பாடுகளை பயனுறுதிவாய்ந்த விதத்தில் ஈடுபடுத்தி பிரிவின் அபிவிருத்திக் கருத்திட்டங்களை நிறைவேற்றுதல், பிரிவின் பொதுமக்களினால் முன்வைக்கப்படும் பிரச்சினைகளை நிவர்த்திசெய்து கொள்வதற்கு தேவைப்படும் நிறுவனங்களை இணைத்துக்கொண்டு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடாத்துதல்.



3. பிரதேச செயலகம் அடைந்துள்ள வெற்றிகள்



2021 ஆம் ஆண்டில் பன்முகப்படுத்திய வரவுசெலவுத்திட்ட நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 20 மி.ரூ. பெறுமதியான 152 கருத்திட்டங்களும், தைத்த ஆடைகள் சார்ந்த சுகாதார 'சௌபாக்கியா' உற்பத்திக் கிராம மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் அனைத்து கருத்திட்டங்களையும் வெற்றிகரமாக பூர்த்திசெய்து (முன்னேற்றம் 100%) இப்பிரிவின் அபிவிருத்திக்கு பங்களிப்புச்செய்தல்.

4. எதிர்நோக்கிய சவால்கள்

அலுவலகத்தின் அலுவலர்களுக்கு வசதியாக கடமை அலுவல்களை மேற்கொள்வதற்குப் போதியளவு இடவசதி இன்மை, அலுவலர்களுக்கு கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான கணினி, அச்சீட்டுப் பொறிகள் உள்ளிட்ட அலுவலக உபகரணங்கள் போதியளவில் காணப்படாமை.



5. வருடாந்த செயல் திட்டத்தின் முன்னேற்றம்

வருடாந்த முன்னேற்றம் - 91%


6. எதிர்கால இலக்குகள்

பொதுமக்களுக்கு உயர்ந்தபட்ச சேவையொன்றை வழங்குதல், மாவட்டத்தை அபிவிருத்தியில் முன்னணி பிரிவொன்றாக மாற்றியமைத்தல், கொவிட்-19 பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியில் உயர்ந்தபட்ச நிவாரணங்களை வழங்குதல், பிரிவுவாழ் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், பிரிவிற்கு ஒதுக்கப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை பயனுறுதி வாய்ந்ததாகவும் வெற்றிகரமாகவும் நிறைவேற்றி பொதுமக்களின் வாழ்வாதாரத்தையும் பிரிவின் உட்கட்டமைப்பு வசதிகளையும் அபிவிருத்திசெய்தல்.



1.5.12 மஹரகம பிரதேச செயலகம்

1. அறிமுகம்



மஹரகம பிரதேச செயலகப் பிரிவு, நீண்டகால வரலாற்றைக் கொண்டதல்லாதபோதும் இன்றைய சமூக, பொருளாதார, கலாசாரப் பெறுமானங்கள் நிரம்பிய சேவைகளையும் பண்டங்களையும் வழங்கும் ஒரு நகரம் எனக் குறிப்பிடலாம். 41 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய இப்பிரிவு, 36.64 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக்கொண்ட 212,014 பகுதியான நகர்ப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு நேரடியாக சேவைகளை வழங்குவதுடன், இலங்கை முழுவதற்கும் சமூகத்திற்கும் அளப்பரிய சேவைகளை வழங்கும் பல அரச நிறுவனங்கள இப்பிரிவினுள் நிறுவப்பட்டுள்ளன.

2. முதன்மைப் பணிகள்



பிரதேசம்வாழ் மக்களுக்கு நாளாந்தம் தேவைப்படும் அரச சேவைகளை துரிதமாக வழங்குதல், பிரிவினுள் பல்வேறு கல்வி, கலாசார, சமய, சமூக நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல், வளங்களை ஒருங்கிணைத்து மக்கள் பங்கேற்பைக் கொண்ட அபிவிருத்திப் பணிகளை அமுல்படுத்துதல், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் நிவாரண சேவைகளை வழங்குதல், அரச



கொள்கைகளை அமுல்படுத்துவதன் ஊடாக இப்பிரிவைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

3. பிரதேச செயலகம் அடைந்துள்ள வெற்றிகள்

2020 ஆம் ஆண்டில் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடாத்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான போட்டியில் அகில இலங்கை மட்டத்தில் மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொள்ளல்.

4. எதிர்நோக்கிய சவால்கள்



1. நிருவாக அலுவலர், நிருவாகத்திற்கான கிராம அலுவலர், நிரந்தர காணிப் புலன்விசாரணை அலுவலரொருவர் இன்மை.

2. பிரிவுகளில் பணிபுரியும் கிராம அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள், சமூர்த்தி அலுவலர்களுக்கான தற்போதுள்ள அலுவலக வசதிகள் மட்டுப்படுத்தியதாக இருத்தல்.

3. கொவிட்-19 பெருந்தொற்று ஆபத்துக்கு மத்தியில் பொதுவான கடமைகளை நிறைவேற்றும்போதும் நிவாரணமளிப்பு

நடவடிக்கைகளின் போதும் ஏற்படக்கூடிய சுகாதாரப் பாதுகாப்புப் பிரச்சினைகள்.

5. வருடாந்த செயல் திட்டத்தின் முன்னேற்றம்



2021 ஆம் ஆண்டில் கொவிட் பெருந்தொற்று ஆபத்து நிலை காரணமாக வருடாந்த செயல் திட்டத்தில் 100% முன்னேற்றமொன்றை அடைந்துகொள்ள முடியாமல் இருந்ததுடன், சுமார் 80% முன்னேற்றமென்றை அடைந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

6. எதிர்கால இலக்குகள்



நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி, தற்போதுள்ள மனித மற்றும் பௌதிக வளங்களை பயன்கூர் விதத்தில் முகாமைசெய்து பிரிவின் மக்களுக்கு அதிசிறந்ததொரு சேவையை வழங்குதல். அரச கொள்கைகளை அமுல்படுத்துவதன் ஊடாகவும் சம்பந்தப்பட்ட வெளித் திறத்தவர்களை ஒருங்கிணைத்து பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

1.5.13 கொலொன்னாவை பிரதேச செயலகம்

1. அறிமுகம்



கொனொன்னாவை தேர்தல் மாவட்டம், 1960 தசாப்தத்தில் பிரித்தொதுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இது கொழும்பிலிருந்து பிரிந்த தனிவேறான பிரதேசமாக மாறியது. தற்போது 46 கிராம அலுவலர் பிரிவுகளை அது உள்ளடக்கியுள்ளது. இதன் இன அமைப்பை நோக்கும்போது சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்தியர் தமிழர், சோனகர், மலாயர், பறங்கியர் என்ற அடிப்படையில் இனப் பல்வகைமையொன்று பிரதேசம் முழுவதிலும் பரந்துள்ளது.

2. முதன்மைப் பணிகள்



அரச கொள்கைகளுக்கு அமைவாக சேவைகளை வழங்குதல், வளங்களை ஒருங்கிணைத்தல், மக்கள் பங்கேற்புடன் வினைத்திறனான, பேண்தகு, திட்டமிட்ட அபிவிருத்திச் செயன்முறையொன்றின் ஊடாக பிரதேசம்வாழ் மக்களின் வாழ்வை மேம்படுத்தலும் பிரதேசத்தின் நிருவாகத்தைப் பலப்படுத்துவதன் ஊடாக வினைத்திறனான, பயனுறுதிவாய்ந்த விதத்தில் மக்களுக்கு உயர்ந்தபட்ச சேவையொன்றை வழங்குதலும்.



3. பிரதேச செயலகம் அடைந்துள்ள வெற்றிகள்



- கருத்திட்ட முன்னேற்றம் - 100%
- விளையாட்டுத்துறை வெற்றிகள்

4. எதிர்நோக்கிய சவால்கள்



அவ்வப்போது ஏற்படும் அனர்த்தங்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்தல். உதாரணமாக: வெள்ளப்பெருக்கு, குப்பை மேடு குடைசாய்தல், கொவிட்-19

5. வருடாந்த செயல் திட்டத்தின் முன்னேற்றம்

திட்டமிடல் பிரிவு, கணக்குப் பிரிவு, தாபனப் பிரிவு, பதிவாளர் பிரிவு, வெளிக்கள அலுவலர் பிரிவு, சமுர்த்தி பிரிவு, விதாதா நிலையம் எனும் அனைத்துப் பிரிவுகளின் முன்னேற்றம் 100% ஐ எய்துதல்.

6. எதிர்கால இலக்குகள்



- இடவசதியுடன்கூடிய அலுவலக வளவொன்றை அமைத்தல்.
- அனைத்துக் கருத்திட்டங்ளையும் வெற்றிகரமாக நிறைவேற்றுதல்.
- கொவிட்-19 பெருந்தொற்றை மேலும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
- பொதுச் சேவையை நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மிகவும் சுகாதாரப் பாதுகாப்புடனும் வினைத்திறனாகவும் மேற்கொள்ளல்.

அத்தியாயம் 02 -முன்னேற்றமும் தொலைநோக்கும்

2.1 தாபனப் பிரிவு

சிறப்பான அடைவுகள்

1. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமையின் கீழ் விதிக்கப்பட்ட ஊரடங்குச் சட்ட காலப்பகுதியில் மாவட்டத்தினுள்ளும் மாவட்டத்திற்கு வெளியிலும் அத்தியாவசிய தேவைகளுக்காக நடமாட்டத்தில் ஈடுபடுவதற்கு வரையறுக்கப்பட்ட பணியாட்குழுவொன்றை ஈடுபடுத்திக்கொண்டு மக்களின் தேவைக்கேற்ப ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுத்தல்.
2. கொவிட்-19 ஆபத்தான நிலைக்கு மத்தியிலும்கூட அலுவலக நடவடிக்கைகள் முறிவடைய விடாமல் வரையறுக்கப்பட்ட பணியாட்குழுவைக்கொண்டு அலுவலக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லல்.
3. தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுவரும் குடும்பங்களுக்கு ரூ.5000, ரூ.10,000 பெறுமதியான பொருள்கள் அடங்கிய பொதிகளை வழங்கும் பணிகளை ஒருங்கிணைப்புச்செய்வதன் மூலம் கொழும்பு மாவட்ட மக்கள் வாழ்வுக்கு தடங்கல்கள் ஏற்படாமல் பாதுகாத்தல்.
4. கொழும்பு மாவட்ட செயலகத்திலிருந்தும் 13 பிரதேச செயலகங்களுக்கும் உரிய சேவைநாடிகளிடமிருந்தும் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடாத்தப்படுவதன் காரணமாக ஊழல், மோசடிகளைக் குறைத்துக்கொள்ள முடிந்தமை.
5. கொவிட்-19 பெருந்தொற்றுக்கு மத்தியிலும் ஆண்டின் இலக்கிட்ட முக்கிய விசாரணைகளின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்ய முடிந்தமை.
6. கொவிட்-19 பெருந்தொற்றுக்கு மத்தியிலும் மாவட்டத்தின் அலுவலர்களுக்கான ஊழியர் உந்துகை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த முடிந்தமை.
7. கொவிட்-19 ஆபத்துக்கு மத்தியிலும் முழு மாவட்டத்திலுமுள்ள கிராம அலுவலர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்திச் செல்ல முடிந்தமை.
8. கொவிட்-19 பெருந்தொற்று காலப்பகுதியில் மாவட்டப் பதிவாளர்களை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகளை நடாத்த முடிந்தமை.
9. கொழும்பு மாவட்டத்தின் முகாமைத்துவ சேவை அலுவலர் தரம் I அலுவலர்களின் தடைதாண்டல் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுவதற்குரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
10. பிரதேச செயலகங்களில் காணப்படும் காணிப் பிரச்சினைகளை துரிதமாக தீர்த்து வைக்க நடவடிக்கை எடுத்தமை.
11. அஞ்சல் நடவடிக்கைகளை மிகவும் கவனமாக மேற்கொள்வதற்கும் அதில் முறையான தன்மையை ஏற்படுத்துவதற்கும் புதிய அஞ்சல் பிரிவொன்றை நிறுவுதலும், அஞ்சலுக்கான கணினித் தரவுத் தளமொன்றை அறிமுகப்படுத்தலும்.

சவால்கள்

1. கொவிட்-19 க்கு மத்தியில் சேவையாற்றுவதற்காக அலுவலர் குழாமொன்றை அழைப்பதில் காணப்பட்ட சிரமமும், அலுவலர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்க நேரிடுவதன் அடிப்படையில் அலுவலகப் பணிகளை சிறப்பாக மேற்கொள்வதற்குள்ள சிரமமும்.
2. அலுவலகத்தின் உற்பத்தித்திறன் நடவடிக்கைகளை உரிய முறையிலும் எதிர்பார்த்த மட்டத்திலும் மேற்கொள்ள முடியாமை.
3. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியில் 2022 ஆம் ஆண்டுக்கு சுடுபடைக்கலன்கள் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.
4. வரையறுக்கப்பட்ட ஒரு காலப்பகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய அவசர கடமை அலுவல்களின்போது நாளாந்த கடமை அலுவல்களுடன் முகாமைசெய்துகொண்டு நடவடிக்கை எடுக்க நேரிடுதல்.
5. கொவிட்-19 தொடர்பான சுகாதார வழிகாட்டுநெறிகளுக்கு அமைவாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.
6. கொவிட்-19 க்கு மத்தியில் புலன்விசாரணை நடவடிக்கைகளுக்கான வெளிக்களப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு வெளிக்கள செல்லல்களை உரிய முறையில் மேற்கொள்ள முடியாதநிலை ஏற்படுதலும் விசாரணை நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படுவதன் பேரில் மேற்கொள்வதற்கு நேரிடுதலும்.
7. அதிகமான அலுவலக முகாமைத்துவ சேவை பதவி வெற்றிடங்கள் பிரிவினுள் காணப்பட்ட காரணமாக அக் கடமை அலுவல்களை மேற்கொள்ள நேரிடுதல்.
8. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியிலும் மக்களுக்கு தொடர்ச்சியாக சேவைகளை வழங்க நேரிடுதல்.

எதிர்கால இலக்குகள்

1. 2022 ஆம் ஆண்டில் தாபனப் பிரிவின் வினைத்திறனையும் உற்பத்தித்திறனையும் 100% அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல்.
2. அலுவலர்களின் சேவைத் திருப்திநிலை அதிகரிக்கின்ற விதத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல்.
3. 13 பிரதேச செயலகங்களுடன் சிறந்ததொரு தொடர்பைக் கட்டியெழுப்பி தேவையான அனைத்து அலுவல்களையும் வினைத்திறனுடன் பேணுதல்.
4. கொவிட்-19 ஆபத்துக்கு மத்தியிலும் அலுவலக நடவடிக்கைகள் சீர்குலையாமல் முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளல்.
5. அபிவிருத்தி அலுவலர், முகாமைத்துவ சேவை அலுவலர், சாரதி மற்றும் அலுவலகப் பணியாளர் பதவி வெற்றிடங்களை துரிதமாக நிரப்ப நடவடிக்கை எடுத்தல்.
6. பிரிவின் அலுவலர்களுக்கு முறையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
7. துரிதமாக மேற்கொள்ளும் அறிவித்தலுக்கமைய குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்ய நேரிடும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக நடாத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை வகுத்தமைத்து முன்னெடுத்துச் செல்லல்.
8. மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் பொது மக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளுக்கு துரித பதில்குறிப்பு காண்பித்தலும் அமுல்படுத்தலும்.

2.2 மாவட்ட திட்டமிடல் பிரிவு

சிறப்பான அடைவுகள்

1. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியிலும் அமுலாக்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களின் மூலம் 95 சதவீதத்திற்குக் கூடுதலான பௌதிக முன்னேற்றமொன்றை அடைந்துகொள்ள முடிந்தமை.
2. மாவட்ட மக்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ள அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளுக்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் மூலம் தீர்வுகளை வழங்கக்கூடியதாக இருந்தமை.
    - ஸ்ரீ ஜயவர்தனபுர பிரதேச செயலாளர் பிரிவில் புத்கமுவ கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் 42 குடும்பங்களை ஹேனமுல்ல வீடமைப்புத் தொகுதியில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டமையும், அவ்வாறு அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் வசித்துவந்த பூமியை ஈரநில வலயமொன்றாக அபிவிருத்திசெய்வதற்கு அவசியமான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.
    - சீத்தாவக்க பிரதேச செயலாளர் பிரிவில் கொட்டஹெர பிரதேசத்தில் நிலச்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியிருக்கும் குடும்பங்களை பிறிதோரிடத்தில் குடியமர்த்தல்.
        i. 07 அதிக ஆபத்தான நிலையிலிருந்த குடும்பங்களை வேறு இடங்களில் குடியமர்த்தல்.
        ii. நடுத்தர ஆபத்தான நிலையிலுள்ள 129 குடும்பங்கள் வசித்துவரும் பூமியை தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் சிபார்சுகளுக்கு அமைய நிறுவுதல்.
    - திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில் கிழக்கு பாமங்கட நுககஹபுர வீடமைப்புத் திட்டத்தின் மண் திட்டை திடநிலைப்படுத்துவதற்கு நிர்மாணிக்கப்பட்டுவந்த பாதுகாப்பு அரண் எதிர்ப்பு காரணமாக இடைநடுவில் கைவிடப்பட்டது. அத்தகைய ஆர்ப்பாட்டத்தை இணக்கப்படுத்தி அரணை நிர்மாணித்தலும் அதன்மூலம் அனர்த்த நிலையை தவிர்த்து வசிப்பவர்களின் வசிப்பிடங்களைப் பாதுகாத்தல்.
    - கடுவலை தலாஹேன பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கு அனர்த்த நிலைமைக்குக் காரணமாக அமைந்த அனுமதியற்ற மற்றும் முறைசாராத கட்டுமானங்களை அகற்றுதல்.
    - 05 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உரிய முறையில் பராமரிக்கப்படாத 51 கால்வாய்களை மறுசீரமைப்பதற்கு 4.6 மி.ரூ. நிதி ஒதுக்கப்பட்டது. அதன்மூலம் மாவட்டத்தில் செய்கை பண்ணக்கூடிய வயல்நிலங்களில் செய்கை பண்ணக்கூடிய வயல் நிலங்களின் அளவை அதிகரிப்பதற்கும் தரிசு வயல்நிலங்களின் அளவைக் குறைப்பதற்கும் முடிந்தமை.
    - நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான மாதிவெல கிம்புலாவல மாதிரி வயல்வெளி 01 பகுதியிலுள்ள வயல்கள் நீரில் மூழ்கிவிடுவதைத் தடுப்பதற்காக வயல்களுக்கு இரு மருங்கிலுமுள்ள கால்வாய் மடைவாய் உடைப்பெடுத்துள்ள இடங்களைத் திருத்துதல், தலவத்துகொட கோட்டே வீதிக்கு அருகிலுள்ள அணைக்கட்டைத் திருத்திமைத்தலும் போதிராஜ மாவத்தைக்கு அருகிலுள்ள மதகைத் திருத்தியமைப்பதன் ஊடாக அந்த வயல்வெளியில் பயிரிடப்படக்கூடிய வயல் ஏக்கர்களின் அளவை அதிகரித்தல்.
    - கொலொன்னாவை பிரதேச செயலாளர் பிரிவில் குருணியாவத்த கிறேலைன் நிறுவனத்திற்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த அனுமதியற்ற கட்டுமானங்களையும்

காணி நிரப்புவதையும் அங்கிருந்து அகற்றுவதன் மூலம் அயல் பிரதேசங்களில் வசிப்பவர்களின் வீடுகளுக்கும் உடைமைகளுக்கும் ஏற்படக்கூடிய வெள்ளப்பெருக்கு சேதங்களை குறைத்தல்.

- ஹங்வெல்ல சீத்தாவக்க வர்த்தகக் கட்டிடத்தொகுதியிலுள்ள சுமார் 80 கடைகளின் வாடகைத் தொகை சீத்தாவக்க பிரதேச சபையினால் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக அக்கடைகளின் உரிமையாளர்கள் எதிர்நோக்கியிருந்த பிரச்சினைக்கொரு தீர்வாக சலுகை அடிப்படையில் நிலுவை வாடகையை அறவிட்டுக்கொள்வதற்கு பிரதேச சபைக்கும் கடை உரிமையாளர்களுக்கும் இடையில் இணக்கப்பாடொன்றுக்கு வருவதன் ஊடாக அத்திறத்தவர்களுக்கு இடையில் நிலவிய புரிந்துணர்வின்மையையும் பிணக்கையும் இணக்கப்படுத்தியமை.
- ஹோமாகமை, கடுவலை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் பல்கிப்பெருகிய ஆக்கிரமிப்புத் தன்மைவாய்ந்த அளவிற்பெரிய தொட்டாற்சிணுங்கி (நிதிகும்பா) தாவரத்தை ஒழித்துவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன்மூலம் வயல்களுக்கும் வேறு பயிர்களுக்கும் ஏற்பட்டம் சேதம் குறைவடைந்தமை.
- தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் அதிகரிக்கப்பட்டிருந்த கான்-குழி உறுஞ்சி வாகனங்களிலிருந்து கழிநீரை அகற்றுவதற்கு அரசாங்க நிறுவனங்களிலிருந்து அறவிடப்படும் கட்டணத்தை மீண்டும் குறைப்பதன் ஊடாக அந்நிறுவனங்களில் செலவு குறைவடைதல்.
- பொல்கொட வாவியில் வலைக் கூண்டினுள் மீன் வளர்ப்பை மேற்கொள்ளும் கருத்திட்டத்தை முறையாகவும் சட்டபூர்வமாகவும் ஆரம்பிப்பதன் ஊடாக அவ்வாவியை அண்டிய பகுதிகளில் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடும் மீனவ சமூகத்தின் வருமான மட்டத்தையும் மீன் அறுவடையையும் அதிகரித்தல்.
- பெல்லன்வில, அத்திடிய சரணாலயத்தில் வனசீவராசிகள் அலுவலகமொன்றை அமைப்பதற்காக நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான குடிமனைகள் அமைந்துள்ள காணியை வனசீவராசிகள் திணைக்களத்திற்கு உரிமைமாற்றம்செய்தலும், வனசீவராசிகள் அலுவலகத்தின் இடஅமைவு காரணமாக சரணாலயத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ளலும் சரணாலயத்திற்குச் சொந்தமான காணியின் நிலஅளவை நடவடிக்கைகளை மேற்கொண்டு தரைப்படத்தைத் தயாரித்தலும்.
- கொழும்பு மாவட்டத்திலுள்ள விஹாரைகள் மற்றும் சீலமாத்தா ஆச்சிரமங்களின் நிர்ணயம் செய்யப்படாத உறுதிகளுடன்கூடிய காணிகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட காணி உறுதிகளையும் அதன் உரித்தையும் வழங்குவதற்கு 85 விஹாரைகள் பற்றிய தகவல்கள் பெறப்பட்டுள்ளன. அக்காணிகளின் உரித்தை நிறுவனங்களுடன் இணைந்து கலந்தாலோசித்து நிர்ணயம்செய்யப்பட்ட உறுதிகளையும் உரித்தையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- "சுரகிமு கங்கா" (ஆறுகளைக் காப்போம்) என்ற நிகழ்ச்சித்திட்டம் சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து அமுல்படுத்தப்பட்டது. இதன்மூலம் களனி கங்கை மற்றும் அதன் கிளை ஆறுகளை அண்டிய பகுதிகளில் வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்துவதற்கும் ஆறுகள் மாசடைதலைத் தடுப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- "ஹுஸ்ம தென துரு" (சுவாசம் தரும் விருட்சங்கள்) என்ற மரநடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுற்றாடல் அமைச்சினால் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு அம்மரக்கன்றுகள் வழங்கப்பட்டதுடன், பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் பன்சாலை, மருத்துவமனை போன்றவற்றிலும் வழிப்பாதைகளிலும், ஆற்றங்கரைகளுக்கு அருகிலும் அவற்றை நடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- சேதன உர நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் விவசாய அமைச்சினால் கமநல அபிவிருத்தி அலுவலர்கள், விவசாயப் போதனாசிரியர்கள், தெரிவுசெய்யப்பட்ட விவசாய அமைப்புகளின் அங்கத்தவர்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக பூர்வாங்க கலந்துரையாடலொன்றை மேற்கொண்டு பாதுக்கை, சீத்தாவக்க, கெஸ்பாவை, மஹரகம ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் சேதன உர உற்பத்தியாளர்களின் இயலளவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- ஒரு கிராமத்திற்கு ஒரு தொழில்முயற்சியாளரை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்கு வழியமைத்து அவர்களின் உற்பத்தி இயலளவை அதிகரித்தல்.

சவால்கள்

- கொழும்பு மாவட்டத்தில் குடிசைவாசிகள் வாழும் பகுதிகளில் வீதிகளை அபிவிருத்திசெய்தல்.
- வசதியிற் குறைந்த வீடுகளில் வாழும் மக்களின் வீட்டு மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளை முன்னேற்றுதல்.
- பொதுமக்களின் குடிநீர்த் தேவைப்பாட்டைப் பூர்த்திசெய்தல்.
- மாவட்டத்தில் குறைந்த வருமானம்பெறும் மக்களின் வருமானத்தை அதிகரிக்கும்போது அவர்களை உற்பத்தித் துறைகளின்பால் ஈடுபாடுகொள்ளச்செய்தல்.
- அனுமதியற்ற மற்றும் வாடகை அடிப்படையில் வசிக்கும் குடியிருப்பாளர்களின் வீட்டு வசதிகளை முன்னேற்றுவதில் தற்போதுள்ள சட்டங்களில் காணப்படும் சிக்கல்கள்.

எதிர்கால இலக்குகள்

2022 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்படவுள்ள "கம சமக பிலிசந்தரக்" (கிராமத்துடன் ஓர் உரையாடல்) என்ற நிகழ்ச்சித்திட்டத்திற்கு 4,585 மில்லியன் ரூபா, பன்முகப்படுத்திய வரவுசெலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு 315 மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக கொழும்பு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதிஏற்பாடு 4,900 மில்லியன் ரூபாவாகும். சமூக நலனோம்புகை, பொது உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, சுற்றாடல், பேண்தகு மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதே இந்த அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதன் முக்கிய நோக்கங்களாகும்.

"கம சமக பிலிசந்தரக்" (கிராமத்துடன் ஓர் உரையாடல்) என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதிஒதுக்கீடுகள் பகிர்ந்து செல்லும் விதம் பின்வருமாறு:-

- கிராம அலுவலர் பிரிவுகள் வாரியாக - 1,671 மி.ரூ.
  (கி.அ.பிரிவொன்றுக்கு 03 மில்லியன் ரூபா வீதம் 557 பிரிவுகளுக்கும்)
- உள்ளூராட்சி வட்டாரங்கள் வாரியாக - 1212 மி.ரூ.
  (உள்ளூராட்சி மன்றத் தொகுதியொன்றுக்கு 4 மி.ரூ. வீதம்)
- பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரொருவருக்கு - 1300 மி.ரூ.
  (100 மி.ரூ. வீதம் 13 பேருக்கு)
- பிரதேச ஒருங்கிணைப்புக் குழு உப தலைவரொருவருக்கு 20 மி.ரூ. -
  வீதம் 18 பேருக்கும் குழுப் பிரதிநிதிகளுக்கும் - 0402 மி.ரூ.

மொத்தம் 4,585 மி.ரூ.
==========

அதேபோல் "கம சமக பிலிசந்தரக்" (கிராமத்துடன் ஓர் உரையாடல்) என்ற நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு 4 கூறமைதிகளின் கீழ் பகிர்ந்துசென்றுள்ள விதத்தை பின்வருமாறு காட்டலாம்:-

- ❖ சமூக நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டம் - 1834 மி.ரூ.
- ❖ பொது உட்கட்டமைப்பு வசதிகள் நிகழ்ச்சித்திட்டம் - 1834 மி.ரூ.
- ❖ சுற்றாடல் மற்றும் பேண்தகு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 485.5 மி.ரூ.
- ❖ சமூக நலனோம்புகை மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 485.5 மி.ரூ.

- அதேபோல் 2022 பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் 19 பேருக்கும் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்கள் 02 பேருக்கும் 15 மில்லியன் ரூபா வீதம் ஒதுக்கப்படும் 315 மில்லியன் ரூபாவுக்காக சமர்ப்பிக்கப்படும் கருத்திட்டப் பிரேரணைகளை அமுல்படுத்துவதன் மூலம் கிராமியப் பொருளாதாரத்தையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் சமூக அபிவிருத்தியையும் ஊக்குவித்தல்.
- மாவட்டத்தில் ஏற்கனவே சுயதொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களின் உற்பத்தியாளர்களின் ஏற்றுமதியை ஊக்குவித்தல்.
- மாவட்டத்திலுள்ள தரிசு நிலங்களை பயன்கூர் கருமங்களுக்கு ஈடுபடுத்திக்கொள்ளல்.
- கண்கவர் அலங்கார மீன்களின் உற்பத்தியை ஊக்குவித்து ஏற்றுமதி செய்வதற்கு வழியமைத்தல்.
- மீன்பிடித் துறையில் பெறுமதிசேர்க்கப்பட்ட உற்பத்திகளை மேம்படுத்துதல். (உதாரணமாக: கருவாடு, மாசி)
- மாவட்டத்தின் சேதன உரத் தேவையை மாவட்டத்தினுள் நிறைவேற்றிக்கொள்ளல்.
- பயிர்களுக்கு நீரை முறைப்படி விநியோகிக்கும் மாவட்டத்திலுள்ள குளங்களையும் நீர்த் தேக்கங்களையும் புனர்நிர்மாணம் செய்தல்.
- பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக அடையாளம் காணப்பட்ட கிராமிய விளையாட்டு மைதானங்களையும் பாடசாலை விளையாட்டு மைதானங்களையும் அபிவிருத்திசெய்தல்.
- கிராமியப் பொருளாதாரத்திற்கு வலுவூட்டுவதன் ஊடாக பேரண்டப் பொருளாதார (Macro Economy) நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு பங்களிப்புச் செய்தல்.
- கிராமியப் பொருளாதாரத்திற்கு வலுவூட்டி குடும்ப அலகுகளை வலுவூட்டும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்ப அலகுகளை வலுவூட்டி நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் செயல்முனைப்பிற்கு அவர்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளலும் சிறந்ததொரு வாழ்வுப் பாணியை ஏற்படுத்தலும்.
- "சௌபாக்கியா" அபிவிருத்திப் பணியகத்தினால் அமுல்படுத்தப்படும் 'சௌபாக்கியா' உற்பத்திக் கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வலுவூட்டுதல்.

2.3 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

சிறப்பான அடைவுகள்

01. கணக்காய்வுத் திட்டத்திற்கமைய மாவட்டச் செயலகத்திலும் ஆறு பிரதேச செயலகங்களினதும் பூரண கணக்காய்வுப் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் அனைத்து பிரதேச செயலகங்களின் வங்கி இணக்கங்களையும் கணக்காய்வுக்கு உட்படுத்தலும்.
02. கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின்போது எடுக்கப்படும் தீர்மானத்திற்கமைய நீண்டகாலம் அறவிடப்படாமல் இருந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.
03. அரச கணக்குகள் குழுவின் (COPA) கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பெர்து வைப்புக் கணக்கில் காணப்பட்ட காலாவதியான மீதிகளை உரிய திறத்தவர்களுக்கு கொடுப்பனவுசெய்வதற்கும் அரச வருமானத்திற்கு வரவுவைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்.
04. உள்ளகக் கணக்காய்வுச் சுற்றறிக்கைகளை வெளியிடுதல்.
05. மாவட்டச் செயலாளரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் பேரில் விசேட கணக்காய்வுப் பரிசோதனைகளை மேற்கொள்ளல்.
06. நடமாட்டம் மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதியினுள் மீகொட, இரத்மலானை, போகுந்தர, நாராஹேன்பிட்ட ஆகிய இடங்களிலுள்ள பொருளாதார மையங்கள் தொடர்பில் செய்யப்படும் மொத்த மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளுக்காக, அத்தியாவசிய உணவுப்பொருள்களை வழங்கும் வழங்குநர்களுக்கு அவசியமான ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரத்தை விநியோகித்தல்.
07. கொவிட்-19 அனர்த்த நிலைமைகளின் கீழ் மிகை விவசாய உற்பத்திகளை (மரக்கறிகள்/பழங்கள்) பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கும் நடவடிக்கைகள் சம்பந்தமாக உள்ளூராட்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
08. வெள்ளப்பெருக்கு காரணமாக சேதங்களை எதிர்நோக்கிய பிரதேசங்களுக்கு 'மனுசத் தெரண' மற்றும் டயலொக் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொருள்களைப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு நல்குதல்.
09. கூ.மொ.வி.நிலையத்தினால் வழங்கப்பட்ட ரூ.1,000 பெறுமதியான நிவாரணப்பொருள் பொதிகளைப் பகிர்ந்தளிப்பதற்கு அவசியமான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
10. கொழும்பு மாவட்டச் செயலகம், உள்நாட்டலுவல்கள் அமைச்சு, நுவரெலியா மாவட்டச் செயலகம் ஆகியன இணைந்து ஒழுங்குசெய்யும் மரக்கறிச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நிவாரணமளிக்கும் 'சஹன எலிய' என்ற நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல்.

11. பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல்

- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அலுவலர்கள், பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் 13 அலுவலர்கள், புலன்விசாரணைப் பிரிவின் அலுவலர்கள் ஆகியோருக்கு அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பற்றிய அறிவை வழங்குவதற்காக செயலமர்வொன்றை நடாத்துதல்.
- புலன்விசாரணைப் பிரிவின் அலுவலர்களுக்கும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அலுவலர்களுக்கும் புலன்விசாரணைகள் சம்பந்தமான அறிவை வழங்குவதற்காக செயலமர்வொன்றை ஒழுங்குசெய்தல்.
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு இணைக்கப்பட்ட 13 பிரதேச செயலகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட அலுவலர்களின் சேவை விளைவுப்பெருக்கத்தை அதிகரிக்கும் நோக்குடன் பெறுகை தொடர்பான செயலமர்வொன்றை நடாத்துதல்.
- கொழும்பு மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்களிலும் அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளர்கள், கணக்காளர்கள், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அலுவலர்கள், பிரிவுக்கு இணைக்கப்பட்ட 13 பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளின் அலுவலர்கள் ஆகியோருக்கு கருத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தலும் கணக்காய்வும் சம்பந்தமான செயலமர்வொன்றை நடாத்துதல்.

<u>சவால்கள்</u>

- பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், நான்கு அபிவிருத்தி அலுவலர்கள், மூன்று பட்டதாரிப் பயிலுநர்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குழுவினால் மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்களின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகளும் நிறைவேற்றப்படுதல். அவற்றை சீர்படுத்துவதற்கான பிரேரணைகளையும் சிபார்சுகளையும் மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவைக்கும்போது கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்வதற்குள்ள அலுவலகங்களின் எண்ணிக்கை, நோக்கெல்லையுடன் ஒப்பிடும்போது மனிதவளம் போதியதாக இராமை என்பவற்றின் அடிப்படையில் உள்ளகக் கணக்காய்வுக்காக ஒதுக்கப்பட்ட காலத்தை ஒரு சவாலாகக் குறிப்பிடலாம்.
- 2021 ஆம் ஆண்டில் காணக்கூடியதாக இருந்த கொவிட்-19 பரம்பலுடன் இயல்பு வாழ்வு சீர்குலைந்த மக்களுக்கும் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நிவாரணமளிக்கும் நடவடிக்கைகளுக்கு மத்தியில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கடமை அலுவல்களை தங்கு தடையின்றி நிறைவேற்றுதல்.

எதிர்கால இலக்குகள்

1. அரச கணக்குகள் குழுவின் (COPA) பணிப்புரைகளை அமுல்படுத்துதலும் DMA1/2019 இலக்கச் சுற்றறிக்கைக்கு அமைய காலாண்டுக்கு ஒரு முறை கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை (AMCM) நடாத்துதலும் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்தலும்.

2. உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 06/2018(1) ஆம் இலக்க, 2019.06.12 ஆம் திகதிய சுற்றறிக்கைக்கு அமைய மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச செயலகங்களின் பிராந்திய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களையும் நடாத்துதல்.
3. 2021 கணக்காய்வுத் திட்டத்திற்கமைய மாவட்டச் செயலகத்தினதும் அனைத்து பிரதேச செயலகங்களிதும் கணக்காய்வுப் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2.4 மாவட்ட பொறியியல் பிரிவு

சிறப்பான அடைவுகள்

1. மாவட்டச் செயலகக் கட்டிட முன்னேற்றக் கருத்திட்டங்களதும் உத்தியோகபூர்வ குடிமனைகளதும் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
2. உத்தியோகபூர்வ குடிமனைகளின் அனைத்து திருத்தப் பணிகளையும் நிறைவேற்றுதல்.
3. மாவட்ட விலை நிர்ணயக் குழுக் கூட்டத்தை ஆண்டுக்கு இரண்டு தடவைகள் நடாத்துதலும் உரிய காலத்துள் குறித்த அறிக்கையைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தலும்.
4. வேறு அமைச்சுக்களிலிருந்தும் திணைக்களங்களிலிருந்தும் கிடைக்கப்பெறும் கருத்திட்டங்களுக்குரிய மதிப்பீடுகளைத் தயாரித்து வழங்க நடவடிக்கை எடுத்தல்.
5. வேறு அமைச்சுக்களிலிருந்தும் திணைக்களங்களிலிருந்தும் கிடைக்கும் கருத்திட்டங்களுக்கான பெறுகை நடவடிக்கைகளும் கட்டுமானங்களை மேற்கொண்டு கையளித்தலும்.
6. பிரதேச செயலகங்களுக்குரிய கருத்திட்டங்களுக்கு அவசியமான கண்காணிப்பு நடவடிக்கைகளையும் பெறுகை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு கருத்திட்டங்களைப் பூர்த்திசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளல்.
7. மஹரகம பிரதேச செயலகத்தின் மின்தூக்கிகளை வழங்கல்செய்து பொருத்தியிணைக்கும் கருத்திட்டத்தின் கருத்திட்ட காலம் 06 மாதங்களாக இருந்தபோதும், உரிய காலத்திற்கு 2 மாதங்களுக்கு முன்பே கருத்திட்டத்தை முடிவுறுத்தல்.

<u>சவால்கள்</u>

1. டொலர் பற்றாக்குறை காரணமாக அரசாங்க இறக்குமதிகளுக்கு மட்டுப்பாடுகளை விதித்தலும் உள்ளூர் சந்தையில் வழங்கல் போதுமானதாக இராமையும் கட்டுமானப் பொருள்களை சந்தையில் தேடிப்பெறுவது மிகவும் சிரமமானதாக இருத்தலும்.
2. கட்டுமானப் பொருள்களின் விலைகள் துரிதமாக அதிகரித்தல்.
3. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமையைத் தொடர்ந்து கருத்திட்டப் பணிகளின் செயல்குன்றல் காரணமாக எதிர்பார்த்த நோக்கங்கள் அனைத்தையும் அடைந்துகொள்வதில் சிரமங்கள் காணப்படல்.
4. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமைக்கு முகங்கொடுத்து கடமை அலுவல்களை மேற்கொள்ள நேரிடுதல்.
5. நடமாட்ட மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதன் காரணமாக தொழிலாளர்களை வேலைத்தலங்களுக்கு வரவழைப்பதில் சிரமங்கள் காணப்படல்.

எதிர்கால இலக்குகள்

1. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமை காரணமாக பின்னடைவைச் சந்தித்த கருத்திட்டப் பணிகளை நிறைவேற்றுதல்.
2. உள்நாட்டலுவல்கள் அமைச்சினூடாக கிடைக்கப்பெறும் புதிய கருத்திட்டங்களை அமுல்படுத்துதல்.
3. வேறு அமைச்சுக்களும் திணைக்களங்களும் ஊடாக கிடைக்கப்பெறும் கருத்திட்டங்களை அமுல்படுத்துதல்.
4. கருத்திட்ட பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
5. 05 பிரதேச செயலகங்களின் (கெஸ்பாவை, பாதுக்கை, கடுவலை, மஹரகம, சீத்தாவக்க) மின்வலுத் தொகுதிகளுக்கான திட்டங்களை வகுத்தலும் திருத்த வேலைகளை முன்னெடுத்தலும்.
6. தொழில்நுட்ப அலுவலர்களதும் தொழில்நுட்ப உதவி அலுவலர்களதும் தொழில்நுட்ப அறிவை விருத்திசெய்யும் நோக்குடன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
7. மாவட்ட விலை நிர்ணயக் குழுக் கூட்டத்தை நடாத்தி உரிய காலத்திற்கு, உரிய நிறுவனங்களுக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.

2.5 சமூர்த்தி பிரிவு

சிறப்பான அடைவுகள்

1) "சமூர்த்தி அருணலு" என்ற வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாயம், மீன்பிடி, விலங்கு வளர்ப்பு, சந்தைப்படுத்தல், கைத்தொழில் அபிவிருத்தி ஆகிய துறைகளில் ரூ.81,343,651 தொகையைச் செலவிட்டு 1988 கருத்திட்டங்களை அமுல்படுத்துதல்.

- விவசாய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சீத்தாவக்க, கொலொன்னாவை, ஹோமாகம, பாதுக்கை ஆகிய பிரதேச செயலகங்களின் 118 பயனாளிகளுக்கு 118 கருத்திட்டங்களை அமுல்படுத்துதல்.
- விலங்கு வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் சீத்தாவக்க, ஸ்ரீ ஜயவர்தனபுர, ஹோமாகம, பாதுக்கை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளின் 71 பயனாளிகளுக்கு 71 கருத்திட்டங்களை அமுல்படுத்துதல்.
- மீன்பிடி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஸ்ரீ ஜயவர்தனபுர பிரதேச செயலகத்தின் 07 பயனாளிகளுக்கு 07 கருத்திட்டங்களை அமுல்படுத்துதல்.
- கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சீத்தாவக்க, ஸ்ரீ ஜயவர்தனபுர, கடுவலை, கொலொன்னாவை, தெஹிவளை, மொறட்டுவை, கெஸ்பாவை, ஹோமாகமை, மஹரகமை, திம்பிரிகஸ்யாய, பாதுக்கை, இரத்மலானை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளின் 1,242 பேருக்கு 1,242 கருத்திட்டங்களை அமுல்படுத்துதல்.
- சந்தைப்படுத்தல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு, சீத்தாவக்க, ஸ்ரீ ஜயவர்தனபுர, கடுவலை, கொலொன்னாவை, தெஹிவளை, மொறட்டுவை, கெஸ்பாவை, ஹோமாகம, திம்பிரிகஸ்யாய, பாதுக்கை, இரத்மலானை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் 545 பயனாளிகளுக்கு 545 கருத்திட்டங்களை அமுல்படுத்துதல்.

2) **சிறப்பான கருத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் -**

- சீத்தாவக்க, ஸ்ரீ ஜயவர்தனபுர, மொறட்டுவை, கெஸ்பாவை, ஹோமாகம, திம்பிரிகஸ்யாய, பாதுக்கை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் 27 பயனாளிகளுக்கு ரூ.1,353,876.00 தொகையைச் செலவிட்டு 27 கருத்திட்டங்களை அமுல்படுத்துதல்.
- சம்பிரதாய மற்றும் சம்பிரதாயமற்ற கைத்தொழில்கள் ஊக்குவிப்பின் கீழ் அழகுக்கலை நிகழ்ச்சித்திட்டம் சீத்தாவக்க, கொலொன்னாவை, மொறட்டுவை, கெஸ்பாவை, ஹோமாகம, மஹரகம, திம்பிரிகஸ்யாய, பாதுக்கை, இரத்மலானை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் ரூ.142,700.00 தொகையைச் செலவிட்டு 27 கருத்திட்டங்களை அமுல்படுத்துதல்.

3) **சமூர்த்தி வீட்டுத்தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் -**

- <u>கோழிக் குஞ்சுகளை வழங்குதல்</u>
  கோழிக் குஞ்சுகளை வழங்குவதன் கீழ் கொழும்பு, சீத்தாவக்க, ஸ்ரீ ஜயவர்தனபுர, கடுவலை, கொலொன்னாவை, மொறட்டுவை, கெஸ்பாவை, ஹோமாகம, மஹரகம, பாதுக்கை, இரத்மலானை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் 1,458 பயனாளிகளுக்கு ரூ.5,833,600.00 தொகையைச் செலவிட்டு 14,770 கோழிக் குஞ்சுகளைப் பகிர்ந்தளித்தல்.

- <u>தென்னம் பிள்ளைகளை வழங்குதல்</u>
  தென்னம் பிள்ளைகளை வழங்குவதன் கீழ் கொழும்பு மாவட்டத்தின் பிரதேச செயலாளர் பிரிவுகளில் 7,075 பயனாளிகளுக்கு 7,075 தென்னம் பிள்ளைகள் வழங்கப்பட்டன.

- <u>விதைப் பக்கற்றுக்களை வழங்குதல்</u>

  விதைப் பக்கற்றுக்களை வழங்குவதன் கீழ் கொழும்பு மாவட்டத்தின் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு ரூ.1,329,540.00 தொகையைச் செலவிட்டு 22,159 விதைப் பக்கற்றுக்கள் வழங்கப்பட்டன.

- <u>ஏற்றுமதிப் பயிர்ச்செய்கை</u>

  ஏற்றுமதிப் பயிர்ச் செய்கையின் கீழ் ஹோமாகம, ஸ்ரீ ஜயவர்தனபுர, பாதுக்கை, சீத்தாவக்க ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு ரூ.202,496.00 தொகையைச் செலவிட்டு 7,232 மிளகுச் செடிகளும் ரூ.48,996.00 தொகையைச் செலவிட்டு 2,722 கருவா மரக் கன்றுகளும் வழங்கப்பட்டன.

- <u>பழ மரக் கன்றுகளை வழங்குதல்</u>

  பழ மரக் கன்றுகளை வழங்குவதன் கீழ் கொழும்பு மாவட்டத்தின் பிரதேச செயலாளர் பிரிவுகளில் 23,418 வீட்டுத் தோட்டங்களுக்கு ரூ.5,539,848.00 தொகையைச் செலவிட்டு 45,488 பழ மரக் கன்றுகள் வழங்கப்பட்டன.

4) **சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

- **சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

"திரிய பியச" வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், கொழும்பு மாவட்டத்தின் சமூர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்காக அமுல்படுத்தப்படும் ஒரு நிகழ்ச்சித்திட்டமாகும். வீடொன்றை இழந்துள்ள, வீட்டில் குறைபாடுகள் நிலவுகின்ற, விதவைகள், கணவன் கைவிட்டுச்சென்ற, பயனாளி வலது குறைந்த மற்றும் மனநலம் குறைந்த பிள்ளைகள் இருக்கின்ற, பெண் பிள்ளைகள் அதிகமாக இருக்கின்ற பாதுகாப்பற்ற வீடுகள் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்படுவதற்கான அளவுகோள்களாகும். 2021 ஆம் ஆண்டில் 06 வீடுகளிலுள்ள 06 பயனாளிக் குடும்பங்களுக்கு 02 இலட்சம் ரூபா வீதம் 12 இலட்சம் ரூபா தொகை இதற்குச் செலவிடப்பட்டது. அதேபோல் 78 விசேட வீடுகளுக்கு 2 இலட்சம் ரூபா வீதம் ரூ.15,600,000.00 தொகை மாவட்டத்தின் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 06 இலட்சம் ரூபா வீதம் 10 வீடுகளுக்கு ரூ. 6,000,000.00 தொகை பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் மேற்கூறிய எல்லா வீடுகளும் வழங்கப்பட்ட தொகையை விடக் கூடுதலான முடிவுப் பெறுமானமொன்றினால் நிறைவுசெய்யத் துணிந்துள்ளது.

- **போதையூட்டும் ஒடளத தடுப்பு இல்லங்களின் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்**

மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2021 ஆம் ஆண்டில் கெஸ்பாவை பிரதேச செயலகப் பிரிவுக்கு மாத்திரம் ரூ.30,000.00 தொகை செலவிடப்பட்டது. அதன் ஊடாக போதையூட்டும் ஒளடதங்கள் தடுப்பு பற்றி சமூர்த்தி பயனாளிகளை அறிவுறுத்துவது மகிழ்ச்சிக்குரியது. குடும்ப வாழ்வொன்றைக் கழித்து சமூக ரீதியாக உயர் வாழ்வொன்றைக் கழிப்பது பற்றி இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக சுமார் 75 பயனாளிகள் அறிவுறுத்தப்பட்டனர்.

- **சமூர்த்தி சிறுவர் நூலகங்கள் நிகழ்ச்சித்திட்டம்**

சமூர்த்தி சிறுவர் சமூக நூலக ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 03 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்காக ஒன்றுக்கு ரூ.25,000.00 வீதம் ரூ.75,000.00 தொகை வழங்கப்பட்டுள்ளது. "சமூர்த்தி கெக்குலு" சிறுவர் கழகங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் வாசிப்பு ஆர்வத்தை விருத்திசெய்தல், வாசிப்பின் மீது ஆர்வத்தை ஏற்படுத்துவதன் ஊடாக அறிவு நிரம்பிய பிள்ளைகள் சந்ததியொன்றை எதிர்காலத்திற்கு அன்பளிப்புச்செய்வதே இதன் நோக்கமாகும். இதன் ஊடாக 300 க்கும் அதிகமான பிள்ளைகளுக்கு நன்மை கிட்டும். 03 நூலகங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- **துப்புரவேற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**

இதற்காக மலசலகூடமொன்று இல்லாத - தற்காலிக மலசலகூடங்கள் காணப்படும் - சமூர்த்தி உதவிபெறும் - குறைந்த வருமானம்பெறுவோருக்கு மலசலகூடமொன்றை அமைத்துக்கொள்வதற்கு ரூ.30,000.00 தொகை வழங்கப்பட்டது. அவ்வாறான 81 மலசலகூடங்களை அமைப்பதற்கு ரூ.2,430,000.00 தொகை மாவட்டத்தின் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சுகாதாரமான, ஆரோக்கியமான சமூகமொன்றை உருவாக்குவது இதன் நோக்கமாகும்.

கடந்தாண்டில் அமுல்படுத்தப்பட்ட மேற்குறித்த அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களையும் அதேபோல் கொரோனா பெருந்தொற்று காரணமாக அமுல்படுத்த முடியாமல் போன அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களையும் 2022 ஆம் ஆண்டில் வினைத்திறனாக அமுல்படுத்துவது சமூக அபிவிருத்திப் பிரிவின் தொலைநோக்காகும்.

5) சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம்

- சமூர்த்தி பயனாளிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் எதிர்நோக்கிய பிரச்சினைகளின் போதும், சிக்கல்களின் போதும் சமூகப் பாதுகாப்பொன்றை உறுதிசெய்யும் நோக்குடன் சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் சமூர்த்தி பயனாளிக் குடும்பங்களில் 227 பிள்ளை பிறப்புக்களுக்கு ரூ.2,270,000.00 தொகையும், சமூர்த்தி பயனாளிகளில் விவாகம் புரியம் 91 பேருக்கு ரூ.9,107,500.00 தொகையும் 2,897 மருத்துவமனையில் அனுமதிக்கப்படல்களின்போது ரூ. 12,203,700.00 தொகையும் 2,269 பயனாளிகளின் மரணங்களின் போது ரூ. 45,305,000.00 தொகையும் விசேட 23 பிள்ளை பிறப்புக்களின் போது ரூ.125,000.00 தொகையும் பயனாளிகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ளது.
- சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இயங்கும் 'சிப்தொர' புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் சமூர்த்தி பயனாளிக் குடும்பங்களைச் சேர்ந்த அனைத்துப் பிள்ளைகளுக்கும் மாதாந்தம் ரூ.1500.00 வீதம் இரண்டு வருடங்கள் முழுவதும் உதவுதொகை வழங்கப்படுகிறது. இதன்மூலம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் உயர்கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அவர்களை ஊக்குவிப்பது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. 2021 ஆம் ஆண்டில் 26,734 பிள்ளைகளுக்கு ரூ.40,101,000.00 தொகை வழங்கப்பட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் சமூர்த்தி பயனாளிகளுக்கான கொடுப்பனவுகளை துரிதமாகவும் வினைத்திறனாகவும் மேற்கொண்டு சமூர்த்தி பயனாளிக் குடும்பங்களுக்கு உயர்பட்ச சேவையொன்றை வழங்குவதே சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்காகும்.

6) சமுதாய அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டம்

- எல்லா விதத்திலும் வினைத்திறனான சமுதாய அடிப்படையிலான 30 சங்கங்களுக்கு ரூ.150,000 பெறுமதியான அலுவலக உபகரணங்களை வழங்குதல்.

7) சமூர்த்தி நிவாரண உரிமைப்பத்திரங்களை வழங்குதல்

குறைந்த வருமானம் பெறுவோர் சார்பாக சமூர்த்தி நிவாரணத்தை வழங்குதல் கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட குறைந்த வருமானம்பெறும் குடும்பங்களிலிலிருந்து குழுவொன்றினால் தெரிவுசெய்யப்பட்ட தகுதிபெற்ற குடும்பங்களுக்கு சமூர்த்தி நிவாரணம் மாதாந்தம் வழங்கப்பட்டது. ரூ.3500, ரூ.2500, ரூ.1500 என்ற அடிப்படையில் இந்நிவாரணங்கள் வழங்கப்பட்டன. 2021 டிசம்பர் மாதத்தில் 53,220 குடும்பங்களுக்கு ரூ.123,204,480.00 தொகை செலவிடப்பட்டது.

- மேலும் வறுமைநிலையை வெற்றிகொண்டு சமூர்த்தி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து விலகும் குடும்பங்கள், வலுவூட்டப்பட்டதன் அடிப்படையில் விலகும் குடும்பங்கள், சுயவிருப்புடன் நிவாரண உதவியை ஒப்படைக்கும் குடும்பங்களும் சார்பாக சமூர்த்தி பொற்சான்றிதழ்

பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 176 பொற்சான்றிதழ் பத்திரங்கள் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

8) சமூர்த்தி வங்கிச் சங்க நிகழ்ச்சித்திட்டம்

- சேமிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுவோரின் சேமிப்புக்களை ஊக்குவிப்பதற்காக நடாத்தப்படும் ஒரு நிகழ்ச்சித்திட்டமாகும். தற்போது கொழும்பு மாவட்டத்தின் குறைந்த வருமானம் பெறுவோரின் பின்வரும் கணக்குகளின் கீழ் அங்கத்தவர் வைப்புக்கள், அங்கத்தவர் அல்லாதவர்களின் வைப்புக்கள், பங்குகள், சிறுவர் வைப்புக்கள், 'திரிய மாத்தா' வைப்புக்கள், குழுநிலை வைப்புக்கள், நிலையான வைப்புக்கள் ஆகிய கணக்குகளின் கீழ் கணக்குகள் 2021.12.31 ஆம் திகதியன்று 635,191 தொகையும் 5,566,104,610.74 தொகை மீதியாக உள்ளது.
- கடன்வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுவோரின் வருமான மட்டத்தை முன்னேற்றுவதற்கு சமூர்த்தி வங்கிகளினால் நுண் நிதிக் கடன் வசதிகள் வழங்கப்படுகின்றன. இதனூடாக நானாவித கடன் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன., 2021 இறுதிப் பகுதியளவில் 516,954 கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் மொத்தத் தொகை, ரூ.15,719,809,349.30 ஆகும்.

<u>சவால்கள்</u>

- கொவிட்-19 பெருந்தொற்று பரவி வரும் ஒரு காலகட்டத்தில் கடமைகளை நிறைவேற்ற நேரிடுதலும் கொழும்பு மாவட்டம் ஆபத்து மிகுந்த ஒரு மாவட்டமாக மாறுதலும் அலுவலர்களை வரவழைப்பதை இடைக்கிடை மேற்கொள்ள நேரிடுதலும் போக்குவரத்துச் சேவைகள் இயங்காமையும் காரணமாக கடமைக்கு வரவழைக்கப்படுவதை மட்டுப்படுத்துதல்.
- கூட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக தொடர்பாடல் பிரச்சினைகள் ஏற்படுதல். (முன்னேற்ற மீளாய்வுகளுக்கும் விழிப்பூட்டல்களுக்கும்.)
- நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தி இலக்குகளை எய்துவதற்குத் தேவையான நிதிஏற்பாடுகள் உரிய நேரத்திற்கு கிடைக்காமை.
- நிதி ஏற்பாடுகளை வழங்கிய நிகழ்ச்சித்திட்ட்ங்களுக்கு ஆண்டும் இறுதி மாதங்களில் கட்டுநிதி கிடைப்பதன் காரணமாக நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும்போது பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுதல்.
- ஆபத்தான ஒரு சூழலில் கடமை அலுவல்களை மேற்கொள்ள நேரிடுதல்.
- கொழும்பு மாவட்டத்தின் கிராம அலுவலர் பிரிவுகளில் நிலவும் அலுவலர்களுக்கான பற்றாக்குறை.

எதிர்கால இலக்குகள்

1) சமூர்த்தி நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாதாந்த நிவாரண நன்மைகளை துரிதமாக பயனாளிகளுக்கு வழங்குதல்.

2) வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிராம அலுவலர் பிரிவு வாரியாக செயற்படுத்தப்படும் வீட்டுத்தோட்டங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல்.

3) தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் -

- "சமூர்த்தி அபிமான" 2022 சந்தை நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல்.
- புகையிரத நிலையங்களில் சமூர்த்தி விற்பனை நிலையங்களை ஆரம்பித்தல்.
- உள்நாட்டு இயற்கை மூலிகை உற்பத்திகளின் துணையுடன் அழகுக்கலைப் பயிற்சி.
- இணையத்தின் ஊடாக பண்டங்கள் விற்பனை.
- சமூர்த்தி வர்த்தக வலையமைப்பைப் பலப்படுத்தல்.
- சமூர்த்தி உற்பத்திகளுக்கு தர உறுதிப்பாட்டு மற்றும் தராதரச் சான்றுப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளல்.

4. சமூர்த்தி வீடமைப்பு லொத்தரும் "சௌபாக்கியா" விசேட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தலும்.

5. சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் -

- சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் "திரிய பியச" நிகழ்ச்சித்திட்டம், விசேட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், "சௌபாக்யா" சமூர்த்தி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்.
- போதையூட்டும் ஒடளத தடுப்பு வீட்டு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்.
- சமூர்த்தி சிறுவர் நூலக நிகழ்ச்சித்திட்டம்.
- துப்புரவேற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்.

6. சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சமூகப் பாதுகாப்பு நன்மைகளை துரிதமாக பயனாளிகளுக்கு வழங்குதல்.

7. சமூர்த்தி வங்கி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் -

- One Stop Shop நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்.
- கடன் நிகழ்ச்சித்திட்டத்தை ("மித்துரு நய", "அருணலு நய" மற்றும் ஏனைய கடன் வகைகளை) அமுல்படுத்தல்.
- சேமிப்புக்களை ஊக்குவித்தல்.

2.6 சிறுதொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவு

சிறப்பான அடைவுகள்

- 2021 ஆம் ஆண்டு கொழும்பு மாவட்டம் பூராவும் முக்கிய சவாலொன்றாக விளங்கிய கொவிட்-19 பிரச்சினைக்கு மத்தியிலும் 550 தொழில்முயற்சியாளர்களுக்கு பிரதேச விற்பனைச் சந்தையும் கண்காட்சிகளும் மூலம் எண்பத்தொரு இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா (81,75,000.00) வருமானமொன்றைப் பெற்றுத் தர முடிந்தமையும் அதனூடாக இருபத்தெட்டு இலட்சத்து இரண்டாயிரம் ரூபா (28,02,000) அளவான சந்தைத் தொடர்புகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தமையும்.

- 2021 ஆம் ஆண்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த காலப்பகுதியில் 48 தொழில்முயற்சியாளர்களுக்கு "Colombo Mobile Mart" எனும் நடமாடும் கருத்திட்டத்தின் மூலம் வருமானம் பெற்றுக் கொடுக்க முடிந்தமை.
- கொவிட்-19 மட்டுப்பாடுகளுக்கு மத்தியில் பாதிக்கப்பட்ட தொழில்முயற்சியாளர்களுக்கு புதிய 560 சந்தைப்படுத்தல் தொடர்புகளைப் பெற்றுக் கொடுக்க வாய்ப்பு கிடைத்தல் (உதாரணமாக: CIB, KEELS போன்றவை)
- பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக அனைத்துத் துறைகளதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு கிடைத்தமை. (உதாரணமாக: சமூர்த்தி அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், விவசாயத் தொழில்நுட்ப அலுவலர்கள்)
- கொழும்பு மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளும் அடங்குகின்றவாறு 8,000 க்கு மேற்பட்ட தொழில்முயற்சியாளர்களைக்கொண்ட இற்றைப்படுத்திய தரவுத் தளமொன்று காணப்படல்.
- இலங்கை எங்கும் பரந்துள்ள தொழில்முயற்சியாளர்கள், உற்பத்தியாளர்கள், சேவைநாடிகளை உள்ளடக்கிய அதிநவீன EASYBIZ APP க்கு முனைப்பான பங்களிப்பை வழங்க முடிந்தமை.
- கொழும்பு மாவட்டத்தில் தொழில்முயற்சியாளர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் SED Pages. கருத்திட்டத்தினூடாக 3000க்கும் அதிகமான SED Pages ஊடாக சமூக ஊடகங்களை பிரசித்தப்படுத்தல்.
- தற்போதைய பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும் அரச மற்றும் அரச சார்பற்ற வங்கிகளுடனான ஒத்துழைப்புடன் 83 தொழில்முயற்சியாளர்களுக்கு நிதி வசதியளிக்க முடிந்தமை.

சவால்கள்

- அபிவிருத்தி அலுவலர்களுக்கான வரையறுக்கப்பட்ட தொழில்நுட்ப வளங்கள் காணப்படல். (உதாரணமாக: கணினிகள், மடிக் கணினிகள்)
- நிதி நிறுவனங்கள் கடன் வழங்கும்போது ஏற்படும் தவறுகள் காரணமாக வியாபாரிகளுக்கு தமது வியாபாரத்திற்கு அவசியமான கடன் வசதி உரிய நேரத்தில் கிடைக்காமையினால் உரிய இலக்கை அடைந்துகொள்ள முடியாமல் போதல்.
- நகர்ப்புற மக்கள் சன அடர்த்தி மிகுந்த ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே, கொழும்பு, கொலொன்னாவை போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் தொழில்முயற்சியாளர்களுக்கு நிரந்தர வதிவிட முகவரி இன்மை காரணமாக வியாபாரங்களை நடாத்திச்செல்வதில் காணப்பட்ட சட்டப் பிரச்சினைகள் (வியாபாரப் பதிவு, மின் இணைப்புகளைப் பெற்றுக்கொள்ளும்)
- ஏற்பட்டுள்ள கொவிட்-19 பெருந்தொற்று நிலைமை காரணமாக திட்டமிட்டு அமுல்படுத்தப்படும் திட்டத்தை உரிய காலத்தில் அமுல்படுத்த முடியாமை.

எதிர்கால இலக்குகள்

- புதிய 110 தொழில்முயற்சிகளை ஆரம்பித்தல்.
- தற்போதுள்ள 660 தொழில்முயற்சிகளை அபிவிருத்திசெய்தல்.
- 220 சந்தைப்படுத்தல் தொடர்புகளைக் கட்டியெழுப்புதல்.
- 88 தொழில்முயற்சி ஆலோசனைகளை நடாத்துதல்.

- 110 தொழில்முயற்சிகளின் பதிவை மேற்கொள்ளல்.
- தொழில்நுட்பத்தை வழங்கும் 154 நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- பொதிகளைத் தயாரிக்கும் 88 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

2.7 மாவட்ட அளவை அலகு தரம் மற்றும் சேவைப் பிரிவு

சிறப்பான அடைவுகள்

01. செயல்திட்டத்திற்கு அமைய மாவட்டத்தில் வருடாந்தம் நிறுவை, அளவை உபகரணங்களை சரிபார்த்தலுக்கு உட்படுத்துவதன் மூலம் பெற்ற சரிபார்த்தல் வருமானத்தின் இலக்கிட்ட அளவு, முந்திய ஆண்டுக்கு ஒப்பீடாக 10% அதிகரிப்பதற்கு இருந்தபோதும் கொவிட்-19 பெருந்தொற்ற நிலைமைக்கு மத்தியில் கடமைகள் இடைநிறுத்தப்பட்ட ஒரு தருணத்தில் ஆண்டில் ஒழுங்குசெய்யப்பட வேண்டியிருந்த நடமாடும் சரிபார்த்தல் நிலையங்களைப் பூர்த்திசெய்ய முடியாமல்போனபோதும், அரசாங்கத்தின் சரிபார்த்தல் வருமானத்தை 87.2% ஆல் பெற்றுக்கொள்ள முடிந்தமை.
02. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியில் வர்த்தகங்களை அறிவுறுத்தும் நடவடிக்கைகளை சுகாதாரப் பாதுகாப்பான முறையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், ஒலிபெருக்கி இயந்திரமொன்றின் மூலம் இந்த அறிவுறுத்தல்களை விரிவுபடுத்தக்கூடியதாக இருந்தது. அதற்கமைய முந்திய ஆண்டுக்கு ஒப்பீடாக அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களின் அளவை 11% ஆல் அதிகரிக்க முடிந்தமை கிடைத்த ஒரு கடமைசார் வெற்றியாகும்.
03. கொவிட்-19 நிலைமையின் கீழ் சுற்றிவளைப்புக்களின் சதவீதத்தை 72.5% அளவில் மேற்கொள்ள முடிந்தது.

<u>சவால்கள்</u>

01. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியில் இவ்வாண்டில் முன்னைய ஆண்டின் சரிபாரத்தல் நிலையங்களை முன்னெடுத்துச் செல்வதற்கான புதிய முறையொன்றாக நடமாடும் வாகனத்தில் அலுவலகமொன்றிலிருந்து கிராமிய மட்டத்தில் இந்நிலையங்களை இயக்கிச்செல்லும் செயன்முறை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது. அதற்காக வசதியிற் குறைந்த இந்நடமாடும் சேவைக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை தலைமை அலுவலகம் வழங்க நடவடிக்கை எடுக்காமை காரணமாக அலுவலர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கியமையால் கடமையை மேற்கொள்வது சவாலானதாக இருந்தது.
02. நடமாடும் நிலையக் கடமைகளின் ஒழுங்கமைப்பு உள்ளிட்ட அனைத்துக் கடமைகளுக்கும் அலுவலகத்தில் கணினி வசதிகள் இல்லாதிருப்பதுடன், அங்கு கடமை ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளின்போது சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுவது சவாலானதாக இருந்தது.
03. சுற்றிவளைப்புக் கடமைகளை ஒழுங்கமைப்பதற்கு பணியாட்குழுவையே (14) எடுத்துச்செல்வதற்குப் போதியளவு போக்குவரத்து வசதிகள் இன்மையும் நடமாடும் சரிபார்த்தல் சேவையை வழங்கும் அவ்வாகனமே சுற்றிவளைப்பு கடமைகளுக்கு

பயன்படுத்தப்பட்டு வருவதால், நிலையக் கடமைகளின்போது சுற்றிவளைப்பு மற்றும் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத சுற்றிவளைப்பு இலக்குகளை அடைந்துகொள்வது சவாலானதாக இருந்தது.

எதிர்கால இலக்குகள்

- 2021 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக 2022 ஆம் ஆண்டுக்கு எத்தனித்த சுற்றிவளைப்புகளின் அளவை 5% இனாலும் தாக்கல்செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையை 5% இனாலும் அதிகரித்தல்.
- 2021 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக 2022 ஆம் ஆண்டில் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் அளவை 50% இனால் அதிகரிப்பதற்கு இலக்கிடப்பட்டுள்ளது.
- சரிபார்த்தல் வருமானத்தை 2021 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக 2022 ஆம் ஆண்டில் 10% இனால் அதிகரிப்பதற்கு இலக்கிடப்பட்டுள்ளது.

2.8 மாவட்ட விவசாயப் பிரிவு

சிறப்பான அடைவுகள்

- 2021 ஆம் ஆண்டுக்கு 04 மாவட்ட விவசாயக் குழுக்களை நடாத்துதல், விவசாயத்திற்கு ஏற்புடைய நிறுவனங்களின் முன்னேற்றத்தை மேற்பார்வைசெய்தல், பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கு அவசியமான ஒருங்கிணைப்பு அலுவல்களை மேற்கொள்ளல்.
- கொழும்பு மாவட்டத்தில் உள்நாட்டு கிழங்குப் பயிர் விஸ்தரிப்புக் கருத்திட்டத்தின் கீழ் பாதுக்கை, சீத்தாவக்க, ஹோமாகமை, கொலொன்னாவை, கடுவலை, கெஸ்பாவை ஆகிய பிரிவுகளின் தெரிவுசெய்யப்பட்ட 29 பேர் மூலம் 15 ஏக்கரில் கொடிக் கிழங்குப் பயிரை உருவாக்குதல். அதன் ஊடாக கிழங்குப் பயிர் நுகர்வை அதிகரித்தல், உயர் வருமானமொன்றைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக விவசாயிகளின் பொருளாதார, சமூக நிலைமைகளை மேம்படுத்தல்.
- உள்நாட்டு கிழங்கு வகைகளைப் பயன்படுத்தி பெறுமதிசேர்க்கப்பட்ட உணவுற்பத்திக்கு தொழில்முயற்சியாளர்கள் இருவரைப் பயிற்சிக்கு அனுப்பியதுடன், அத்தொழில்முயற்சியாளர்கள் இருவருக்கு நீருலர்த்தும் இயந்திரங்கள், மெலிதாகத் துண்டிக்கும் இயந்திரங்கள் மற்றும் அரைக்கும் இயந்திரங்களை 50% பயனாளிப் பங்களிப்பின் கீழ் வழங்குதல். அதன்மூலம் உள்நாட்டு கிழங்கு வகைகளை பயன்படுத்தி பெறுமதிசேர்க்கப்பட்ட உற்பத்திகளை மேற்கொள்வதன்பால் ஈடுபாடுகொள்ளச் செய்தல், நுகர்வோருக்கு நுகர்வை எளிதாக்குதல்.
- நகர வீடுகளில் செங்குத்தான இடப்பரப்புகளில் வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவித்தலும் பொகாசி கொம்போஸ்ட் முறையை அறிமுகப்படுத்தும் கருத்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு, கொலொன்னாவை, இரத்மலானை, மொறட்டுவை, தெஹிவளை, மஹரகம, கோட்டே ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் 160 பயனாளிகளுக்கு செங்குத்தான இடப்பரப்பு பயிர்த்தொகுதிகள், விதை மற்றும் நடுகைப்பொருள்கள், வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைசார் நூல்கள், 50% பயனாளிப் பங்களிப்பின் கீழ் வழங்குதல். அதன்மூலம் குறைந்த இடவசதிகொண்ட வீட்டவர்களை

வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையின்பால் ஈடுபாடுகொள்ளச்செய்தல், செங்குத்தான இடப்பரப்பில் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையை பிரபல்யப்படுத்தல்.

- சிறந்த விவசாய நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் கீரைப் பயிர்ச்செய்கையின் விளைச்சலை அளவுரீதியாகவும் பண்புரீதியாகவும் அதிகரிக்கும் கருத்திட்டத்தின் கீழ் மஹரகமை, கெஸ்பாவை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் 4 பயனாளிகளுக்கு GAP முறையின் கீழ் பயிர்களை நடுவதற்கு அவசியமான பொருள்களையும் உபகரணங்களையும் 50% பயனாளிப் பங்களிப்பின் கீழ் வழங்குதல். அதன்மூலம் நச்சுக் கலப்பற்ற மரக்கறி வகை உற்பத்தியின்பால் விவசாயிகளை ஈடுபாடு கொள்ளச்செய்தல்.
- தரிசு வயல்நிலங்களைப் பயன்பாட்டுக்கு உட்படுத்துவதன் மூலம் சோஜான் பயிரை முன்னேற்றுவதற்கான கருத்திட்டத்தின் கீழ் பாதுக்கை பிரிவில் சுமார் 15 வருடங்கள் தரிசு நிலமாகக் காணப்பட்ட சுமார் ஓர் ஏக்கர் விஸ்தீரணமான வயல்நிலமொன்றைப் பயன்பாட்டுக்கு உட்படுத்தி சோஜான் பயிர் மாதிரியொன்றை விவசாயிகள் இருவரின் பங்களிப்புடன் ஆரம்பித்தல். அதன்மூலம் தரிசு வயல்நிலங்களை பயிர்ச்செய்கைக்கு ஈடுபடுத்துவது சம்பந்தமாக விவசாயிகளையும் அலுவலர்களையும் அறிவுறுத்தலும் பயிர்ச்செய்கையில் ஈடுபடுதலும்.
- பசியிலை வீடுகளினுள் (Green House) கொச்சி செய்கையையும் சலாது இலை, கெக்கரிக்காய் செய்கை பண்ணும் கருத்திட்டத்தின் கீழ் பாதுக்கை பிரிவில் 03 பயனாளிகளுக்கு 03 பாதுகாப்பான வீடுகளுக்கு அவசியமான பொருள்களை 50% பயனாளிப் பங்களிப்பின் கீழ் வழங்குதல்.
- மீச்சந்தைகளுக்கு காளான் (Mushroom) செய்கைக் கருத்திட்டத்தின் கீழ் பாதுக்கை பிரிவின் 05 பயனாளிகளுக்கு 05 காளான் செய்கைபண்ணும் வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கு அவசியமான பொருள்களை 50% பயனாளிப் பங்களிப்பின் கீழ் வழங்குதல். இதன் ஊடாக புதிய பாணியில் காளான் கிண்ணங்கள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்மூலம் புதிய வகை காளான்களை வீட்டிலேயே அறுவடைசெய்து கொள்வதற்கு நுகர்வோருக்கு வாய்ப்புக் கிட்டுகின்றது.
- "கெக்குலு துரு உதான" தேசிய மரநடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டின் முதல் ஆண்டில் சேர்க்கப்பட்ட பிள்ளைகளுக்கு கொழும்பு மாவட்டத்தின் 388 பாடசாலைகளின் 29,839 பிள்ளைகளுக்கு பழ மரக் கன்று வீதம் வழங்குதல், பிள்ளைகளை சிறு பராயத்திலிருந்தே சூழல் நட்புறவானவர்களாக்குதல்.
- பேண்தகு வீட்டுத்தோட்டங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்தின் அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்குகின்றவாறு 46,000 விதைப் பக்கற்றுக்களை பகிர்ந்தளித்தல். அதனூடாக வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல்.

சவால்கள்

- உள்நாட்டு கிழங்கு வகைப் பயிர்க் கருத்திட்டத்தில் சில பயிர்களுக்கு நோய்களும் பீடைகளினால் சேதமும் ஏற்படுதல்.

- கொவிட் பெருந்தொற்று நிலைமை காரணமாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் வெளிக்கள விஜயங்களுக்கும் விவசாயிகளை ஒன்றுதிரட்ட முடியாமல் இருந்தமை.
- சில கருத்திட்டங்களுக்கு 50% பயனாளிப் பங்களிப்பின் கீழ் விவசாயிகளை இணைத்துக்கொள்ள முடியாதுள்ளமை.

எதிர்கால இலக்குகள்

- 2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களை தொடர் கண்காணிப்பின் மூலம் வெற்றிகரமாக அமுல்படுத்துதல்.
- தரிசு வயல் நிலங்கள் சார்ந்த சோஜான் பயிர் அல்லது வேறு பயிர்களை வளர்த்து பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படாத வயல்களின் அளவைக் குறைத்தல்.
- சிறந்த விவசாய நடைமுறைகளை (GAP) அனுசரிக்கும் பயிர் நடைமுறைகளுக்கு விவசாயிகளை வழிப்படுத்துதல்.
- இளைஞர் சமூகத்தை விவசாயத்தின் மீது ஆர்வமுள்ளவர்களாக்கும் நோக்குடன் கருத்திட்டங்களை வகுத்தமைத்தல்.
- விவசாய நடவடிக்கைகளின் டிஜிட்டல்மயமாக்கத்திற்கு முன்னுரிமையளித்தல்.

2.9 மாவட்ட புள்ளிவிவரப் பிரிவு

சிறப்பான அடைவுகள்

1. அளவை நடவடிக்கைகளை வெற்றிகரமாகவும் உரிய முறையிலும் நிறைவேற்றுதல்.
2. ஆற்றுப்படுத்தப்பட்ட பட்டியல்படுத்தல்களையும் இற்றைவரைப்படுத்தல்களையும் உரிய முறையில் பூர்த்திசெய்தல்.

<u>சவால்கள்</u>

1. கொவிட்-19 பெருந்தொற்று, ஊரடங்குச் சட்ட சவாலுக்கு மத்தியிலும் அளவை நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்ளல்.
2. கொவிட்-19 பெருந்தொற்று மற்றும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்ட சவால்களுக்கு மத்தியில் முன்வைக்கப்பட்ட பட்டியல்படுத்தல்களை இற்றைவரைப்படுத்தல்.

எதிர்கால இலக்குகள்

1. கொவிட்-19 பெருந்தொற்று சவாலுக்கு மத்தியிலும் 2021 குடிசன மற்றும் வீடுகளின் கணக்கெடுப்பை வெற்றிகரமாக பூர்த்திசெய்தல்.
2. ஆண்டுக்குரிய ஏற்புடைத்தான அளவை நடவடிக்கைகளின் பட்டியல்படுத்தல்களை இற்றைவரைப்படுத்தல்களை நிறைவேற்றுதல்.

2.10 ஆராய்ச்சி மற்றும் தொடர்பாடல் பிரிவு

சிறப்பான அடைவுகள்

1. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமையிலும் நிகழ்நிலை (Online) முறையின் ஊடாக வழங்குநர்களின் பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமையிலும் அவசியமான கருத்தரங்கு நடவடிக்கைகளை நிகழ்நிலை ஊடாக வெற்றிகரமாக நடாத்துதல்.
3. அஞ்சல் நடவடிக்கைகளை மிகவும் கவனமாக மேற்கொள்வதற்கும் அதில் முறைவலுவை ஏற்படுத்துவதற்கும் அஞ்சல் கணினித் தரவு முறைமையொன்றை அறிமுகப்படுத்தல்.

சவால்கள்

1. அலுவலர்களின் கணினிப் பாவனை பற்றிய அறிவு தாழ்ந்த மட்டத்தில் காணப்படல்.

எதிர்கால இலக்குகள்

1. இணையத்தளத்தை இற்றைவரைப்படுத்தி பேணுதல்.
2. நிகழ்நிலை நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல்.
3. மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான கணினி மற்றும் கணினி வலையமைப்புகளை வெளித் திறத்தவர்களின் தலையீடின்றி எமது பிரிவினாலேயே செலவின்றி வினைத்திறனான பயனுறுதிவாய்ந்த விதத்தில் நிறைவேற்றலும் பராமரித்தலும்.
4. மாவட்டச் செயலகத்தின் அனைத்து கிராபிக் வரைகலையாக்கப் பணிகளையும் நிறைவேற்றுதல்.

2.11 மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் பிரிவு

சிறப்பான அடைவுகள்

- 2020 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட கிராமிய மட்டத்திலான காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல்களின் காணிப் பயன்பாட்டை கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் கீழ் அமுல்படுத்தக்கூடிய முன்மொழிவுகளையும் சிபார்சுகளையும் அமுல்படுத்துவதன் கீழ் கடுவலை, கெஸ்பாவை ஆகிய இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுகளின் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.
- சீத்தாவக்க பிரதேச செயலாளர் பிரிவின் இலுக்பிட்டிய தொல நுண் நீரேந்து பகுதிக்கு காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் சிபார்சுகளை அமுலுக்குக் கொண்டுவர்கூடியதாக இருந்தது. (31 பயனாளிகள்)
- ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவின் ஏழு (07) பயனாளிகளதும் பாதுக்கை பிரதேச செயலாளர் பிரிவின் எட்டு (08) பயனாளிகளதும் குறை பயன்பாட்டு விவசாயக் காணிகளிலும் மண் மற்றும் நீர் பேணல் முறைகளை ஈடுபடுத்துவதன் மூலம் நிலத்தை உயர் பயன்கூர் மட்டமொன்றுக்கு மேம்படுத்த முடிந்தமை.
- கொழும்பு மாவட்டத்தின் இளம் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்குமுகமாக அரச காணிகளை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நேர்முகப் பரீட்சை நடாத்தி புதிய காணிகளைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தகுதிபெற்ற 684 விண்ணப்பகாரர்களைத் தெரிவுசெய்து காணிகளைக் கோரும் குறித்த மாவட்டங்களுக்கு ஆற்றுப்படுத்தல்.
- கொழும்பு மாவட்டத்திலுள்ள பயன்பாடு குறைந்த காணிகளை அடையாளம் காண்பதன் கீழ் 2021.12.15 அன்றுள்ளவாறு 990.359 ஹெக்டேயர் காணிகளை அடையாளம் காணல்.

சவால்கள்

- கொழும்பு மாவட்டத்தின் இளம் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு அரச காணிகளைப் பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தகுதிபெறும் விண்ணப்பகாரர்களுக்கு பொருத்தமான அரச காணிகளைத் தெரிவுசெய்தல்.
- கொழும்பு மாவட்டத்தின் நீரேந்து பகுதிகளின் பேணுகைக்காக காணிப் பயன்பாட்டுத் திட்டமிடலை அமுல்படுத்துதல்.
- கொழும்பு மாவட்டத்தின் கிராமிய மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடலை அமுல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- கொழும்பு மாவட்டத்தின் குறைந்த பயன்பாட்டு விவசாயக் காணிகளின் விளைவுப்பெருக்கத்தை அதிகரித்தல்.

எதிர்கால இலக்குகள்

- சீத்தாவக்க, பாதுக்கை, ஹோமாகம ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் 03 கிராமிய காணிப் பயன்பாட்டுத் திட்டங்களை வகுத்தமைத்தல்.
- தேசிய காணிப் பயன்பாட்டு அளவையொன்றை மேற்கொள்ளல் (13 பி.செ.பிரிவுகள்)
- பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டமிடலை இற்றைவரைப்படுத்தல். (07 பி.செ.பிரிவுகள்)
- காணி உரித்தும் உரிமையும் பற்றிய அளவையொன்றை மேற்கொள்ளல்.
- பயன்பாட்டுக்குப் பெற முடியாத எனினும் பயன்பாட்டுக்குப் பெறப்படாத குறை பயன்பாட்டுக் காணிகளை அடையாளம் காணலும் சிபார்சுகளை வழங்குதலும்.

2.12 வெடிபொருள்கள் கட்டுப்பாட்டுப் பிரிவு

சிறப்பான அடைவுகள்

- கொவிட் பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியிலும் வெடிபொருள் அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதன் ஊடாக கைத்தொழில்களை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக இருந்தது.
- கொவிட் பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியிலும் வெடிபொருள் அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதன் ஊடாக அனுமதிப்பத்திரதாரர்களின் கைத்தொழில் மற்றும் சேவைகளை தொடர்ச்சியாக பேணக்கூடியதாக இருந்தது.
- சேவைநாடிகள் பற்றிய தகவல் தொகுதியொன்றைப் பேணி நிகழ்நிலைப்படுத்தல்.
- வெடிபொருள் பரிசோதகர்களாக விசேட பொலிஸ் அலுவலரொருவரை ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திற்கும் அறிமுகப்படுத்தலும் அதன் ஊடாக மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.
- வெடிபொருள்களைப் பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கும் வழங்கலை மேற்கொள்ளும் உரிமைப்பத்திரதாரர்களுக்கும் நிகழ்நிலை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்றை முன்னெடுத்தல்.

சவால்கள்

- இன்றைய கொவிட் பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியில் கைத்தொழில் நிலையங்களை அடிக்கடி மேற்பார்வை செய்ய முடியாமல் இருத்தல்.
- வெடிபொருள்களைப் பயன்படுத்துவோரை அறிவுறுத்துவோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அணிதிரட்ட முடியாதுள்ளமை.
- கொழும்பு மாவட்டத்தில் வெடிபொருள்களை முறையாகவும் உரிய தொழில்நுட்ப முறைகளின் கீழும் களஞ்சியத்திடலும், களஞ்சியத்திடுவதற்காக களஞ்சியசாலைத் தொகுதியொன்றை அமைப்பதற்கு உகந்த அரச காணியொன்றின் ஒரு பகுதியைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளமையும்.
- தகவல் தொகுதிக்கு சேவைநாடிகளை உற்சாகப்படுத்தலும் அதற்கு ஆற்றப்படுத்தலும்.

எதிர்கால இலக்குகள்

- தற்போது 04 பொலிஸ் நிலையங்களில் பேணப்பட்டுவரும் வர்த்தக வெடிபொருள்களை களஞ்சியசாலையிலிருந்து அகற்றி முறைசார்ந்த, உரிய தொழில்நுட்ப நிலைமைகளைக் கொண்ட களஞ்சியசாலைத் தொகுதியொன்றை நிர்மாணித்தல்.
- மாவட்டத்தினுள் வெடிபொருள்களைப் பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களின் வெடிபொருள் களஞ்சியசாலைகளை நவீனமயப்படுத்தலும் முறைவலுப்படுத்தலும்.
- தகவல் முறைமையைப் பூர்த்திசெய்து இணையத்தின் ஊடாக வெடிபொருள்களுக்கான கோரிக்கைகளை வீட்டிலிருந்தே மேற்கொள்வதற்கு வசதியளித்தல்.
- தகவல் முறைமையை முழுமையாக்கி இணையத்தின் ஊடாக வெடிபொருள்களுக்கான கோரிக்கைகளை வீட்டிலிருந்தே மேற்கொள்வதற்கு வசதியளித்தல்.
- சேவைநாடிகள் அனைவருக்கும் துரிதமாக தேவைப்படும் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.
- சேவைநாடிகளின் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

2.13 மாவட்ட உரப் பிரிவு

சிறப்பான அடைவுகள்

- 2020 ஆம் ஆண்டுக்கு இணையாக 2021 ஆம் ஆண்டிலும் கொவிட்-19 பெருந்தொற்று நிலைமைக்கு முகங்கொடுத்து விவசாயிகளுக்குத் தேவையான உர விநியோகம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. 07 உர ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள், 11 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள், 04 உரக் கம்பனிகளுடன் நடைபெற்ற கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.
- ''சுபீட்சத்தின் நோக்கு'' கொள்கைப் பிரகடனத்திற்கமைய பசுமை விவசாயமொன்றை ஏற்படுத்துவதற்கான அரச கொள்கைகளுக்கமைய 2021 பெரும்போகத்திலிருந்து சுற்றாடல் நட்புறவான உரப் பாவனை மூலம் பயிரிடும் முறை அமுலில் இருந்தது. அதன்படி கொழும்பு மாவட்டத்தில் 14 சேதன உர தொழில்முயற்சியாளர்கள் புதிய உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

- 2021 பெரும்போகத்திற்கு தேசிய உரச் செயலகத்தின் 07 உரிமம் பெற்ற கம்பனிகள் விவசாய இராஜாங்க அமைச்சின் கீழ் கொழும்பு மாவட்டத்தின் நெற்செய்கைக்கு சேதன உரத்தை வழங்குவதற்குத் தகுதி பெற்றன. அதன் பிரகாரம் 2021/2022 பெரும்போகத்திற்கு முக்கியமாக உரத் தேவை, திண்ம மற்றும் திரவ என்ற என்ற அடிப்படையில் அவ்வுரக் கம்பனிகளினால் பூர்த்திசெய்துகொள்ளப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டின் சிறு போகத்தின்போது 2374.4 ஹெக்டேயர் வயற்காணிகளுக்கு 6,590 விவசாயிகள் மத்தியில் 486.329 மெ.தொன் உரத்தை இலவசமாக விநியோகித்தல்.
- 2021 ஆம் ஆண்டின் பெரும்போகத்தின்போது 3854.0 ஹெக்டேயர் வயற்காணிகளை 9945 விவசாயிகளுக்கு 306.85 மெ.தொ. சுற்றாடல் நட்புறவான சேதன திண்ம உரம், 290817 லீட்டர் சேதன திரவ உரம், 179.75 மெ.மொ. KCl MOP என்ற அடிப்படையில் விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகித்தல்.
- நெல் மானியம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திண்ம கொம்போஸ்ட் உரத்திற்காக 2,127,500.00 ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்று 3,073.88 ஹெக்டேயர் வயற்காணிகளுக்காக 8,132 விவசாயிகள் மத்தியில் விநியோகிக்கப்பட்டது.
- விநியோகிக்கப்பட்ட உர வகைகளின் தரத்தை உறுதிசெய்வதற்காக வெளிக்கள மட்டத்தில் 205 உர மாதிரிகளைப் பெற்றுக்கொண்டு ஆய்வுகூடத்திற்கு அனுப்புதல்.

03. உர முயற்சியாண்மை பணியில் ஈடுபட்டிருக்கும் தொழில்முயற்சியாளர்களைப் பதிவுசெய்தல்

- மாவட்டத்தின் சுற்றாடல் நட்புறவான 14 உர உற்பத்தியாளர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கலும் 28 உர புதிய உற்பத்தி நிறுவனங்கள் அடங்கலாக 42 தொழில்முயற்சியாளர்களைப் பதிவுசெய்தலும்.
- சிறுபோகத்திலும் பெரும்போகத்திலும் 15 கமநல சேவை நிலையங்களிலும் 29 உர உற்பத்தி நிறுவனங்களிலும் 47 தனியார் உர விற்பனை நிலையங்களிலும் 91 இருப்பு சரிபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

சவால்கள்

- கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக போதிய அளவில் வெளிக்களப் பணிகளில் ஈடுபட முடியாமை.
- சுற்றாடல் நட்புறவான உரத்தைப் பயன்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக இரசாயன உரத்தை விற்பனை நிலையங்களிலும் களஞ்சியசாலைகளிலும் பரிசோதிப்பதை மட்டுப்படுத்தியதன் காரணமாக உள்ளபடியான விளைவு சதவீதம் முன்னைய போகங்களுக்கு ஒப்பீடாக வீழ்ச்சியடைதல்.

எதிர்கால இலக்குகள்

- 2020 ஆம் ஆண்டளவில் இரசாயன உரப் பாவனையைக் குறைத்து 100% சேதன உரப் பாவனையை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டபோதும், 2021 ஆம் ஆண்டு முதல் நெற்சாகுபடிக்காக முற்றிலும் சேதன உரப் பாவனையில் கவனம் செலுத்தப்பட்டது. தொடர்ச்சியாக எதிர்வரும் ஆண்டுகளிலும் அதனை முன்னெடுத்துச் செல்லல்.
- 2022 சிறுபோகத்தில் சேதன உரப் பாவனையின் மூலம் 2809.2 ஹெக்டேயர் வயல் நிலங்களில் சாகுபடி செய்தல்.

- மாவட்டத்தின் உரத் தேவையைப் பூர்த்திசெய்து தொடர்ச்சியாக உர உற்பத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கு இயந்திரங்களுக்கு/ உபகரணங்களுக்கான கிரயம் சார்பாக நிவாரணமளிப்பதன் ஊடாக உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல்.
- மாவட்டத்தின் வீடுகள் தோறும் சேதன உர உற்பத்தி அலகொன்றை அறிமுகப்படுத்தல்.
- அத்தியாவசியமான ஏனைய பயிர்களுக்குத் தேவையான இரசாயன உரத்தை திறந்த சந்தையிலிருந்து பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தல்.

2.14 பௌத்த அலுவல்கள் பிரிவு

சிறப்பான அடைவுகள்

1. கொழும்பு மாவட்டத்தில் தகுதிபெற்ற 9,477 தஹம் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு அறநெறிப் பாடசாலை ஆசிரியர் கொடுப்பனவாக ரூபா ஐயாயிரம் வீதம் வழங்குதல்.
2. 2021 கொழும்பு மாவட்ட தஹம் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்-மாணவர் தொகை கணக்கெடுப்பு அறிக்கையைத் தயாரித்தல்.
3. அபிவிருத்தி குறைந்த விஹாரைகள், அபிவிருத்தி குறைந்த அறநெறிப் பாடசாலைகள், 65 "புண்ய கிராம" எனும் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 13 நிதி ஏற்பாட்டுப் பிரிவுகளும் பகிர்ந்தளித்தல்.
4. தஹம் சரசவிய உயர்ல் டிப்ளோமா பாடநெறியின் 2021/2022 கல்வி ஆண்டை 161 மாணவர்களைக் கொண்டு ஆரம்பித்தல்.
5. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியில் உணவு, பானம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் போதியளவு இன்றிய 28 பிரிவேணாக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்பாடுசெய்து கொடுத்தல்.

சவால்கள்

அபிவிருத்திப் பணிகளை எதிர்பார்த்து பெரும் எண்ணிக்கையான விஹாரைகளும் தஹம் அறநெறிப் பாடசாலைகளும் விண்ணப்பித்திருப்பதன் காரணமாக கிடைக்கப்பெறும் நிதியை முகாமை செய்துகொண்டு மிகவும் பொருத்தமான கருத்திட்டங்களுக்கு முந்துரிமையளித்தல்.

எதிர்கால இலக்குகள்

பேண்தகு அபிவிருத்தியின்போது தனிமனித ஆன்மிக விருத்தியின் மீது கவனம் செலுத்தி அதற்குரிய பணிகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்து அமுல்படுத்துதல்.

2.15 சமூக சேவைப் பிரிவு

சிறப்பான அடைவுகள்

1. வலதுகுறைந்த சுமார் 80 இளைஞர் யுவதிகளை தொழில் திறன் விருத்தியுடன் தொழில்களில் ஈடுபடுத்தல் (சுமார் 30 தொழிற்பயிற்சிப் பாடநெறிகள்)
2. வலதுகுறைந்த சுமார் 75 பேருக்கு அடிப்படை மற்றும் அவசரத் தேவைகளை நிறைவுசெய்து கொள்வதற்கு உதவிகளை வழங்குதலும், அவர்களின் நலனோம்பல் வசதிகளை உறுதிசெய்தலும் (வீடு, கொமட் பொருத்திய மலசலகூடம், அணுகும் வசதிகள், வீட்டுக்கு நீரும் மின்சாரமும், காற்று மெத்தைகள், நீர் மெத்தைகள், சுகாதார வசதிகள் மற்றும் கல்வி உதவிகளை வழங்குதல்.)
3. வலதுகுறைந்த 3,181 பேருக்கு ரூ.5000 மாதாந்த வாழ்வாதார உதவியை வழங்குவதன் ஊடாக அவர்களின் வறுமைநிலையைத் தணித்தல்.
4. தனித்த பெற்றாருள்ள 75 குடும்பங்களுக்கு நிதி மற்றும் வேறு தேவையான நிவாரண சேவைகளை வழங்குவதன் ஊடாக அவர்களின் வறுமைநிலையைத் தணித்தல்.
5. 70 வயதுக்கு மேற்பட்ட 18,050 பேருக்கு ரூ.2000 வீதம் மாதாந்த வாழ்க்கை உதவிப் படியை வழங்குவதன் ஊடாக அவர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்தல்.
6. 100 வயது நிரம்பிய 32 முதியவர்களுக்கு ரூ.5000 வீதம் நூற்றாண்டைப் பூர்த்திசெய்தவர்களுக்கான கொடுப்பனவை வழங்குதல்.
7. 60 வயதுக்குக் கூடிய முதியவர்களுக்கு பல்வேறு உதவிகளை (சுயதொழில், கொமட் பொருத்திய மலசலகூடங்கள், வீடு திருத்தம்) வழங்குவதன் மூலம் அவர்களின் நலனோம்பல் வசதிகளை உறுதிப்படுத்தல்.
8. சுமார் 160 வலதுகுறைந்தவர்களுக்கு உபகரணங்களை வழங்குதல் (சக்கர நாற்காலி, மூவுருளி, கைவலம், ஊன்றுகோல், வோக்கர், நீர்/வாயு மெத்தை, மூக்குக் கண்ணாடி, செவிப்புல துணைக் கருவி), 8,289 பேருக்கு பொதுசன உதவியும், 2,058 பேருக்கு புற்றுநோய் மானியமும், 16 பேருக்கு காசநோய் மானியமும், 35 பேருக்கு தொழுநோய் மானியமும், 27 பேருக்கு தலசீமியா மானியமும், 1,034 தந்தையை இழந்த பாடசாலைப் பிள்ளைகளுக்கு கல்வி மானியமும் மேல்மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படல்.

<u>சவால்கள்</u>

1. கொரோனா பெருந்தொற்று பரவல் காரணமாக 2021 ஆம் ஆண்டில் பொதுக் கூட்டங்கள். சேவைகள், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் யாவற்றையும் நிறுத்த நேரிடுதல்.
2. நிதி ஏற்பாடுகள் போதியதாக இராமை.
3. தொழில் தகைமைகளுடன்கூடிய மனிதவளம் பற்றாக்குறையானதாக விளங்குதல்.
4. அலுவலர் பற்றாக்குறை.
5. சில அலுவலர்களின் கடமை மீதான உற்சாகமும் அர்ப்பணிப்பும் குறைவடைதல்.
6. அலுவலர்களின் உந்துகை குறைவு, அடியோடு அழிக்கப்படும் பதில்குறிப்புகளும் செல்வாக்குகளும் காணப்படல்.
7. கடமைகளுக்கு அவசியமான வசதிகள் குறைவாக இருத்தல் (போதிய இடவசதி, தொலைபேசி, தொலைநகல், கணினி, அச்சீட்டுப் பொறி முதலிய)
8. வெளிக்கள அலுவலர்களுக்கு பயணச்செலவுகள் போதியதாக இராமை.
9. சமூகத்தின் நேர்மறை மனப்பாங்குகளும் பங்கேற்பும் குறைவடைதல்.

10. சமூக சேவைகள், நலனோம்புகை மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்போது நிவாரண, அபிவிருத்தி சார்ந்த அணுகுமுறைகளைக் கையாளாமை, புத்தறிவு, அபிவிருத்திப் படிவங்கள், மாதிரிகளைக் கையாளாமை, செயலாற்றுகை ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படாமை.

எதிர்கால இலக்குகள்

1. கடும் வறுமைக் கோட்டின் கீழ் மட்டத்திலிருக்கின்ற (1.25/குறைந்த) வலதுகுறைந்த நிலையிலுள்ள அனைவருக்கும் ரூ.5000 வீதம் மாதாந்த சீவன உதவியை வழங்கி அவர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்தல்.
2. கடும் வறுமைக் கோட்டின் கீழ் மட்டத்திலிருக்கின்ற (1.25/குறைந்த) 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர் அனைவருக்கும் ரூ.2000 வீதம் மாதாந்த சீவன உதவியை வழங்கி அவர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்தல்.
3. கடும் வறுமைக் கோட்டின் கீழ் மட்டத்திலிருக்கின்ற (1.25/குறைந்த) பெண்களைக் குடும்பத் தலைவியாகக் கொண்ட குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு ரூ.25,000 சுயதொழில் உதவியை வழங்குதலும் அவர்களின் பாடசாலை செல்லும் வயதுப் பிள்ளைகளுக்கான நிதியுதவியை (மாதமொன்றுக்கு குடும்பமொன்றுக்கு ரூ.2,500) வழங்கி அவர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்தலும்.
4. கடும் வறுமைக் கோட்டின் கீழ் மட்டத்திலிருக்கின்ற (1.25/குறைந்த) வலதுகுறைந்த நிலையிலுள்ள 50% சதவீதமானவர்களின் காணி உரித்து, வீட்டு உரித்து, வீட்டில் அணுகுவதற்கான வசதிகள் என்பவற்றை உறுதிசெய்தல்.
5. வலதுகுறைந்த நிலையிலுள்ள ஆட்கள் அனர்த்தமொன்றுக்கு உள்ளாகும் ஆபத்துநிலையைக் குறைப்பதற்கு விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தலும் அனர்த்தமொன்றின்போது வலதுகுறைந்த நிலையிலுள்ள ஆட்களுக்கு ஏற்படக்கூடிய பாதக தாக்கங்களைக் குறைப்பதற்கான முறைமைகளை ஏற்படுத்தலும்.
6. வயதுமுதிர்ந்த ஆட்கள் அனர்த்தமொன்றுக்கு உள்ளாகும் ஆபத்துநிலையைக் குறைப்பதற்காக விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தலும் அனர்த்தமொன்றின்போது வயது முதிர்ந்தவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதக தாக்கங்களைக் குறைப்பதற்கான முறைமைகளை ஏற்படுத்தலும்.
7. வயதுமுதிர்ந்த ஆட்கள் அனர்த்தமொன்றுக்குள்ளாகும் ஆபத்துநிலையைக் குறைத்தலும் அனர்த்தமொன்றின்போது அவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பைக் குறைத்தலும் அனர்த்த ஆபத்தைக் குறைப்பதற்கான சென்டாய் செயல் சட்டகம் பற்றி சமூக சேவை அலுவலர்களைப் பயிற்றுவித்தலும்.
8. விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மற்றும் அதற்கான வசதிகள் கொண்ட வலதுகுறைந்த நிலையிலுள்ள ஆட்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் விவசாய உற்பத்திகளை ஊக்குவிப்பதன் ஊடாகவும் வலதுகுறைந்த நிலையிலுள்ள உணவு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை முன்னேற்றுவதன் ஊடாகவும் அவர்களின் உற்பத்தித் திறனையும் வருமானத்தையும் இரட்டிப்பாக்கல்.
9. நோய்த்தடுப்பு, வீதி விபத்துக்களைத் தடுத்தல், வலதுகுறைந்த நிலையிலுள்ள பிள்ளைப் பிறப்பைத் தவிர்த்தல், உளச் சுகாதாரத்தைத் தடுத்தல், அமைதியான பரிபூரணமான ஒரு சமூகத்தை உருவாக்குவதற்காக சமூக அசைவூட்டத்தை வலுப்படுத்தல், அத்துடன் வளங்களை ஒருங்கிணைப்பதன் ஊடாக குறித்த பிரிவுகளினுள் நோய்நொடிகளுக்கு

உள்ளாகும், வலது குறைந்த நிலையிலுள்ள, தங்கியிருக்கும் நிலை மற்றும் மரணமடையும் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைத்தல்.

10. வலதுகுறைந்த நிலையிலுள்ள சிறுவர்களின் கல்வித் திறன்கள், பயிற்சிக்கு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் சிறப்பான உட்கட்டமைப்பு வசதிகள், வளங்களுடன்கூடிய நிலையமொன்று வீதம் நிறுவுதல்.
11. தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய வலதுகுறைந்த இளைஞர் யுவதிகள் அனைவருக்கும் தொழிற்பயிற்சியை பெற்றுக்கொடுப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தல்.
12. வலதுகுறைந்த நிலையிலுள்ள ஆட்கள் அனைவருக்கும் வீடுகளுக்கு, குழாய்வழி குடிநீர், துப்பரவேற்பாட்டு வசதிகளை வழங்குதல்.
13. வலதுகுறைந்த நிலையிலுள்ள ஆட்கள் அனைவரதும் வீடுகளுக்கு மின்சாரம் வழங்குதல்.
14. தொழிலொன்றைப் புரியக்கூடிய வலதுகுறைந்த நிலையிலுள்ள (18/60 வயது) ஆட்களில் 50% வீதமானோருக்கு பயனுறுதிவாய்ந்த, பொருத்தமான வேலைவாய்ப்புகளை வழங்குதல்.
15. வலது குறைந்த நிலையிலுள்ள ஆட்களின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் இடையீட்டை வலுப்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்குமான ஆதரித்து வாதாடும் குழுவொன்றைப் பயிற்றுவித்து நிறுவுதல்.
16. வலதுகுறைந்த நிலையிலுள்ள ஆட்களுக்கும் வயதுமுதிர்ந்த ஆட்களுக்கும் அணுகத்தக்க வசதிகளுடன்கூடிய போக்குவரத்து வசதிகளை 50% ஆல் அதிகரித்தல்.
17. பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கான செயற்பொறுப்பும் அதற்கவசியமான திறன்களும் பற்றி சமூக சேவை அலுவலர்களைப் பயிற்றுவித்தல்.

2.16 கலாசாரப் பிரிவு

சிறப்பான அடைவுகள்

01. பல்வேறு கலைத்துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய தரவுத் தளத்தை இற்றைவரைப்படுத்தல்.
02. பதிவுசெய்யப்பட்ட செயற்படுநிலையிலுள்ள கலைக்கூடங்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய தரவுத் தளத்தை இற்றைவரைப்படுத்தல்.
03. உதவி தேவைப்படும் கலைஞர்களின் தகவல்கள் அடங்கிய தரவுத்தளத்தை இற்றைவரைப்படுத்தல்.
04. பிரதேச வாரியாகவும் மாவட்ட வாரியாகவும் கலைஞர்களின் நலனோம்பல் மற்றும் கலை நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு பிரதேச மற்றும் மாவட்ட கலாசார மையங்களை ஊக்குவித்தல்.
05. கொவிட் பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியிலும் வெகு சிறப்பாக அனைத்து பிரதேச செயலக மற்றும் மாவட்ட மட்டத்தில் கலாசார விழாக்களை நடாத்துதல்.

சவால்கள்

01. வழங்கப்படும் நிதி ஏற்பாடு போதியதாக இராமை.
02. அலுவலர்களுக்கான தொழில்நுட்ப உபகரணங்கள் போதியதாக இராமை.
03. அலுவலர்களின் தொழில் திருப்திநிலையை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டமொன்று காணப்படாமை.
04. அலுவலர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் நடவடிக்கைமுறையொன்று காணப்படாமை.

05. போதியளவான பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்று வழங்கப்படாமை.

எதிர்கால இலக்குகள்

01. பாடசாலைப் பிள்ளைகளிடத்தில் கலை இலக்கியத்தின்பால் கவன ஈர்ப்பை ஏற்படுத்துதல்.
02. கலைஞர்களின் நலனோம்பல் நடவடிக்கைகளை முன்னேற்றுதல்.
03. கலை இலக்கியத்தை அரச சேவையிலும் சமூகத்திலும் வெகுவாக வேரூன்றச்செய்தல்.

2.17 வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு

சிறப்பான அடைவுகள்

01. வெளிநாடு செல்லும் நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு புலம்பெயர்ந்த குடும்பங்களுக்கு அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்தல்.
02. கொவிட்-19 ஆபத்து குறைந்த பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக புலம்பெயர்ந்த குடும்பங்களின் பிள்ளைகளின் பாதுகாப்பு, போதையூட்டும் ஒளடத தடுப்பு பற்றிய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

<u>சவால்கள்</u>

01. கொவிட்-19 அனர்த்த நிலைமையின் கீழ் அலுவலர்களுக்கு பயனாளிகளை ஒன்றுதிரட்ட முடியாதுள்ளமை, அலுவலர்களுக்கு களத்திற்குச் சென்று தகவல்களைத் திரட்ட முடியாதுள்ளமை.
02. அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நிதிஏற்பாடு போதியதாக இராமை.
03. இணைய, கணினி வசதிகள், தொலைபேசி வசதிகள் இன்மை.
04. அலுவலர்களின் எதிர்மறையான மனப்பாங்குகள்.
05. சமூக ரீதியாக மக்கள் மத்தியில் காணப்படும் தங்கிவாழும் மனோநிலை.
06. அபிவிருத்தித் திட்ட முறைமையை கருத்துரு ரீதியாக அதிநகர்ப்புறங்களில் அமுல்படுத்த முடியாதுள்ளமை.

எதிர்கால இலக்குகள்

1) வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு பயிற்றப்பட்ட உழைப்பாளர்களை அனுப்புதல்.
2) குடும்பங்களுக்கு அபிவிருத்தித் திட்டங்களை மிகவும் வெற்றிபெறச் செய்தலும் நிதிஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளலும்.
3) மீண்டும் மீண்டும் வெளிநாடு செல்வதைத் தடுத்து மீண்டும் சமூகமயப்படுத்தல்.
4) புலம்பெயர் உழைப்பாளர்களுக்கு ஏனைய நிறுவனங்கள்மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உதவுதல்.
5) புலம்பெயர் உழைப்பாளர்கள் பற்றிய தரவுத் தளமொன்றை அமைத்தல்.

2.18 போதையூட்டும் ஔடதங்கள் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு/ வெளிநிலைச் சேவைகள் பிரிவு (தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை)

சிறப்பான அடைவுகள்

- விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை பரந்த துறைகளினூடே அமுல்படுத்தல்.
- பாடசாலைப் பிள்ளைகள்/அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளை அறிவுறுத்தல்.
- பெற்றோரை அறிவுறுத்தல்.
- பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - அரச அலுவலர்கள்/சட்டவினைப்படுத்துகை அலுவலர்கள், பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர் பயிற்சிகள்
- இளைஞர் படையணியுடன் இணைந்து போதையூட்டும் ஔடத பாவனையும் சேவைநாடுநர்களை தொழிற்பயிற்சி ஆற்றுப்படுத்தலும்.
- மருத்துவமனைகளிலுள்ள உளமருத்துவ பிணியாய் நிலையங்களுக்கு தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் அலுவலர்களை ஈடுபடுத்தல்.
- சமுதாய அடிப்படையிலான சிகிச்சை பற்றிய விழிப்பூட்டல் - அரச அலுவலர்கள்/சமுதாய
- பிரதேச போதையூட்டும் ஔடத தடுப்புக் குழுக்களையும் கிராமிய போதையூட்டும் ஔடதங்கள் தடுப்புக் குழுக்களையும் நிறுவுதல்.
- தோட்டப்புறம் சார்ந்த விழிப்பூட்டல்.

<u>சவால்கள்</u>

- பெருந்தொற்று நிலைமை காரணமாக பெரும்பாலான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நிகழ்நிலையாக (online) மேற்கொள்ளல்.
- சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு வருகைதரும் சேவைநாநாடுநர்களுக்கு நிலையங்களில் இடவசதியைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை.
- சேவையின் கேள்விக்கு ஏற்றவாறு அலுவலர்களும் தொழில்நுட்ப உபகரணங்களும் போதியதாக இராமை.
- நிதி ஏற்பாடுகள் இன்மை.

எதிர்கால இலக்குகள்

- மாவட்ட போதையூட்டும் ஔடத தடுப்பு மற்றும் நடவடிக்கைக் குழுவை நிறுவுதல்.
- ஆலோசனை சேவையை விஸ்தரித்தல்.
- அடையாளம் காணப்பட்ட ஆபத்தான வலயங்களில் சிகிச்சை நிலையங்களை நிறுவுதல்.
- சிறையிடப்பட்டுள்ள சேவைநாடுநர்களுக்கும் சமுதாய சீர்திருத்த உத்தரவுபெறுநர்களுக்கும் ஆலோசனை வழங்கலை விஸ்தரித்தல்.
- தொடர் மாடி வீடுகள் சார்ந்த விசேட போதையூட்டும் ஔடத தடுப்பு வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தல்.
- சமுதாய அடிப்படையிலான சிகிச்சையளிப்பு சார்ந்த இலக்குகளை எய்துதல்.
- தொடர் பிற்பாதுகாப்புச் செயன்முறை.

2.19 சுற்றாடல் பிரிவு

சிறப்பான அடைவுகள்

- மாவட்ட சுற்றாடல் குழு.

கொவிட்-19 பெருந்தொற்று மிகத் துரிதமாக பரவி ஓராண்டாகி இருந்தபோதும் 04 தடவைகள் மாவட்ட சுற்றாடல் குழுவைக் கூட்ட முடிந்தது. அதன்மூலம் மாவட்டத்தில் நிலவிய சுற்றாடல் பிரச்சினைகளையும் சுற்றாடல் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக மேற்கொள்ள முடிந்தது.

- "சுரக்கிமு கங்கா" (ஆறுகளைக் காப்போம்) என்ற நிகழ்ச்சித்திட்டம்

கொழும்பு மாவட்டத்தில் ஆறுகளைக் காப்போம் என்ற கருத்திட்டத்தின் கீழ் களனி கங்கை, பொல்கொட வாவி, அது சார்ந்த கால்வாய் மார்க்கங்களைப் பாதுகாத்தலும் துப்புரவு செய்வதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றிய ஓராண்டாகும்.

அக்கருத்திட்டத்தின் கீழ் மாவட்ட "ஆறுகளைக் காப்போம்" என்ற குழு 04 தடவைகளும் அதற்குரிய 3 உப குடுக்களையும் நடாத்த முடிந்தது. குழுவின் ஊடாக கொழும்பு மாவட்டத்தில் இரண்டு கருத்திட்டங்களை அனுமதிக்க முடிந்தது.

- சீத்தாவக்க பிரதேச செயலாளர் பிரிவின் பன்றிப் பண்ணைகள் மூலம் களனி கங்கையைப் போசிக்கும் வக் ஓயா மாசடைதலைத் தடுப்பதற்கான கருத்திட்டம்.
- கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் களனி கங்கையுடன் வந்திணையும் 04 கால்வாய் மார்க்கங்களின் கழிவுகள் வந்து சேரும் 4 இடங்களை (Waste Tap) நிர்மாணித்தலும் குறித்த கால்வாய்களை அண்டிய வாழும் சமுதாயத்தை விழிப்பூட்டும் கருத்திட்டமும் - நிதி ஏற்பாடு 2.618 மில்லியன் ரூபா.
- கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவின் கருத்திட்டத்தை பூர்த்திசெய்ய முடிந்தமை.

- விசேட தின நிகழ்ச்சித்திட்டம்.
- உலக ஈர நிலங்கள் நிகழ்ச்சித்திட்டம்.
  சீத்தாவக்க தாவரவியல் பூங்காவில் பாடசாலைச் சிறார்களுக்கு "ஈர நிலங்களின் வனப்பு" என்ற தலைப்பில் ஓவியப் போட்டியொன்றையும் தாவரவியல் பூங்காவை கண்டுகளிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றையும் கொவிட்-19 சட்டதிட்டங்களை அனுசரித்து மேற்கொள்ள முடிந்தமை. இதில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
- புவி தினம்
  புவி தினத்தைக் கொண்டாடுமுகமாக பாடசாலைச் சிறார்கள் மத்தியில் கட்டுரைப் போட்டியொன்றை ஒழுங்குசெய்ய முடிந்தமை. இதில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்குதல்.
- உலக சுற்றாடல் தினம்
  கொவிட்-19 மிக வேகமாக பரவிய காலப்பகுதியாதலால், உலக சுற்றாடல் தினத்தையொட்டி தொழில்நுட்பத்தின் ஊடாக பாடசாலைச் சிறார்களுக்கு சுற்றாடல் வினா-

விடைப் போட்டி நிகழ்ச்சியொன்றை ஒழுங்குசெய்ய முடிந்தது. இதில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கல்.

- உலக சிறுவர் தினம்
  இத்தினத்திற்காக அரச சார்பற்ற ஒரு நிறுவனத்திடமிருந்து அனுசரணை கிடைத்தது. பாடசாலைச் சிறார்களுக்கு விசேடமாக வினா-விடைப் போட்டி நிகழ்ச்சியொன்றை ஒழுங்குசெய்ய முடிந்தது. இதில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கல்.

- மரநடுகை நிகழ்ச்சித்திட்டங்கள்:
  - அத்திடிய ஈர நிலத்தில் 300 சதுப்பு நிலத் தாவரங்களை நடுதல்.
  - "ஹுஸ்ம தென துரு" (சுவாசம் தரும் விருட்சங்கள்) என்ற பெயரிலான மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்தை மாவட்டத்தின் 13 பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமுல்படுத்தலும், மாவட்டத்தின் பாடசாலைகள் சிலவற்றிலும் வெற்றிகரமாக அமுல்படுத்தலும்.
  - "நாகரிக்க துரு உயன்" (நகரத் தாவரப் பூங்காக்கள்) என்ற நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்.
  - நாடுபூராவும் மரநடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்தின் 05 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 730,200.00 ரூபா நிதி ஏற்பாட்டின் கீழ் மரநடுகை நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்த முடிந்தது.
  - பசுமை தொழில்முயற்சியாண்மை ஊக்குவிப்பு மூலம் சுற்றாடல் பேணல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் 04 நாற்று மேடைகளுக்கு நிதிஒதுக்கீடுசெய்து வழங்கல்.
  - "கொஸ் துரு" (பலா மரங்கள்) என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 05 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இலவசமாக 300 பலா மரக் கன்றுகளும் மஹரகம பிரதேச செயலாளர் பிரிவுக்கு 300 மரக்கன்றுகளும் (67,000 ரூபா நிதிஒதுக்கீடு) வழங்கப்பட்டுள்ளது.
- பெல்லன்வில – அத்திடிய சரணாலயத்தைப் பாதுகாப்பதற்கு விசேட குழுவொன்றை அமைக்க முடிந்தமை. அதன் கீழ்,
  - ஈர நிலங்களைப் பாதுகாப்பதற்குரிய நிலஅளவை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
  - ஈர நிலங்களைப் பாதுகாப்பதற்காக கால்வாய்களை அமைத்தல்.
  - ஈர நிலங்களைப் பாதுகாப்பதற்கு அனுமதியற்ற காணி மீட்டல்களையும் அனுமதியற்ற காணி பிடித்தல்களையும் நிறுத்துவதற்கு

  இக்குழுவின் ஊடாக வெற்றிகரமாக நடவடிக்கை எடுக்க முடிந்தமை.
- நீர் மார்க்கங்கள் ஊடாக கடலுக்கும் சமுத்திரத்திற்கும் ஒன்றுசேரும் கழிவுப்பொருள்களைக் கட்டுப்படுத்துவதற்கான கொழும்பு மாவட்டக் குழு.
  இக்குழுவும் 04 தவணைகளை வெற்றிகரமாக கூடியது. அதன்மூலம் சம்பந்தப்பட்ட திறத்தர்வர்களுடன் கால்வாய் மார்க்கத்தை துப்புரவுசெய்வதற்கான வழிமுறைகள் பின்பற்றப்பட்டன. அதன்மூலம் சமுத்திரத்திற்கும் கரையோரத்திற்கும் ஒன்றுசேரும் கழிவுப்பொருள்களை ஓரளவு குறைத்துக்கொள்ள முடிந்தது.

- மாவட்ட சுற்றாடல் முறைப்பாடுகளைப் பரிசோதித்து தீர்வுகளை வழங்குதலும் சுற்றாடல் மாசுறலைக் கட்டுப்படுத்தலும். கொழும்பு மாவட்டத்தின் பெருமளவான சுற்றாடல்சார் பிரச்சினைகள் பற்றி ஆண்டுமுழுவதும் முறைப்பாடுகள் கிடைக்கின்றன. அவற்றில் அநேகமானவற்றுக்கு வெற்றிகரமான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க முடிந்தது.

சவால்கள்

- கொவிட் அனர்த்த நிலைமையின் கீழ் அலுவலர்களுக்கு வெளிக்கள விஜயங்களை மேற்கொண்டு தகவல்களைத் திரட்டிக்கொள்ள முடியாதுள்ளமை.
- அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நிதிஏற்பாடுகள் இன்மை.
- இணையம், கணினி வசதி, தொலைபேசி வசதி, ஆவணங்கள் மற்றும் பொருள்கள் இன்மை.
- சுற்றாடல் முறைப்பாடுகள் குறித்து ஆராய்வதற்கு அவசியமான போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதிலுள்ள சிரமங்கள்.

எதிர்கால இலக்குகள்

- **ஈரநிலங்களைப் பேணிக் காத்தல்**

  கொழும்பு மாவட்டத்தின் பொல்கொட சுற்றாடல் பேணல் பகுதி, பெல்லன்வில-அத்திடிய ஈரநிலம், ஸ்ரீ ஜயவர்தனபுர வனசீவராசிகள் சரணாலயம், தலங்கம வாவி சுற்றாடல் பேணல் பிரதேசம் போன்ற சுற்றாடல் வலயங்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தலும் சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்களை கடுமையாக அமுல்படுத்தலும் தேவைப்படும் பட்சத்தில் புதிய சட்டவாக்கங்களை மேற்கொள்ளலும்.
- மாவட்டத்தில் காணக்கூடிய சுற்றாடல் பிரச்சினைகளையும் சுற்றாடல் மாசுறல் நிலைமைகளையும் கட்டுப்படுத்துவதற்கு பிரதேச மற்றும் கிராமியக் குழுக்களை உரிய முறையில் அமுல்படுத்தல்.
- மாவட்டத்தின் உள்ளூர் அதிகாரசபைகளுடன் இணைந்து கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
  உதாரணமாக: E-WASTE இலத்திரனியல் கழிவுப்பொருள்களைச் சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டம்.
- "சுரக்கிமு கங்கா" (ஆறுகளைக் காப்போம்) என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் கருத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- "ஹரித்த ஸ்ரீலங்கா" (பசுமையான இலங்கை) என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டம் பூராவும் மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்களையும் ஆக்கிரமிப்புத் தாவரங்களை அகற்றும் நிகழ்ச்சித்திட்டங்களையும் அமுல்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

2.20 மனித வள அபிவிருத்திப் பிரிவு

சிறப்பான அடைவுகள்

- தொழிற்பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து அவர்கள் அனைவருக்கும் பயிற்சி நிறுவனங்களை அல்லது தொழிலொன்றைத் தேடிப் பெற்றுக்கொள்வதற்கு உதவுதல்.
- கொழும்பு மாவட்டத்தில் சாதாரண தரம் சித்தியடையாத அனைத்துப் பிள்ளைகளதும் (7894) தகவல்களைச் சேகரித்தல், அவர்களை உரிய தொழில் மார்க்கமொன்றில் வழிநடாத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல்.
- 2 பிராந்திய தொழிற்சந்தைகளும் 4 நிகழ்நிலை நிகழ்ச்சிகளும் பிராந்திய தொழிலை எதிர்பார்த்துள்ளவர்களை இலக்காகக்கொண்டு மிகவும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டுள்ளது.
- தொழில் வாரம் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக 5 போட்டிகர துறைகளுக்கு சுமார் 2,700 போட்டியாளர்களை கொவிட் பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியிலும் அனுப்பிவைக்க வாய்ப்புக் கிடைத்தமை.
- நிகழ்நிலையாக அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் தொழில் எதிர்பார்த்துள்ளவர்கள் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.
- தொழில் மையத்திற்கு வருகைதரும் தொழிலை எதிர்பார்த்துள்ள அனைவருக்கும் தொழில் வழிகாட்டல்களை வழங்குதல்.
- சாதாரண தர மாணவர்களுக்கும் உயர்தர மாணவர்களுக்கும் நிகழ்நிலை தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல்.
- தொழில் நிறுவனங்களில் நிலவும் பதவி வெற்றிடங்கள் பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொண்டு அத்தகைய பதவி வெற்றிடங்களுக்குப் பொருத்தமான அபேட்சகர்களை ஆற்றுப்படுத்துதல்.

சவால்கள்

- நிகழ்நிலை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும்போது பல்வேறு தொழில்நுட்பப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடுதல்.
- தொழிலை எதிர்பார்த்துள்ள அநேகமானவர்கள் அரசாங்கத் தொழிலொன்றை எதிர்பார்த்திருத்தல், வெளிக்கள தொழில்களுக்கு அனுப்பிவைக்காமை, திறமை அடிப்படையிலான தொழில்களுக்கு அதிக கேள்வி நிலவியபோதும், திறமை அடிப்படையிலான தொழில்களை எதிர்பார்த்துள்ளவர்கள் குறைவாக இருத்தல். (உதாரணம்: மின்தொழில்நுட்பவலர்கள், நீர்க்குழாய் பொருத்துநர்கள்.)
- தொழிலை எதிர்பார்த்துள்ளவர்கள் எதிர்பார்க்கும் தொழிலை தேடிப் பெற்றுக்கொடுத்தல்.

எதிர்கால இலக்குகள்

- 2022 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்தில் 4 தொழிற்சந்தைகளையும் 2 வாழ்க்கைத் தொழிற்சந்தைகளையும் ஒழுங்குசெய்து தொழிலை எதிர்பார்த்துள்ள அதிகமானவர்களை தொழில்களின்பால் வழிப்படுத்துவதன் ஊடாக வேலைவாய்ப்பின்மையைக் குறைப்பதற்கு பங்களிப்புச் செய்தலும் திறமையுள்ள தொழிலை எதிர்பார்த்துள்ளவர்களை உருவாக்குவதற்கு வழிகாட்டுதலும்.
- 2 முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- 25 தொழில்முயற்சியாளர்கள்/சுயதொழில்புரிவோரை உருவாக்குதல்.
- தொழில் வெற்றிடங்களை அடையாளங்கண்டு 600 தொழிலை எதிர்பார்த்துள்ளவர்களை தொழில்களுக்கு ஆற்றுப்படுத்தலும் 300 தொழில் திசைமுகப்படுத்தலை எய்த வேண்டும்.

- திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்படும் ஜனாதிபதி/பிரதம அமைச்சர் அலுவலகங்களுக்கு தொழில் நாடி கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு வாழ்க்கைத் தொழில் வழிகாட்டலை வழங்குதலும் தொழில்களுக்கு ஆற்றுப்படுத்தலும்.

2.21 மகளிர் அபிவிருத்திப் பிரிவு

சிறப்பான அடைவுகள்

கொவிட்-19 பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியிலும் பின்வரும் வெற்றிகளை அடைந்துகொள்ள முடிந்தது:

- வெளிநாடு செல்ல எதிர்பார்க்கும் பெண்களை மாற்று வருமானங்களை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கருத்திட்டங்களில் ஈடுபடுத்தல்.
- பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு நடமாடும் விற்பனைக் கூடங்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் 2021 இன் கீழ் நடமாடும் விற்பனைக்கூடங்களை வழங்க முடிந்தமை.
- பெண் குடும்பத் தலைவிகளை பொருளாதார, சமூக ரீதியாக வலுவூட்டுவதற்கு சுயதொழில் உதவிகளை வழங்குதல்.
- பால்நிலை அடிப்படையிலான துன்புறுத்தல்களைத் தடுத்தல் பற்றி அறிவுறுத்தும் 14 நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்த முடிந்தமை.
- அடையாளம் காணப்பட்ட பொருளாதார ரீதியாக வலுவூட்டப்பட வேண்டிய பெண்களுக்காக தயார்செய்யப்பட்ட கருத்திட்ட அறிக்கைகளில் சிலவற்றுக்கு அல்லது போதிய நிதி ஏற்பாடு கிடைத்தலும் அவர்களை சுயதொழில்களில் ஈடுபடுத்த முடிந்தமையும்.
- இல்லத்து வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் தற்காலிகமாக தங்குமிடமளித்து அவசியமான உதவிச் சேவைகளை வழங்கக்கூடியதாக இருந்தமை.
- பெண்களை பொருளாதார, சமூக ரீதியாக வலுவூட்டுவதற்காக வருமான உருவாக்குகை மார்க்கங்களின்பால் தூண்டுவதற்கான நிகழச்சித்திட்டங்களை அமுல்படுத்த முடிந்தமை.
- கொவிட்-19 பெருந்தொற்று நிலைமையின் கீழ் இம்மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்ட தொடர்மாடி வீடுகளில் வசிக்கும் பெண்களதும் சிறுவர்களதும் மனத்தாக்கலைவைத் தணித்துக்கொள்வதற்கு நிகழ்நிலை சித்திரப் போட்டியொன்றை நடாத்துதலும் அத்தகைய பிள்ளைகளுக்கு கல்வி உபகரணங்களைப் பகிர்ந்தளிக்க முடிந்தமையும்.
- பல்வேறு தலைப்புகளில் பெண்களை அறிவுறுத்துவதற்கான ஏராளமான நிகழ்ச்சித்திட்டங்களை நிகழ்நிலை ஊடாக நடாத்த முடிந்தமை.

<u>சவால்கள்</u>

1. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமை காரணமாக,
   - பெண்களின் சுயதொழில் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதிலுள்ள சிரமம்.
   - பெண்களின் அத்தியாவசிய உணவுப் பொருள் தேவையை நிறைவேற்றுதல்.
   - மகளிர் அமைப்புக்கள் ஒன்றுகூட முடியாத நிலை.

2. பெண்களுக்கு ஏற்படக்கூடிய துன்புறுத்தல் சம்பவங்கள்/வன்செயல்களின்போது மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள் என்ற வகையில் தலையீடு செய்யும்போது முறையான அதிகாரம் காணப்படாமை காரணமாக அலுவலர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாதலும் அவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படுதலும்.
3. இல்லத்து வன்முறைக்கு உள்ளான பெண்கள் பற்றிய உண்மைச் சம்பவங்கள் அலுவலர்களுக்கு அறிவிக்கப்படாமை.
4. அடையாளம் காணப்பட்ட பொருளாதார ரீதியாக வலுவூட்டப்பட வேண்டிய பெண்களுக்கு கருத்திட்ட அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டபோதும், அவற்றில் சிலவற்றுக்கு மட்டும் நிதிஏற்பாடு கிடைத்தல், (நிதிஒதுக்கீடுகள் இன்மை.)
5. வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கு சிற்றளவு கடனுதவி (சுழல் கடன்) ரூ.5,000/- முதல் 30,0000/- வரை) வழங்கப்பட்டபோதும், அதையும் தாண்டி நிதிநிறுவனங்கள் கடன் வழங்கும்போது விதிக்கப்படும் கடுமையான கடன் நிபந்தனைகளின் மூலம் பெண்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கல் (அரச ஊழியர் பிணை போன்ற...)
6. கடந்த கால அரசாங்கங்கள் பல்வேறு சுயதொழில் கடன் திட்டங்களை காலத்திற்குக் காலம் அறிமுகப்படுத்தியபோதும், மிகச் சிறிய மட்டத்தில் ஆரம்பித்து நடாத்திச் செல்லப்படும் பெண்களுக்கான அக்கடன் திட்டங்களிலிருந்து கடன் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளமை.

எதிர்கால இலக்குகள்

- பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- பெண்களை பொருளாதார, சமூக ரீதியாக வலுவூட்டுதல்.
- உண்மையாக இடம்பெறும் இல்லத்து வன்முறைகள்/துன்புறுத்தல்கள் குறித்து அறிவிப்பதற்கு அவசியமான ஒரு வேலைத்திட்டத்தை வகுத்தல்.
- பெண்களை சுயதொழில்களில் ஈடுபடுத்துவதன் ஊடாக குடும்ப அலகைப் பலப்படுத்தலும் நாட்டின் பொருளாதாரத்திற்கு அவளது பங்களிப்பை குறிப்பிடத்தகு மட்டத்தால் அதிகரித்தலும்.
- பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக 13 சுயதொழில் விற்பனைச் சந்தைகளை ஒழுங்குசெய்தல்.
- பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் மாகாண சபை நிதி ஏற்பாடுகளிலிருந்து குறித்த ஒரு சதவீதத்தை பெண்களை நேரடியாகவே சுயதொழில்களில் ஈடுபடுத்துவதற்கென்றே ஒதுக்குதல்.

2.22 முன்சிறுவர் பராய அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புப் பிரிவு

சிறப்பான அடைவுகள்

1. முன் சிறுவர் பராயத்திலுள்ள பிள்ளைகளின் எல்லா விதமான போசாக்குப் பற்றாக்குறைகளையும் குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.
2. முன் சிறுவர் பராய பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை சமூகத்தில் உறுதிப்படுத்துவதற்காக அனைத்து விதமான நிகழ்ச்சித்திட்டங்களையும் அமுல்படுத்துதல்.
3. கர்ப்பிணித் தாய்மார் அனைவருக்கும் போசாக்கு உணவுப் பொதியொன்றை வழங்குதல்.

4. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியில் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் தொடர் மாடி வீடுகளில் வசிக்கும் முன்சிறுவர் பராயத்திலுள்ள பிள்ளைகளின் உளச் சுகாதாரத்தை நலமாகப் பேணுவதற்கு அவசியமான கற்றல் உபகரணங்களை வழங்குதல்.
5. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமையைத் தொடர்ந்து முன்சிறுவர் பராயத்தவர்களை முன்சிறுவர் பராய அபிவிருத்தி நிலையங்களுக்கு வரும்போது பிள்ளைகளுக்கு துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்குவதற்காக முன்சிறுவர் பராய அபிவிருத்தி நிலையங்களுக்கு தண்ணீர் பேசின்களையும் துப்புரவேற்பாட்டுப் பொருள்களையும் வழங்குதல்.

சவால்கள்

1. கர்ப்பிணித் தாய்மார் அனைவருக்கும் போசாக்குப் பொதியை வழங்குவதை ஒரு கருத்திட்டமாக அமுல்படுத்தும்போது பொருளாதார ரீதியில் ஆற்றலுள்ளவர்களுக்கு இது வழங்கப்பட்ட -போதும், அவர்கள் அதனை உரிய முறையில் பயன்படுத்தாமை.
2. முன்சிறுவர் பாராயத்தைச் சேர்ந்தவர்கள் இக்காலப்பகுதியினுள் வீட்டில் அடையுண்டு கிடக்கும் நிலையில் பிள்ளைகளுக்கு முறையான கற்றல் அனுபவங்களைப் பெற்றுக்கொள்வது தாமதமடைதல்.
3. முன்சிறுவர் பராய அபிவிருத்திக் கட்டத்தில் பிள்ளைகளில் ஏற்படும் விருத்திச் செயன்முறையின் தாக்கம் பற்றி சம்பந்தப்பட்ட திறத்தவர்களுக்கு அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்க முடியாமை. (பெற்றோர்/பாலர் பாடசாலை ஆசிரியர்கள்)
4. விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களில் பிள்ளைகளின் பெற்றோர் கலந்துகொள்ளாமை.
5. சிறுவர் நட்புறவான விளையாட்டுக்களை அடிப்படையாகக்கொண்ட கல்வி முறை பற்றி பாலர் பாடசாலை ஆசிரியர்கள் பயிற்றப்பட்டிருந்தபோதும், பிரயோக ரீதியாக அதனைப் பரீட்சித்துப் பார்ப்பதில்லை. அது தொடர்பில் சட்டரீதியாகவேனும் செயலாற்றுவதற்கான அதிகாரம் இன்றியிருத்தல்.

எதிர்கால இலக்குகள்

1. முன் சிறுவர் பராய அபிவிருத்தி பற்றிய தேசிய செயலகத்தினால் அனுமதிக்கப்பட்ட பாலர் பாடசாலைகள் பற்றிய தேசிய கொள்கையையும் முன் சிறுவர் பராய பாதுகாப்பும் அபிவிருத்தியும் பற்றிய தேசிய கொள்கையையும் கொழும்பு மாவட்டத்தின் எல்லாப் பாடசாலைகளிலும் அமுல்படுத்துதல்.
2. எடை குறைந்த பிள்ளைப் பிறப்புகளைக் குறைப்பதற்கு அத்தியாவசிய (அதிக ஆபத்தான நிலையிலுள்ள மற்றும் தீவிர பொருளாதார சிரமங்களிலுள்ள) கர்ப்பிணித் தாய்மாருக்கு மட்டும் போசாக்குப் பொதிகளை வழங்குதல்.
3. பிள்ளைகளின் குறையூட்ட நிலையைக் குறைக்கும் அதிகாலை உணவு வேளையைக் கோரும் எல்லா பாலர் பாடசாலைப் பிள்ளைக்கும் வழங்குதல்.
4. முன் சிறுவர் பராயத்திலுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் விளையாட்டுக்களை அடிப்படையாக் கொண்ட ஒரு முறையின் ஊடாக தமது ஆற்றல்களை எடுத்துக்காட்டக்கூடிய விதத்திலான அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய ஒரு சூழலைக் கட்டியெழுப்புதல்.

5. முன் சிறுவர் பராயத்தைக் கடக்கும் ஒவ்வொரு பிள்ளையும் விளையாட்டு அடிப்படையிலான ஒரு முறையின் மூலம் தமது ஆற்றல்களை மெருகூட்டிக்கொள்ளக்கூடிய விதத்தில் அனுபவங்களை வழங்கக்கூடிய ஒரு சூழலை ஏற்படுத்தல்.

2.23 இணக்கப்பாட்டு பயிற்சி அலுவலர் (நீதி அமைச்சு)

சிறப்பான அடைவுகள்

1. ஏற்கனவே இணக்கச் சபைக்கு விசேட படிவமொன்றை அறிமுகப்படுத்தி தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு விசேட முறைமை அமுல்படுத்தப்படல்.
2. போதியளவான நிதி ஏற்பாட்டை இணக்கச் சபைக்கு பெற்றுக்கொடுத்தல்.

சவால்கள்

1. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமை காரணமாக இணக்கச் சபைகளின் செயற்பாடு முடங்கிய நிலையில் இருத்தல்.
2. இணக்கச் சபையை மீள ஆரம்பிக்கும்போது இணக்கப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு போதிய உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படாமை. முக்கியமாக ஒன்றுகூடும் இடமாக பாடசாலைகள்/ பன்சாலைகளைப் பெற்றுக்கொள்ளும்போது பெருந்தொற்று நிலைமை காரணமாக நடைமுறைப் பிரச்சினைகள் எழல்.

எதிர்கால இலக்குகள்

எல்லா நிலைகளிலும் பயன்கூர், பொறுப்பான, முழுநிறைவான ஒரு நிறுவனமாக இணக்கச் சபைகளை கட்டியெழுப்புதல்.

2.24 சிறுவர் உரிமைகள் மேம்பாட்டுப் பிரிவு

சிறப்பான அடைவுகள்

- கொவிட்-19 பெருந்தொற்று நிலைமை காரணமாக நாளாந்த வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் போசாக்குத் தேவைகளுக்கு நிவாரணமளித்தல்.
- பாடசாலைகள் மூடப்பட்டதன் காரணமாக பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை இணையம் வழியேயும் தொலைக்கல்வி முறையின் மூலமும் வழங்குவதற்கு ஒத்தாசை அளித்தல்.
- கொவிட்-19 பெருந்தொற்று நிலைமை காணப்பட்ட காலப்பகுதியிலும்கூட ஆபத்தான நிலையிலுள்ள பிள்ளைகள் இருக்கின்ற குடும்பங்களுக்கு சிறுவர் பாதுகாப்புத் திட்டங்களைத் தயாரித்து அமுல்படுத்தலும் கண்காணித்தலும்.
- சிறுவர் உரிமைகள் பட்டயத்தை அமுல்படுத்தும் பல்வேறு நிகழ்ச்சித்திடடங்களை அதாவது கிராமிய, பிரதேச மற்றும் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக்களை அமுல்படுத்தல்.

- சிறுவர்களின் கல்வி உரிமையைப் பாதுகாப்பதற்காக பொருளாதார சிரமங்களுள்ள சிறுவர்களுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக பல்வேறு கல்விச் சகாய திட்டங்களை அமுல்படுத்தல்.
- பொருளாதார சிரமங்களுள்ள, தேவையுள்ள சிறுவர்களுக்கு மருத்துவ உதவி, போசாக்கு உதவி, இரட்டைக் குழந்தை உதவி மற்றும் திடீர் விபத்து உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- சிறுவர்களின் பங்கேற்பு உரிமையைப் பாதுகாப்பதற்காக சிறுவர் கழகங்களை நிறுவுதல், அவற்றை முனைப்பாக முன்னெடுத்துச் செல்லல், பிரதேச மற்றும் மாவட்ட சிறுவர் சபையை நிறுவுதலும் முனைப்பாக முன்னெடுத்துச் செல்லலும்.
- சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் உரிமைகள், பாதுகாப்பான குடும்பம், வளரிளம் பராயம், போதையூட்டும் ஔடதங்களின் பாவனை, கொவிட்-19 தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்களதும் அவர்தம் பெற்றோரதும் மனத் துன்புறுத்தல் நிலையைத் தணித்தல் போன்ற தலைப்புக்களில் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- கொவிட்-19 பெருந்தொற்று நிலைமை காரணமாக அநாதரவான நிலைக்குத் தள்ளப்பட்ட சிறுவர் இல்லங்களில் இருக்கின்ற பிள்ளைகளுக்கு நிவாரணமளித்தல்.
- கொவிட்-19 பெருந்தொற்று நிலைமை காரணமாக நீண்டகாலம் தனிமைப்படுத்தப்பட்டிருந்த முதியோர் இல்லங்களில் இருக்கின்ற சிறுவர்களுக்கு நிவாரணமளித்தல்.
- உலக சிறுவர் தினத்தையொட்டி ஓரிலட்சம் பலாமரக் கன்றுகளை நடும் கருத்திட்டத்தை கொழும்பு மாவட்டத்தில் அமுல்படுத்தல்.
- கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக மரணித்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு கல்வி மற்றும் போசாக்கு உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

<u>சவால்கள்</u>

- கொவிட்19 பெருந்தொற்று நிலைமை காரணமாக எதிர்பார்த்த நோக்கங்கள் யாவற்றையும் நிறைவேற்றிக்கொள்வதில் சிரமங்கள் காணப்படல்.
- கோரிக்கைகளின் எண்ணிக்கைப்படி வழங்கப்பட்ட நிதியுதவிகள் போதுமானதாக இராமை.
- கொவிட் 19 பெருந்தொற்று நிலைமைக்கு முகங்கொடுத்து கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளமை.
- எதிர்பார்க்கப்பட்ட கடமைகளுக்குப் புறம்பான கடமைகளில் ஈடுபட நேரிடுதல்.
- தற்போதைய நிலைமை காரணமாக பிள்ளைகளுடன் தொழில்நுட்ப முறைமைகள் வழியே கடமையாற்ற நேரிடுதல்.
- பிள்ளைகளின் கல்விப் பிரச்சினைகளுக்கு போதியளவு பங்களிப்பு வழங்க முடியாமல் போதல் (தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குதல் முதலிய)

எதிர்கால இலக்குகள்

- கொவிட்-19 பெருந்தொற்று நிலைமை காரணமாக பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்த பிள்ளைகளுக்கும் குடும்பங்களுக்கும நிவாரணமளித்தல்.
- பெற்றோர், பாதுகாவலர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துதல்.

- சிறுவர் இல்லங்களில் இருக்கின்ற சிறுவர்களுக்கான விசேட விழிப்பூட்டல்களை மேற்கொள்ளல்.
- பாடசாலைப் பிள்ளைகளுக்கான விசேட விழிப்பூட்டல்களை மேற்கொள்ளல்.
- பாடசாலை செல்லாத, இடைக்கிடை பாடசாலைசெல்லும் பிள்ளைகளை அடையாளம் காணலும் அவர்களுக்கான இடையீடும்.
- ஆபத்தான நிலையிலுள்ள பிள்ளைகளை அடையாளம் காணலும் பாதுகாப்புத் திட்டங்களை வகுத்து அமுல்படுத்தலும்.
- வாய்ப்பற்ற பிள்ளைகளுக்கும் சமூகத்திற்கும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- அனைத்துப் பிள்ளைகளதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல்.

2.25 அரச சார்பற்ற அமைப்புக்கள் ஒருங்கிணைப்புப் பிரிவு

சிறப்பான அடைவுகள்

- கொவிட் பெருந்தொற்று காலப்பகுதியில் தேவையுள்ள பொதுமக்களுக்கு நிவாரணங்களை வழங்க முடிந்தமை.
- கொழும்பு மாவட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்கும் நிறுவனங்களைப் பதிவுசெய்தல்.
- இரண்டுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளும், வெளிநாட்டுதவிகள் கிடைக்கும் நிறுவனங்களை தேசிய மட்டத்தில் பதிவுசெய்வதற்கான சிபார்சுகளை வழங்குதல்.
- அரச சார்பற்ற அமைப்புக்கள் பற்றிய தேசிய செயலகத்தில் பதிவுசெய்துகொண்டுள்ள அரச சார்பற்ற அமைப்புக்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் மேற்பார்வைசெய்தல், வெளிநாட்டவர்களுக்கு வேலை அனுமதிப்பத்திரங்கள், உட்புகும் வதிவிட வீசாக்களுக்கான சிபார்சுகளை வழங்குவதற்கு முன்வைத்தல், குறித்த நிறுவனங்களின் வருடாந்த வேலைத்திட்டத்தையும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளையும் அனுமதிக்காக சமர்ப்பித்தல்.

சவால்கள்

- அலுவலர் ஒருவர் போதாமை.
- நோக்கெல்லைக்கு உட்பட்ட ஏனைய அமைச்சுக்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையிலான இடைத் தொடர்பைக் கட்டியெழுப்பிக்கொள்வதிலுள்ள சிரமம்.

எதிர்கால இலக்குகள்

நாட்டின் பேண்தகு அபிவிருத்தியில் அரச சார்பற்ற அமைப்புக்களை முக்கிய அபிவிருத்திப் பங்கீடுபாட்டாளர்களாக மாற்றுவதற்கு தற்போது தேசிய கொள்கைப் பணிச்சட்டகத்தினுள் தேவைப்படும் வழிகாட்டல்களையும் ஒருங்கிணைப்பையும் வழங்கும் சிறப்புநிலை மையமாக விளங்குதல்.

2.26 தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவு

சிறப்பான அடைவுகள்

- அரச அலுவலர்களையும் சிவில் சமூகத்தவரையும் மொழி அறிவில் சிறந்தவர்களாக்குவதற்கு மொழி விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.
- சகவாழ்வுச் சங்கங்களின் அங்கத்தவர் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக கருத்திட்டங்களை அமுல்படுத்துதல்.

சவால்கள்

- கொவிட்-19 அனர்த்த நிலைமையின் கீழ் அலுவலர்களுக்கு பயனாளிகளை ஒன்றுதிரட்ட முடியாமையும் வெளிச் சென்று தகவல்களை சேகரிக்க முடியாமையும்.
- அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நிதிஏற்பாடுகள் இன்மை.
- அலுவலர்களின் எதிர்மறையான மனப்பாங்குகள்.

எதிர்கால இலக்குகள்

- அரச அலுவலர்களையும் பாடசாலை விட்டுச்சென்ற பிள்ளைகளையும் மொழிக் கல்வியின்பால் ஈடுபடுத்துததல்.
- சகவாழ்வுச் சங்கங்களின் கருத்திட்டங்களுக்கான நிதிஏற்பாடுகளைத் தேடிப் பெற்றுக்கொள்ளல்.
- மொழிற் கற்கை கற்கை மற்றும் பாடநெறிகளின் கணக்காய்வு முறைமையொன்றை வகுத்தல்.

2.27 மாவட்ட ஆலோசனைப் பிரிவு

சிறப்பான அடைவுகள்

- அனைத்து விதமான தனிமனித மனநலம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளையும் நிவர்த்தித்துக் கொள்வதற்கு அவர்கள் வசமுள்ள பலங்களை வளர்த்துக்கொள்வதற்கான விஞ்ஞான ரீதியான வழிகாட்டல்.
- பிரச்சினைக்குரிய நிலைமைகளுக்கு முகங்கொடுத்திருப்பவர்களை அதிலிருந்து மீட்டெடுப்பதற்கு உளச் சிகிச்சை சார் உதவியை வழங்குவதற்கு ஆலோசனை வழங்கும் சிகிச்சை நிலையங்களை நடாத்துதல்.
- விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.
- "சௌபாக்யா" கிராமங்கள் கருத்திட்டத்தின் கீழ் தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டுவதற்கு உளவியல்சார் உதவியை வழங்குதல்.
- கொழும்பு மாவட்டத்தின் போதையூட்டும் ஔடதங்களில் தங்கியிருப்பவர்களுக்கு ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்களையும் சிகிச்சை நிலையங்களையும் அமுல்படுத்தல்.
- சேவைநாடிகளுக்கு தேசிய மட்டத்தில் தரவுத்தளமொன்றைப் பேணிச் செல்லல்.

- சேவைநாடிகளின் பிரச்சினைக்குரிய நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்கு உளவியல்சார் மதிப்பீட்டு அளவுகாட்டியொன்றைப் பாவித்தல்.
- பாடசாலைச் சிறார்கள், ஆசிரியர்கள், அரசாங்க அலுவலர்கள், இளைஞர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களை அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் தொழில்வாண்மையினர் சமூகத்திற்கு உளவியல் விஞ்ஞான நிகழ்ச்சித்திட்டங்களையும் சிகிச்சைக் களங்களையும் நடாத்துதல்.
- போதையூட்டும் ஒளடத ஆலோசனை சேவைக்கு ஆற்றுப்படுத்தப்படும் சேவைநாடிகளுக்கும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் உளவள ஆலோசனைத் தலையீட்டை வழங்குதல்.

சவால்கள்

- தற்போதுள்ள கொவிட் 19 பெருந்தொற்றுக்கு மதியிலும் இலக்கிட்ட நிகழ்ச்சித்திட்டங்களை உரிய முறையில் அமுல்படுத்திக்கொள்வதிலுள்ள பிரச்சினை.
- இலக்குக் குழுக்களை பங்கேற்கச் செய்வதிலுள்ள பிரச்சினைகள்.
- வழக்கமான வளவாளர்களைக் கண்டுபிடிப்பதிலுள்ள பிரச்சினைகள்.

எதிர்கால இலக்குகள்

- பயனுறுதிவாய்ந்த ஒரு நபர் - வெற்றிகரமன ஒரு குடும்பம் என்ற தொனிப்பொருளில் தனி நபர்கள் பிரச்சினைகளுக்கு உள்ளாக முன்னர் அவற்றிலிருந்து மீட்டெடுப்பதற்கு நடவடிக்கை எடுததலும் பொருளாதார ரீதியாக வீழ்ச்சி கண்டுள்ள சமூகத்தை பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக வலுவூட்டுதவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல்.
- பாடசாலைப் பிள்ளைகளின் மனோவேகமுள்ள அறிவை விருத்திசெய்வதன் கீழ் பாடசாலைப் பிள்ளைகளின் கல்விசார் பிரச்சினைகளையும் தொழில்நுட்ப துஷ்பிரயோகத்தையும் தடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- ‘‘சுவபத் சிதக் - சவிமத் தெயக்’ என்ற தொனிப்பொருளின் கீழ் தொற்றா நோய்களுக்குக் காரணமாக அமையக்கூடிய உளச் சுகாதாரப் பிரச்சினைகள், சூழல் மாசுறல், நச்சுக் கலப்புள்ள உணவுகளை உட்கொள்ளல், தவறான உணவுப்பாணிகளை மாற்றியமைத்துக் கொள்ள சமூகத்தை வழிநடாத்தலும் போதைத்தொல்லையில் தங்கியிருப்பவர்களையும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களையும் வலுவூட்டுதலும்.

2.28 மாவட்ட ஊடகப் பிரிவு

சிறப்பான அடைவுகள்

- மாவட்ட செயலகத்தின் facebook பக்கத்தை (District Secretariat-Colombo) இற்றைப்படுத்தி பராமரித்தல்.
- மாவட்டத்தில் இடம்பெறும் அபிவிருத்தி மற்றும் நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான தேவைப்படும் பிரசாரத்தை வழங்குதல்.

- மாவட்டக் குழுக் கூட்டங்களின் ஊடக அறிக்கையிடலும் தேவைப்படும் பிரசாரத்தை வழங்குதலும்.
- ஊடக அலகுக்கு மூலதனப் பொருள்கள் சிலவற்றைப் பெற்றுக்கொள்ளல்.
- பிரதேச செயலகங்களின் ஊடக ஒருங்கிணைப்பு அலுவலர்களிடமிருந்து முனைப்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தமை.

சவால்கள்

- ஊடகப் பணிகளின்போது போக்குவரத்து வசதிகள் கிடைக்காமை.
- நிழற்படப் பிடிப்புக்கு உயர் தரத்திலான கமரா ஒன்று இல்லாமை.
- வீடியோ கமராவொன்று இல்லாமை.
- பெக்ஸ் இயந்திரமொன்று இல்லாமை.

எதிர்கால இலக்குகள்

- YouTube செனல் ஒன்றை உருவாக்குதல்.
- மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு செயலமர்வொன்றை நடாத்துதல்.
- பிரதேச செயலகங்களின் ஊடக இணைப்பு அலுவலர்களுக்கு செயலமர்வொன்றை நடாத்துதலும் பயிற்சி வழங்குதலும்.
- மாவட்ட செயலகத்தின் facebook பக்கத்தை (District Secretariat-Colombo) மிகச் சிறப்பாக முனைப்புடன் பராமரித்தல்.
- வானொலி ஊடகம் வழியே மாவட்டத்தின் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பற்றிய நிகழ்கால தகவல்களை வழங்குதல்.
- மாவட்ட ஊடக அலகை நாட்டின் தாக்கமுள்ள, மிகச் சிறந்த ஊடக அலகாக மாற்றுதல்.
- பத்திரிகைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களில் நேரடியாகவே தகவல்களை அறிக்கையிடுவதற்கு அவசியமான பின்புலத்தை அமைத்துக்கொள்ளல்.

2.29 சமூக பாதுகாப்புச் சபை

சிறப்பான அடைவுகள்


- அரச வலையமைப்பை மீண்டும் பலப்படுத்துதல் (கிராம அலுவலர், சமூர்த்தி அபிவிருத்தி அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் மூலம் ஆட்சேர்ப்புக்களை பலமுடன் மேற்கொள்ளல்.)
- ஏற்கனவே கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 1500 க்கும் மேற்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படல்.
- கொவிட் பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியிலும் தொடர்ந்தும் ஓய்வூதியம் வழங்குதல், செயற்பாடற்ற பங்களிப்புச்செய்வோரை முனைப்பாக்குதல், சமூக பாதுகாப்பு ஓய்வூதிய முறைகளுக்கு பங்களிப்புச் செய்வோரை இணைத்துக்கொள்ளல்.
- "ஆரஸ்ஸாவ" ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 5 வருட புலமைப்பரிசில், க.பொ.த. சாதாரண தரம், க.பொ.த. உயர்தரம் சித்தியடையும்போது விசேட விசேட நன்மைகளைப் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக பயனுறுதிவாய்ந்த கற்றல் பெறுபேறுகளை

சவால்கள்

கொவிட் பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியிலும் மக்களை ஓய்வூதியமும் நன்மைத் திட்டங்களும் பற்றிய விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல்.

எதிர்கால இலக்குகள்

- கலைஞர்களின் ஓய்வூதியத் திட்டத்திற்கு கலைஞர்களை பங்கேற்கச்செய்தல்.



பிரதீப் யசரத்ன
மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்
கொழும்பு நிருவாக மாவட்டம்

அத்தியாயம் 3 - 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான முழுதுமளாவிய நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஎ- எப்

மாவட்ட செயலகம் - கொழும்பு

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2021		குறிப்பு	உண்மை நிலை 2021	திருத்தப்பட்ட 2020	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
